மங்கையரின் மாண்பு

(இலக்கிய ஆராய்ச்சி)

PRESENTED BY
V. PR. PL. M KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

ஆசிரியை:

பண்டிதை திரு. S. கிருஷ்ணவேணி அம்மாள்

முன்னைத் தலைமைத் தமிழாசிரியை

லேடி வில்லிங்டன் உயர்தரக் கலாசாலை,

திருவல்லிக்கேணி

பாகனேரி

வெளியீட்டகம்:

ஆண்டாள் அருளகம்,

45, தெளிசிங்கப் பெருமாள் கோவில் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை-5

பதிப்புரிமை]

[விலை ரூ. 4-0-0

Printed at Royal Printing Works, Mount Road, Madras-2.

சென்னை நகராண்மைக் கழகத் தலைவர்

திருவாளர் - சு. இராமசாமி நாயுடு அவர்களின்

மதிப்புரை

பண்டிதை - திருமதி - கிருஷ்ணவேணி அம்மையாரைத் தமிழ் உலகம் நன்கு அறியும். அவர்கள் தமிழில் இயற்றியுள்ள புத்தகங்கள் பல. எனவே, "மங்கையரின் மாண்பு" என்னும் இப்புத்தகத்தை நான் அறிமுகப் படுத்த முயலுவது மிகையாகும். தமிழ் மொழியிலுள்ள ஆர்வத்தால் ஒரு சிறிது கூறத் துணிகின்றேன்:

அம்மையார் பண்டைய மகளிரின் வாழ்க்கை வரலாறுகளை வழிமுறையுடன் எடுத்துக் கையாண்டிருக்கின்றனர். எந்த நாடும் தத்தம் அறிஞர்களையும், தியாகிகளையும், புலவர் பெருமக்களையும் வாழ்த்தி வணங்குவது மரபு. தொன்மை மிகுந்த தமிழ்நாடு அந்நியர் ஆதிக்கத்தின் காரணமாக இவ்வழக்கு அழிந்து ஒழிந்து நின்றது. இந்தியா விடுதலை அடைந்த பின்னர், சிறப்பாகத் தமிழ் மக்களிடத்து புத்தம் புதிய உணர்ச்சி மேலிட்டு நிற்கின்றது. இந்நிலையில், அம்மையார் தமிழ்நாட்டிற்குப் பண்டைய மகளிரின் பண்புகளைத் தொகுத்துப் புத்தக வாயிலாகத் தந்தது போற்றுதற்குரியது. இப்புத்தகத்தில், மங்கையரின் கல்வி, ஞானம், உயர்வு இவை யாவும் ஒன்று கூடி அவர்தம் குடிமையின் உயர்வை உயர்த்திக் காட்டுகின்றது. இவர்களுடைய உண்மை நிலையைத் தமிழ்ப் பெருமக்களுக்கு வற்புறுத்தி, வலியுறுத்தி உணர்த்திக்

காட்டி இருக்கிறார்கள். இத்தகைய பெருநோக்குப் படிப் போருக்கு நல்ல எண்ணத்தை உண்டாக்குமென்பதற்கு ஐயமில்லை!

மங்கையர்க்கரசிகளின் மாண்புகளைக் கேள்விகள் மூல மாக எழுப்பி, அதை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். நடை மிகவும் இனிமையாக இருக்கிறது. இவர்கள் கையாண்ட முறையிலிருந்து தமிழ் நூல்களை நன்றாகக் கற்றுத் திறன் பெற்றிருக்கிறார்கள் என்பது அறியக் கிடக்கின்றது. இடைவிடாத உழைப்பின் காரணமாக இத்தனிப் பெரும் செல்வத்தைத் தமிழ் நாட்டிற்குத் தந்திருக்கின்றார்கள்.

கற்புடைத் தெய்வமாகிய கண்ணகிக்குக் கோவில் கண்ட நாடு தமிழ்நாடு. இத்தகைய சிறப்பினை எந்த நாட்டினரும் அடைந்ததில்லை என்ற உண்மை உலகம் அறிந்ததாகும். பண்டைப் பெருமைகளை மறந்து மயங்கிக் கிடக்கும் தமிழருக்குப் புத்துணர்ச்சியை ஊட்டித் தட்டி எழுப்புதற்கு இஃதொரு சாதனமாகும். இதைப் போன்ற புத்தகங்கள் பல வெளிவர வேண்டுவது மிக இன்றியமையாதது. இவ்வம்மையார் தமிழுக்குச் செய்திருக்கும் பணி மறக்கற்பாலதன்று.

இந்நூலை மாணவிகள் மட்டுமல்ல, மாணாக்கர்களும் படித்து, உய்த்துணர்தல் வேண்டும் என்பதே என்னுடைய ஆசையாகும். வளம் பெற்று வாழ்க தமிழ் மொழி!

"பக்தி விலாஸ்"
தியாகராயநகர்
5—1—49

சு. இராமசாமி நாயுடு,
சென்னை மேயர்.

முன்னுரை

'மங்கையரின் மாண்பு' என்னும் இந்நூலிற் சங்க கால மகளிருள் சிலரும், இராமாயண மகளிருள் சிலரும் இடம் பெற்றுள்ளனர். இவருள் மாதவி யார் மணிமேகலையார் ஆகிய இருவரைப்பற்றியும் தனி நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், திரிசடை, அகலிகை இவர்களைக் குறித்த தனி நூல்கள் இல்லை. எங்ஙனமாயினும், இஃது இம்மகளிரின் வாழ்க் கையை விரிவாக எடுத்துரைக்க எழுந்த நூலன்று. இவர்கள் வாழ்க்கையில் பொதிந்து கிடக்கும் உயரிய செயல்களையும், சீரிய பண்புகளையும், பெண்மைப் பெட்புகளையும், கற்புத்திறன்களையும் எடுத்துக் காட்டி, அவற்றால் இவர்களுக்கு வாய்ந்திருக்கும் உயரிய நிலைகளைப் பலரும் அறியச் செய்யவேண்டு மென்பதே இந்நூலின் கருத்தாகும்.

இம்மங்கையரின் வரலாறுகளை ஊன்றிப் படித் தவர் தவிர, மற்றையவர் பெரும்பான்மையும் இவர் களை இழிவு படுத்தக்கூடிய செய்திகளையே எங்கும் பரப்புகின்றனர். இவை ஆராய்ச்சிக் குறைவினால் ஏற்பட்டனவென்பதைத் தற்கால இளைஞர் அறி தல் இல்லை. இக்குறைபாடுகளே அவர்கள் மனத் தில் ஊன்றிவிடுகின்றன. பின்பு அவர்கள் வாயி லாக வெளிவரும் பொருள்கள் எத்தன்மையனவாய் இருக்கும்? இங்ஙனமே நிகழ்ந்துகொண்டிருப்பின், இதன் முடிவு என்னாகும்?

நம் மாணவர் இனியும் இங்ஙனமே இராமல், பண்டைய நூல்களில் இயம்பப்படும் நம் நாட்டின் போக்குகளையும், மக்களின் இயல்பு, கல்வி, அறிவு, நுட்பமதி முதலியவைகளையும் ஆராய்ந்து, அவற்றின் உண்மைகளை உலகில் உறுதிப்படுத்த வேண்டுவது அவர்கள் சிறந்த கடமையாதலால், அவர்களுடைய பிற்கால ஆராய்ச்சிக்கு இஃது ஒரு வழி காட்டியாயிருக்கும் என்னும் எண்ணத்தினலேயே இச்சிறு நூல் வெளியிடப்பட்டதாகும்.

இன்னும், இந்நூல் எழுதியதற்குப் பண்டைய மகளிரிடம் எனக்கிருக்கும் அன்பும் மதிப்பும் காரணமேயல்லாமல், அறிவின் மிகுதி காரணமன்று. ஆதலின், இதிலுள்ள குறைகளைப் பொறுத்தருளி இது மாணவருக்குப் பயன்படுமாறு செய்வது அறிஞர் கடமையாகும்.

இந்நூலிலுள்ள அச்சுப்பிழைகளையும் மற்றவற்றையும் நீக்கிப் பதிப்பித்த சகோதரர் திருவாளர் - வித்துவான் - மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கு நன்றி செலுத்த யான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

S. கிருஷ்ணவேணி

பொருளடக்கம்

பக்கம்

தோற்றுவாய் 1—2

சங்ககால மகளிர்

க. மாதவியார் மாசற்றவரா?

1. வரைவின் மகளிர் ... 3—7
2. மாதவியார் அரங்கேற்றம் ... 7—10
3. காதலர் சந்திப்பு ... 10—20
4 மாதவியார் துயர்நிலை ... 20—32
5. மாதவியாரின் கோதறு பண்பு ... 33—36

உ. பசிப்பிணியைப் போக்கியது அமுதசுரபியா, அரிவையரா?

1. அமுதசுரபியின் அற்புதம் ... 37—44
2. ஆதிரையாரின் தீதறு கற்பு ... 44—50
3. அரிவையரின் ஆற்றல் ... 50—53

ங. மணிமேகலை மானிட மகளா?

1. மணிமேகலை மாதவியின் மகளா? ... 54—60
2. மணிமேகலை கண்ணகியின் மகளா? ... 60—86
3. மணிமேகலை அறக்கடவுளின் மகளா? ... 86—88

இராமாயண மகளிர்

பக்கம்

1. திரிசடை அரக்கர்குல மங்கையா?

1. மக்கள் யார்? ... 1—5
2. திரிசடையின் அருட்குணம் ... 5—15
3. திரிசடை சீதையைத் தெளிவித்தல் ... 15—23
4. சீதை திரிசடையைப் புகழ்தல் ... 23—25
5. திரிசடையின் சீர்மைகள் ... 25—29
6. திரிசடையின் அன்பும் அருளும் ... 29—36
7. திரிசடைக்குச் சீதை தந்த பட்டங்கள் 36—47

2. அகலிகை கற்பிழந்தவளா?

1. அகலிகை கௌதமருக்கு அமைந்த இல்லாள் ... ... 48—50
2. கற்பரசிகளின் கண்ணியம் ... 50—53
3. அகலிகையின் வாழ்க்கை ... 53—56
4. இந்திரன் இழிசெயல் ... 56—67
5. அகலிகையின் தூய தன்மை ... 67—82

மங்கையரின் மாண்பு

(இலக்கிய ஆராய்ச்சி)

தோற்றுவாய்

தேவருலகத்திற்கு ஒப்பான பல நலங்களும் பெற்றுத் திகழ்ந்த நம் நாட்டில், பண்டு, ஆண் மக்கள் கல்வி, கொடை, அறிவு, ஆண்மை முதலியவற்றில் தலைசிறந்து விளங்கியது மட்டுமே அல்லாமல், பெண்மக்களும் ஒழுக்கம், இரக்கம், அறம், வீரம், இறையன்பு முதலிய பண்புகளிலும்; கல்வி, அறிவு, ஆராய்ச்சி, நுட்பமதி முதலிய அறிவியற் கூறுகளிலும் தலைசிறந்து நின்றார்கள். அவர்களுள் ஒழுக்கமே உயிரெனக்கொண்டவர் எத்தனைபேர்! இரக்கமே இன்னலமென உற்றவர் எத்தனைபேர்! வீரமே வீறுடையதென விரும்பியவர் எத்தனைபேர்! இறையன்பே ஏற்றமுடையதென எண்ணியவர் எத்தனைபேர்! புலமையே பொருளெனப் போற்றியவர் எத்தனை பேர்! அவர்களுள் ஒவ்வொரு தொகுதியினரும் பண்டைத் தமிழ் நூல்களுள் அமைந்து அரிய காட்சியை அளித்துக்கொண்டிருக்கின்றனரல்லரா ?

ஆயினும், அம்மங்கையருடைய ஓவியக் காட்சியின் அருமைப்பாடுகள் எம்போன்ற அற்ப அறிவினருக்குப் புலப்படுதல் இல்லை. ஏன் ? அவற்றை நுணுகி அறிதற்கேற்ற அறிவும் ஆராய்ச்சியும் எங்களுக்கேது ? மாணிக்கத்தின் சீர்மையை அறியாதவன், அதை ஒரு கூழாங்கல் என மதிக்

கின்றான். அதன் பெருமை அறிந்தவரோ, அத னிடம் மிக்க மதிப்பைக் காட்டுகின்றனர். அங்ஙனமே திருவள்ளுவரைப் போன்ற சங்கப் புலவர், ஞானியர், பத்தர் முதலிய சான்றோர்க்கு அம்மங்கையரின் மாண்பு தெள்ளிதின் புலப்படு கின்றது அவர்கள் அதை அலசி அலசிப் பேசு கின்றனர். என் போன்றாரோ, அப்பெரியார்கள் பகருகின்றவைகளின் பொருளை அறிதற்கும் இய லாது தயங்குகின்றனர்.

இங்ஙனம் நம் மங்கையர் பலவற்றிலும் மாண்பு பெற்றிருத்தலோடு நின்றுவிடவில்லை. மாண்பு என்பதற்கு மாட்சிமை, அழகு, பெருமை என்னும் பல பொருள்கள் உண்டு. இவற்றுள் ஐம்புலன் களுக்கும் புலப்படும் அழகு முதலியன கற்றவர் கல்லாதவர் யாவருக்கும் காட்சியளியாநிற்கும். ஐம்புலன்களுக்கும் புலனாகாத அழகு முதலிய னவோ, மிக நுட்பமானவை; மனத்தினால் மட்டும் அறியக்கூடியவை; ஆன்மாவை அழகு செய்பவை. அவை யாவருக்கும் விளங்கித் தோன்றுவன அல்ல. ஆயினும், அதற்கேற்ற மதி நுட்பமுடையவர்கள் அவற்றின் தன்மைகளை அறிந்துகொள்வதுமட் டுமேயல்லாமல், அவற்றின் வழியே நின்று தங்கள் வாழ்க்கையை நடாத்திச் சீரும் சிறப்பும் பெறுகின் றார்கள். அவர்களையே உலகம் போற்றுகின்றது! அவர்களுடைய புலாலுடம்பு அழியினும் புகழுடம்பு நிலை நின்று பின்னுள்ளார் பலருக்கும் அறிவுச் சுடர் கொளுத்திக்கொண்டிருக்கின்றது. அத்த கைய பெண்மணிகள் பலர் தோன்றித் தமிழ்நாட் டையும் வடநாட்டையும் அணி செய்தனர். அத்த கைய மங்கையர் சிலரைப்பற்றிக் கூற எழுந்ததே இந்நூலாகும்.

முதல் பிரிவு

சங்க கால மகளிர்

க. மாதவியார் மாசுற்றவரா?

1. வரைவில் மகளிர்

உலகம் போற்றும் நம் இந்திய நாட்டில் கல்வியின் ஒரு பகுதியாகிய இசையிலும் நாடகத்திலும் வல்லுநர் சிலர் இருந்தனரென அறிகின்றோம்: ஆனால், அத்தகையவர் சிலரைப்பற்றியேனும் நாம் அறிதற்கியலாமற்போயினமையின், 'அம்மகளிர் யார்? அவர்கள் இருந்த காலம் எது? அவர்களின் இசை அளவு என்ன'? என்பவற்றைத் தெள்ளிதின் தெரிந்துகொள்ள இயலவில்லை. எங்ஙனம், நம் பண்டைய இசையைப்பற்றிய செய்திகளுள் பெரும்பாலன நமக்குக் கிடைத்திலவோ, அங்ஙனமே இசை வல்லுநரைக் குறித்த செய்திகளும் பல கிடைத்தில. இதனாலேயே, நம் தமிழகத்தில் இசையையும் அதில் துறைபோய பெரியவரையும்பற்றி ஒருவரும் இயம்புதற்கு ஒருப்படார். ஏன்? பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இசைத் தமிழுக்கு இலக்கியங்களும் இலக்கணங்களும் இருந்தன என்பது பழைய நூல்களால் அறியப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. எப்போது இசை நூல்கள் இருந்தனவோ, அப்போது அக்கலையில் வல்லு

நரும் இராமலிரார். ஆதலின், இசையை நன்கு கற்றுத் தெளிந்தவர் சிலரோ பலரோ நம் நாட்டில் வாழ்ந்திருந்தனர் என்பதற்கு ஐயமில்லை.

இன்னும், சிந்தாமணியும் சிலப்பதிகாரமுக் இக்கருத்திற்குத் துணை புரிகின்றன. இவ்விசைம் கலையைப்பற்றிச் சிந்தாமணி சிறிது கூறி னும், சிலப்பதிகாரமே பெரிதும் விளக்கிக் கூறு வதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் இயம் பப்படும் இசையின் இலக்கணங்கள் பலவும் யாருடைய இசையைப் பற்றிப் பகர வந்தன? அந்நூல், யாரை இசைத்தலைவியராகக்கொண்டு திகழ்கின்றது? எம்மங்கையருடைய இசையை உயிராகப் பெற்றுள்ளது? இவற்றை நோக் கின், இவற்றிற்குத் தலைமை கொண்டு ஒளிருகின் றவர் மாதவியாரே என்பது வெள்ளிடை மலை. இவர் தெய்வமங்கையாகிய உருப்பசியின் மரபைச் சார்ந்தவர்; வரைவில் மகளிர் குலத்தில் பிறந்தவர். "இவர் ஆவார்; இவர் ஆகார்," எனப் பகுத்தறி யாது, பொருள் ஈபவர் யாரேனும் அவர்க்குத் தம் பெண்ணலத்தை விலைப்படுத்துபவரையே 'வரை வில் மகளிர்' எனக் கூறுகின்றனர். இக்காரணம் பற்றியே இம்மரபினருக்கு 'விலை மாதர்' என்னும் ஒரு பெயரும் அமைந்துள்ளது. இக்குலத்தைப் பற்றி அறிஞர் பெரிதும் இழிவாகக் கருதுகின் றனர். சாமானிய மக்களுக்கும் இவரிடம் நல் லெண்ணமும் மதிப்பும் உண்டாதல் இல்லை. அன்றி யும், "இயற்கை அறிவையும் நூலறிவையும் பெறற்

வரும், உலகில் தம்புகழைப் பரப்பக் கருதுபவரும், அருட்செல்வத்தை நாடுபவரும், மன உறுதி வாய்ந் தவரும், தம்மைக் கருதி வந்தவரை அன்பினல் விரும்பாது, அவர் தரும் பொருளிற்கேற்ப இன் சொற்களைப் பெய்து மயக்கி, அவர்களிடம் அன் புடையவர் போன்று நடிக்கும் பொதுமகளிர்பாற் சேரமாட்டார்,'' என நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய இழிகுலத்தில் தோன்றிய நம் மாதவியார், குற்றமற்றவர் ஆதல் யாங்ஙனம்? ஒருவர்பிறந்த இடத்தைக்கொண்டே அவர் பிழை யுடையவர் எனச் செப்புதல் அத்துணைச் சிறந்த முறையாகாது. ஏன்? தாழ்ந்த இடத்தில் தோன்றிய எத்தனையோ பொருள்கள் உயர் நிலையில் வைத்துக் கொண்டாடப்படுதலைக் காண்கின்றோமல்லவா? தாமரை எங்குத் தோன்றுகின்றது? முத்து எவண் உண்டாகின்றது? தற்காலத்தில் பயன் பட்டு வரும் ரோசா மலர் எதனோடு கலந்திருக்கின்றது? முறையே சேற்றிலும், சிப்பியிலும், முள்ளுடனும் அல்லவா அமைந்திருக்கின்றன? ஆயினும், அவை கள் பிறந்த இடத்தை நோக்கி அவற்றைத் தள்ளு தலும் இழித்துக் கூறலும் யாரேனும் செய்கின் றனரா? அதற்கு மாறாக, அவைகள் தமக்கு ஒப் பான மற்றப் பொருள்களைக்காட்டிலும் உயர்ந்தன வாயும், தெய்வங்கட்கும், அரசர்கட்கும், அறிஞர்க் கும் உரியனவாயுமல்லவா பாராட்டப்படுகின்றன! இஃது எதைத் தெரிவிக்கின்றது? 'தாழ்ந்த இடத் தில் தோன்றிய பொருள்கள் யாவற்றையும் தாழ்ந்

தவைகள் எனத் தீர்மானித்தல் கூடாது! அப்பொருள்களின் குணங்களை நோக்கியே அவற்றின் இயல்பை வரையறுத்தல் வேண்டும்,' என்பதை யன்றோ? இக்கொள்கையை அறிஞர் முதலிய யாவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். எல்லா உயிர்களுக்கும் பிறப்பானது ஒத்திருப்பினும், அவரவர்கள் மேற்கொள்ளும் செயல்களின் வேறுபாட்டினால், அவர்களுடைய பெருமை ஒத்திருத்தல் இல்லை என்பதை, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்," என்னும் தம் அருமை வாக்கால் நிலைநிறுத்துகிறார் தெய்வப் புலவர். இதைக் குறித்து ஆராயப்புகின், இதனைப்போன்ற பல சான்றுகள் கிடைக்கும் என்பது திண்ணம்.

ஆகவே, இக்கோட்பாட்டை மனத்தில் நிறுத்தி நம் மாதவியாரிடம் செல்வோம். இவர் முன்னர்க் குறிப்பித்தவாறு, பொது மகளிர் மரபில் பிறந்த சித்திராபதிக்கு மகளாராய்த் தோன்றினார். சித்திராபதி என்பவள் தன் குலவழக்கத்தின் தீச்செயலால் பெரும்பொருள் திரட்டி வாழ்ந்தனள். அவளுக்கு மாதவியார் ஒரே மகளாராதலால், அவள் இவரை மிகச்செல்வமாக வளர்த்துவந்தாள். அவள் பொருள் பெருக்கமும் அதற்குத் துணை புரிந்தது. இவருக்கு இளமையிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. ஆயினும், இலக்கிய இலக்கணக் கல்வியோடு இவரை நிறுத்தச் சித்திராபதியின் மனமிசையவில்லை. இவருடைய இயற்கை அறிவையும், இசையில்

இவருக்கிருந்த சுவையையும் நோக்கிய அவள், இவருக்கு இசையையும் நாடகத்தையும் கற்பிக்க முற்பட்டாள். இவருக்கு ஆடல், பாடல், குழல், யாழ் முதலியவற்றைக் கற்பித்தற்குத் தனித்தனியே சில ஆசிரியர் அமைந்தனர். அவர்களிடம், நுட்ப மதியுடைய மாதவியார் அவ்விசைக் கலையை மிக விரைவில் கற்றுத் தேர்ந்தார். அவ்விசைக்கலை இவரிடம் அடிமை பூண்டது. அக்கலையில் இவர் கேட்டவர் வியக்கத்தக்க ஞானத்தைப் பெற்றார். இவருக்கு அதில் ஒப்பாரும் மிக்காரும் இலராயினர். இவரது கலைப்பெருக்கு, தாய்க்கும் மற்றவருக்கும் உவகையை உண்டாக்கிற்று. அக்காலத்தின் வழக்கின்படியே தன் மகளாரின் நாடகக் கலையை அரசன் அவையில் அரங்கேற்றக் கருதிய சித்திராபதி, அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தாள்.

2. மாதவியார் அரங்கேற்றம்

அதற்கெனக் குறிப்பித்த நாள் வந்தது. அலங்கரிக்கப்பட்ட அவ்வரசவையில், அரசன் சோழனும், அமைச்சரும், மற்றுஞ்சில சிற்றரசரும், காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த செல்வர் வணிகர் முதலியவரும் குழுமி இருந்தனர். அவர்களுள் நம் கற்புத் திலகமாகிய கண்ணகியாரின் கணவனாகிய கோவலனும் ஒருவன்.

அவ்வரசவையின்கண் மாதவியார் தாம் கற்றுத்தேர்ந்த உயரிய நாடகக் கலையைச் சிறிதும் குற்றமின்றியும் கண்டோர் வியப்புறுமாறும் நடித்துக் காட்டினர். இவர் பாடலை வாய்விட்டுப் பாடா

விடினும், அதன் கருத்தை, இவர், தம் கை, கண், முகம் இவற்றைப் பயன்படுத்திக் காட்டிய குறிப்புகளால் அங்குள்ளார் நன்கு அறிய முடிந்தது. இம்முறையில், மாதவியாரின் ஆடல் பாடல் முதலியன அங்குக் குழுமியிருந்தவர்க்கு ஓர் அற்புதக் காட்சியாய் இருந்தன. அவற்றால் வியப்படையாதவர் ஒருவருமிலர். இசையில் வல்லுநர்க்கும் இவர் இசைக்கலை இறும்பூதளித்தது என்னில், இவர் கலையறிவைப் பற்றி என் இயம்புவது! இத்தன்மையில் இவர் யாவரிலும் இசையில் விஞ்சி நின்றார் எனத்தான் கூறல்வேண்டும்! இவரைப் பாராட்டாதார் அவ்வூரிலேயே இல்லையென இயம்பல் மிகையாகாது. இதைக் கண்ட அரசன் ஆனந்தத்தால் நிரப்பப்பட்டான். இதுவரையும் தான் எங்கும் காணாத இக்காட்சி அவனை உவகையில் ஆழ்த்திற்று. உடனே சோழன் மாதவியாரின் அழகுக்கும், கூத்துக்கும், பாட்டுக்கும் தக்கவாறு உயர்ந்த இலைப் பூங்கோதை (பச்சைமாலை) ஒன்றும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் பரிசீந்து இவரைப் பெருமைப்படுத்தினான்.

"நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டினள் ஆதலின், காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை இயல்பினின் வழாமைத்
தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி
விதிமுறை கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள்."

— அரங்கேற்று காதை, (158-163)

எனச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

இங்கு ஒன்றைப்பற்றி ஆராய்தல் வேண்டும்: மற்ற மொழிகள் எங்ஙனமிருப்பினும், தமிழ்மொழி, இயல் இசை நாடகம் ஆகிய மூன்று உறுப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அஃது இம்மூன்றும் சேர்ந்தே தமிழ் என்னும் ஓர் உருவத்தைப் பெறுகிறது; இவற்றுள் ஒன்று குறையினும் தமிழ் முழு உருவத்தையும் பெற்றதாகாது. இங்ஙனம் இம்மூன்றும் ஒன்றாக வைத்தெண்ணப்படினும், இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இலக்கியங்களும் இலக்கணங்களும் உண்டு. தற்போது எங்ஙனம் இயற்றமிழிற்கு இலக்கிய இலக்கணங்கள் அமைந்துள்ளனவோ, அங்ஙனமே மற்றைய இரு தமிழிற்கும் பண்டு இலக்கிய இலக்கணங்கள் அமைந்திருந்தன. ஆனால், தமிழ் நாட்டின் பெரும் பகுதியைக் கடல்கொண்டதனாலும், பிற மன்னரின் கருணையற்ற செயல்களினாலும், தமிழர் ஊக்கக் குறைவினாலும், இன்னும் பல காரணங்களினாலும் நம் நாடு இசை நாடகம் என்னும் இரு தமிழையும் இழந்து நிற்கின்றது. இது தமிழரும் தமிழ்நாடும் செய்த தவக்குறைவேயாகும். ஆயினும், 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்,' என்பது போல, இம்முத்தமிழும் ஒரு காலத்தில் உயர் நிலையைப் பெற்றிருந்தன என்பதைக் காட்ட அறிகுறியாக நிற்பது, சிலப்பதிகாரம் என்னும் சிறந்த இலக்கிய நூலேயாகும். "இந்நூல் யாருடைய மாண்பினால் முத்தமிழ் நூலாயிற்று? எவருடைய கலை இதை இவ்வுயர்நிலையில் நிறுத்தியது?" என வினவின், இவற்றிற்கு விடையாக நம் மாதவியா

ரல்லரோ நம் கண் முன் வந்து நிற்பார்? இவர் இசைக்கலையில் தேர்ச்சியடையவில்லையேல், அன்றி இவர் கலை அரசவையில் குற்றமற அரங்கேற்றப் படவில்லையேல், சிலப்பதிகாரம் முத்தமிழ் நூலாதல் யாங்ஙனம்? தமிழில் முத்தமிழ்நூல் ஒன்று உண்டு என நாம் பெருமை கொள்வதுதான் எப்படி? பண்டு நம் தமிழ் முத்தமிழையும் கொண்டு இலங்கியது என்பதற்குச் சான்று பகருதல்தான் எவ்வாறு? அதற்கேற்ற சில அமைப்புகளையேனும் அறிந்துகொள்ளுதல்தான் யாங்ஙனம்? இவற்றிற் கெல்லாம் ஊன்றுகோலாயிருந்தவர் நம் மாதவியாரே அல்லரா? இம்முறையில் மாதவியார் நம் தமிழ் நாட்டிற்கும் தமிழிற்கும் பேருதவி செய்தவர் எனல் குற்றம் ஆகாது. ஆகவே, தமிழிற்கு முழு உருவத்தையும் தந்து மாண்புறச் செய்தவர் மாதவியாரே எனப் பகருதல்தான் பொருத்தமுடையதாகும்.

3. காதலர் சந்திப்பு

இவ்வாறு மாதவியார், தம் குற்றமற்ற இசைக் கலையை அரசன் அவையில் அரங்கேற்றிய போது, அவண் வந்தவர்களுள் கோவலனும் ஒருவனல்லனே? அவன் மாதவியாரைக் கண்ணுற்ற உடனே, இவர் உடலழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. அப்போதே சில எண்ணங்கள் அவன் மனத்தில் தோன்றலாயின. அங்ஙனமாயின், இவர் ஆடல் பாடல்களோடுங் கூடிய இசைக்கலையின் சீர்மையை நோக்கிய பின்பு, அவன் நெஞ்சம் எந்நிலையை

அடைந்திருக்கும் என்பதைப் பகரவும்வேண்டுமோ? அவன் இவ்வவைக்கு வருதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பும் கற்புத் தெய்வமாகிய கண்ணகியிடம் எவ்வாறு ஒழுகி வந்தான்! எத்தகைய அன்பைக் காட்டினன்! அவளுடைய நலங்களை எம்முறையில் பாராட்டி நின்றான் என்பது,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை."

—மனையறம்படுத்த காதை, 73–81

என்னும் இக்கட்டுரையால் தெள்ளிதின் புலப்படும். இத்தகையவன் சில விநாடிகளில் வேறொரு மகளிரிடம் மனத்தைச் செலுத்தினன் என்பதை நோக்கின், அறிஞர் மனம் அமைதியுற்றிருத்தல் யாங்ஙனம்! நல்லொழுக்கமுடையார் இது நன்னெறியன்று என நகையாரோ! உயர் பண்புடையார் இது தீதெனப் பழியாரோ! இன்னலமுடையார் இதை இகழாரோ! இவைகள் யாவும் அக்காலத்திலும் நிகழ்ந்தே இருக்கும் என்பது திண்ணம். எங்ஙனமேனும் கண்ணகி பெருமிதத்துடன் வீற்றிருந்த கோவலனுடைய மனத்தகளியில், மாதவியார் வந்து அமர்ந்தார். அதன் பின்பு அங்குக்

கண்ணகிக்கு இடமேது! அவள் விலக வேண்டியவள்தானே!

ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகின்றது: உண்மையே உருவெனக் கொண்ட அரிச்சந்திரனைப் பொய்யனாக்கக் கருதிய விசுவாமித்திர முனிவர், அவனுக்குப் பல இன்னல்களை இழைக்கின்றாரல்லரா? அவற்றுள் ஒன்று, ஆடல் பாடல்களில் வல்ல இரு பெண்களை அரிச்சந்திரனிடம் அனுப்புவது. அவ்விருவரும் அவனிடம் போந்து தங்களை மணந்துகொள்ளுமாறு மன்றாடுகின்றனர். அவ்வமயம் அரிச்சந்திரன் அவ்வணிகையருக்கு இறுக்கும் விடை யாது? "என் உயிரைக் கேட்பினும் ஈவேன். ஆனால், இவ்வரத்தைத் தர என்னால் இயலாது" என்பதன்றோ! அங்ஙனம் செய்யாமைக்கு அவன் காட்டும் காரணங்கள்யாவை? "ஏற்கெனவே என் உள்ளத்தில் ஒருத்தி குடி புகுந்திருக்கின்றாள். அந்த இடத்தில் இன்னொருவரைக் குடி புகுத்தல் அறமும் அன்று; ஆண்மையுமன்று. அக்காரியத்தைச் செய்யக்கூடிய தீரமும் எனக்கில்லை," என்பன அல்லவா? இஃதன்றோ நிறை! இஃதன்றோ வீரம்! இஃதன்றோ நற்சால்பு! இவ்வுயர் பண்பு-இத்தூய தன்மை - இப்பெருஞ்சீலம் - கோவலனை விட்டு விலகிற்று. "அழகே திரண்டதென ஒளிரும் இம்மாதை அடைதல் யாங்ஙனம்?" என்னும் ஆராய்ச்சியே அவனுக்கு மிகுந்தது.

மாதவியாரின் ஆடல் பாடல்களை வியந்த அரசனால், ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் ஒரு பச்சிலை மாலையும் இவருக்குப் பரிசில்களாக

அளிக்கப்பட்டன அல்லவா? இவை இரண்டையும் கைக்கொண்ட சித்திராபதி பச்சிலை மாலையைத் தன் தோழியாகிய கூனியினிடம் கொடுத்து, "இம் மாலை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் மதிப்புடையது. இதற்கு இவ்விலையைத் தந்து வாங்குபவர் கொடிபோன்ற என்மகளையும அடைதற்குத் தக்கவராவர். ஆதலின், இந்நகரத்தின் செல்வ மக்கள் திரிதரும் ஆவணத் தெருவிற்கு இதைக் கொடுபோய், 'இம்மாலைக்கு யார் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுக்கின்றனரோ, அவர் இம்மாலையையும் மாதவியையும் அடைவர்,' எனச் செப்பி விலை பகர்வாய்," என, அவளுக்குக் கட்டளையிட்டனுப்பினள். கூனி அவ்வாறே செய்தாள். மாதவியாரை அணுகுதற்கு வழி தேடிக்கொண்டு கடைத் தெருவே சென்ற வணிகனுன கோவலன், அழகிய தாமரை போன்ற பரந்த கண்களையுடைய மாதவியினுடைய பரிச மாலையை, அதற்கேற்ற பொருளீந்து, மிக்க வேட்கையுடன் வாங்கி, அக்கூனியைத் தொடர்ந்து மாதவியாரின் வீட்டை அடைந்தான்.

"'நூறுபத் தடுக்கி எட்டுக்கடை நிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை;
மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கிபோர் கூனிகைக் கொடுத்து
நகர நம்பியர் திரிதரு மறுகில்
பகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த
மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
மணமனை புக்கு"—அரங்கேற்று காதை, 1641-72

என வரும் அடிகளால் இதனை அறியலாம்.

அன்று முதல், கோவலனுக்கு உரியவான பொருள் யாவும் மாதவியாரின் வீட்டை நோக்கி வந்தனவேயன்றிக் கண்ணகிக்கு உரிய பொருளான கோவலன் தன் வீட்டை நோக்கிச் சென்றிலன்.

இவ்விஷயத்தை இளங்கோவடிகள் இங்ஙனம் இயம்பாநிற்க, சாமானிய மக்கள் கூட்டமும் சில நாடகமேடைகளும் இச்செய்தியை, மன்னனால் தமக்கு அளிக்கப்பட்ட பச்சிலை மாலையை மாதவியார் அவ்வவையிலேயே யாவரும் காணக் கோவலன் கழுத்திலிட்டு, அவனைக் கைப்பற்றி அழைத்துக்கொண்டு தம் இல்லம் ஏகினார் எனத் திரித்துக் காட்டுகின்றன. இஃது எத்துணை நாகரிகமற்ற செயல்! அன்றியும், பலபேர் கூடியிருக்கும் ஒரு பெரிய அவையில் இருந்த கோவலனை, மாதவியார் தனித்து நோக்கி அவனுக்கு மாலை இடுவதென்னில், அவனை இவர் முன்பே பார்த்தேனும், அவனைக் குறித்துச் சிலவற்றை அறிந்தேனும் இருக்க வேண்டாவா? இன்றேல், ஒரு பகுத்தறிவுடைய மங்கையார் ஒருவனைச் சிறிதும் ஓராது, யாங்ஙனம் அவனைத் தனக்கு மணவாளனாகத் தேர்ந்தெடுக்க முடியும்? அவ்வாறாயின் மாதவியாரை முன்பின் யோசியாது சென்றவிடத்தில் மனத்தைச் செலுத்தும் அறிவீனரோடல்லவா ஒப்புப்படுத்தல் வேண்டும்? அங்ஙனம் இவர் நிலையற்ற நெஞ்சுடையவராயின், கோவலனிடம் வைத்த மனத்தை வேறொருவரிடம் செலுத்தாமலிருக்கவோ, அவன் இறந்துபட்ட பின்னும் மனத்திட்பத்துடன் வாழவோ

இடந்தந்திருக்கக் கூடுமோ? இவை யாவும் ஒரு புறமிருப்பினும், மாதவியார், கோவலனை முன்பே அறிந்ததாகச் சிலப்பதிகாரத்தில் எங்கும் கூறப் படவுமில்லையே!

“சரித்திரப்போக்கு இங்ஙனமாயின், ஏன், சிலர் மாதவியாரின் விஷயத்தில் பொய்க் கதை கட்டிக் கூறுகின்றனர்?” எனச் சிலர் வினவலாம். இதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. என்ன? “கோவலன் மனைவியுடன் இல்லறம் நடத்துபவன் என்றும், அவனிடத்தில் நிறைந்த பொருள் இருக்கின்றதென்றும், அவன் குலத்திற்கு ஒரே மகனென்றும் மாதவிக்கு நன்கு தெரியும். ஆயினும், அவன் செல்வத்தைக் கவர நினைத்தே அவனுக்கு இவள் மாலையிட்டனள். அவன் மாட்டுச் சென்ற அன்பின் காரணமாக அச்செயல் நிகழ்ந் திலது; இதுதானே இவள் குலத்தின் வழக்கம்? அக்குலம் பிறர் துன்பத்தையேனும், பொருள் நஷ் டத்தையேனும் நோக்குதல் உண்டோ? ஆதலின், இவளும் தான் தோன்றிய மரபின் போக்கிற்கேற் பச் சென்றனள்; இம்முறையில் இவள் குற்ற முடையவளேயாவள்,” என இவர்மாட்டுப் பழியைச் சுமத்தவே இங்ஙனம் செப்புகின்றனர். இதுதான் பொதுவாக யாவருடைய மனத்திலும் பதிந்துள் ளது. சிலப்பதிகாரத்தைப் படித்து உண்மையைத் தெரிந்துகொள்பவர் எத்தனை பேர்? படித்த உல கத்திலும் சில பேர்தாமே அந்நூலின் பொருளைத் தெரிந்துகொண்டுள்ளனர்!

இவண் இன்னொரு ஐயப்பாடும் தோன்றலாம்: அது, "முன் செப்பியவாறே மாதவியார் கோவலனைப்பற்றி ஒன்றுமே அறியார். சித்திராபதியின் தூண்டுதலாலும், கூனியின் காரியத்தினாலும், கோவலன் மனப் போக்கினாலுமே இச்செயல் நிகழ்ந்தது என்றே வைத்துக்கொள்ளினும், தம் இல்லம் நோக்கி வந்து தம்முடன் கலந்து வாழ்ந்து வந்த சின்னாட்களுக்குப் பின்பேனும், 'கோவலனுக்கு இல்லாள் உண்டு; பெற்றோர் உண்டு; இல்வாழ்க்கை நடத்த வேண்டிய கடமை உண்டு,' எனக் கோவலனாலோ, அன்றி மற்றவராலோ மாதவியார் அறிந்திருக்க மாட்டாரா? அறிந்திருப்பாரென்பது திண்ணம். அதற்குப் பின்புதான் மாதவியார் இயற்றிய நற்காரியம் என்ன? 'அந்தோ! வேறு மகன் இல்லாத இவருடைய பெற்றோர் வருந்துவரே! தான் மணம் செய்த கணவனையன்றி மற்றெவரையும் மனத்திலும் நினையாத குலமகள் எத்துணைத் துன்பத்தை அடைவாள்! கற்புடைய மங்கையர்க்குத் தம் காதலரைப் பிரிந்திருத்தல் என்பது தம் ஆவியைப் பிரிதலைக்காட்டிலும் அருந்துயரளிப்பதன்றோ! இவர் நமக்கு உரிமையானவரல்லரே! வேறொருவருக்குச் சொந்தமான ஒருவரை நம் வசப்படுத்தி இன்பந்துய்த்தல் எவ்வளவு கொடுமையுடையது! இக்கொடுமை நம் குடியை எரிக்குமே! அக்கற்புடையார் மனத்தாங்கல் நம்மைச் சுட்டெரிக்காதா? நம் உடலை மட்டுமா, நம் உயிரையும் தகித்துவிடுமே! ஆதலின், இத்தீய காரியத்திலிருந்து நீங்குதலே அறிவுடைமை,' என

அப்பண்பற்ற காரியத்திலிருந்து விலகினரா? இல்லையே! இம்முறையில் மாதவியாரை மாசற்றவர் எனப் பகருதல் யாங்ஙனம்!" என்பதேயாகும்.

ஆம்! மாதவியாரின் இச்செயலை மேற்போக்காக நோக்கின், இது குற்றமுடையதாகவே காணப்படலாம். இதைச் சிறிது ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். கூனியால் விலைப்படுத்தப்பட்ட மாலையைக் கையிலேந்திய கோவலன், சித்திராபதியின் வீட்டில் நுழைகின்றான். அவன் மிக்க செல்வன் என்பதை அறிந்த சித்திராபதி அவனைப் பெருமிதத்துடன் வரவேற்கின்றாள். அவ்வமயந்தான் காதல் காட்சியின் தொடக்கத்திரை நீக்கப்படுகிறது. தம் மாலையைப் பெற்றுத் தம்மை உரிமைப்படுத்திக்கொள்ளுதற்கு ஒருவன் வந்திருக்கின்றனன் என்பதைத் தோழியால் அறிந்த மாதவியார் வெளிப்போதருகின்றார். இவர் பார்வை கோவலன்மேல் பாய்கின்றது. கோவலனும் இவரைக் காண்கின்றான். இருவர் நோக்கும் ஒன்றோடொன்று கலந்து உறவாடுகின்றது. அவ்விநாடியே இவருக்கு அவன்மேல் கெழுமிய அன்பு உண்டாகின்றது. அஃது அணை கோல முடியாத காதல் வெள்ளமாகப் பாய்ந்தோடுகின்றது. அதை ஒருவரும் அறியாவண்ணம் மறைக்க இவரால் இயலவில்லை. கோவலன்மாட்டுச் சென்ற இவர் கண்கள் வேறு பக்கம் திரும்பில. நின்ற இடத்திலிருந்து இவர் சிறிதும் அசைந்திலர். இவருடைய இந்நிலையால், இவர் மனக்கருத்து இன்னதென்பதை அங்குள்ளார் அறிந்து அப்புறம் சென்றனர்

பின்பு இவ்விருவரையும் ஒன்றுபடுத்தத் தோழியோ, தாய் சித்திராபதியோ வேண்டிற்றிலர். உடனே மாதவியாரும் கோவலனும் பன்னாட்கள் பழகினவர் போன்று இன்பத்தில் திளைத்திருந்தனர்.

இங்ஙனம் முன்பின் தெரியாதவரிடம் ஒருவருக்குண்டாகும் அன்புதானே தெய்வ அன்பு எனக் கூறுவது! இஃது என்றும் அழியாதது! இதற்கு மக்களாலும் தெய்வத்தாலும் கேடுண்டாதல் இல்லை; இவ்வன்பு வறுமையினாலோ, பிணியினாலோ, துன்பத்தினாலோ வற்றுதல் இல்லை. இன்னும் ஆய்ந்து கூறின், உடலழியினும் இஃது உயிரைப்பற்றிக்கொண்டு நிற்கும். எங்ஙனம் உயிருக்கு முதுமை இறப்பு முதலியன இல்லையோ, அங்ஙனமே இவ்வன்பிற்கும் இவைகள் நேருதலில்லை. சான்றோரால் தாங்கப்படுவதும், புலவரால் போற்றப்படுவதும், அறிஞரால் ஆதரிக்கப்படுவதும் இவ்வன்பேயாகும். மிக்க ஆராய்ச்சி இல்லாதவரும் இதைச் சிறப்பித்தே பேசுவர். ஆதலின், இத்தகைய அன்பை இழித்துக் கூறுபவர் ஒருவருமிலர். இவ்வன்பே மனைவி கணவன் ஆகிய இருவர் இடையில் தோன்றுங்கால், காதல் எனப் பகரப்படுகிறது. அன்பிற்குப் பகர்ந்த பண்புகள் யாவும் இக்காதலுக்கும் உண்டு.

இத்தகைய சீர்மைகள் பல வாய்ந்த காதல் தான் மாதவியாருக்குக் கோவலன் மாட்டுச் சென்று பதிந்தது. இக்காதலுக்குக் கோவலனையும், அவன் இயல்புகளையும், அவன் அன்பையுமல்

லாமல் வேறு பொருளை நோக்குதற்குக் கண் ஏது? மற்றொன்றைப்பற்றி நினைக்கத்தான் நேரம் எங்கே? தம் காதலனும் தாமும் வேறுபட்டவ ரல்லர்; ஒன்றே என நினைத்துக்கொண்டிருக்கும் அந்நிலையில், அவனுக்கு உரியவர் வேறொருவர் உண்டு என்னும் எண்ணம் இவருக்குத் தோன்று தல் யாங்ஙனம்? அவ்வெண்ணமே உதியாதபோது அவ்வுரியவரின் நிலையோ, போக்கோ, துன் பமோ இவர் மனத்தில் கிளைத்தெழுதல் எங்கே? இங்ஙனம் மாதவியாரின் காதல் கோவலனிடம் உயிரோடு உயிராய் பிணைக்கப்பட்டிருந்ததனுற்றன் இவருக்குக் கண்ணகியாரைப்பற்றித் தெரிந்து கொள்ளவும், அதற்கு ஒரு கழுவாய் தேடவும் இடமில்லாமற்போயின போலும்! இத்தன்மையில் மாதவியாரை மாசுடையார் எனக் கூற யாரேனும் முன் வருவரா? ஓரோ ஒருவர் செப்பினும், உயர்ந் தோரும் கடவுளும் அதை ஒப்புக்கொள்ளுவரோ! ஒருகாலும் ஒப்புக்கொள்ளார் எனத் தெளிக.

இதன் உண்மையை அறிய மணிமேகலையில் வகுக்கப்பட்ட ஊர் அலருரைத்த காதைக்குச் செல் லல்வேண்டும். இந்திர விழாவின்போது, சித்திரா பதியால் அனுப்பப்பட்ட வயந்தமாலை, மலர் மண்ட பத்திலிருந்த மாதவியார்பால் அணுகி, "மாதவியே, இத்துறவு உன் குலத்திற்குத் தகாது. இந்திரவிழா விற்கு வந்து உன் மரபிற்கேற்ப ஆடல்பாடல்களைச் செய்து பலரையும் மகிழ்வித்தல் வேண்டும்," என மொழிந்தாள். மாதவியார் அவளுக்குப் பல அற வுரைகளைப் பகர்ந்தும் கேளாதவளாய், "நீ வர

வொழிக்கினும் உன் மகள் மணிமேகலையையேனும் என்னுடன் அனுப்புவாய்," என வற்புறுத்தினாள். அதற்குப் பொறாத மாதவியார், "இவள் என் மகள் எனச் செப்புதற்குப் பொருத்தமுடையவளல்லள். தன் கணவர் பிறர் கொடுமையால் கொலையுண்டதைப் பொறாது, மதுரையை எரித்து, சேர நாட்டை அடைந்து, அங்குள்ள மலைமேலேறி, வேங்கை மரத்தின்கீழ் மிக்க துயரத்துடன் தங்கியிருக்குங்கால், பதினான்காம் நாளில் தேவர்கள் துதிக்கவும், வாடாத மலர்களை மழையெனத் தூவி நிற்கவும் தன் கணவரோடு தெய்வ விமானமேறிச் சென்ற கண்ணகியின் மகளே ஆவாள். ஆகலின், இவள் செய்தற்கரிய தவத்தொழிலை மேற்கொள்ளுவதல்லாமல், அறத்தொடு பொருந்தாத பரத்தையர் தொழிலைச் சிறிதும் மேற்கொள்ளாள்," என வற்புறுத்திக் கூறினார். இதனால், மாதவியார், கண்ணகியிடம் எத்துணை மதிப்பைக் கொண்டிருந்தார் என்பது வெளிப்படுகின்றதன்றோ!

4. மாதவியார் துயர் நிலை

மாதவியாரின் உண்மை அன்பும் மாசற்ற நீர்மையும் கோவலனை நன்கு இறுக்கிக் கட்டிவிட்டன. அக்கட்டை அவிழ்த்துக்கொண்டு அப்புறம் செல்ல அவனால் இயலவில்லை. ஆகலின், கோவலன் என்று மாதவியாரின் மனையில் நுழைந்தனனோ, அன்றையிலிருந்து அவன் தன் சொந்த இல்லத்தை நாடிச் சென்றிலன். இங்ஙனம் இவர்கள் காதற் கயிற்றால் பிணிப்புண்டு வாழுங்கால், அதன் அறி

குறியாய் ஒரு பெண் மகவு தோன்றிற்று. அக்குழவி மணிமேகலை என்னும் பெயர் பெற்று மாண்புற வளர்ந்தது. அம்மகவின் சீரும், சிறப்பும், தெய்வத்தன்மையும் அறியாதார் யார்? அம்மங்கையின் பண்புகளை இயம்புதற்கு இஃதிடமன்று; ஆதலின், அதை விளக்காது விட்டாம்.

இங்ஙனம் மாதவியார் வாழ்க்கை சின்னாட்கள் செல்வத்திலும் இன்பத்திலும் தவழ்ந்துகொண்டிருந்தது. இவ்வுலகில் இன்பமும் துன்பமும் நிலையுடையனவல்லவே! அப்போதைக்கப்போது இன்புற்றார் துன்புறுதலும், துன்புற்றார் இன்புறுதலும் உலக இயல்பல்லவா? இம்முறையில் நம் மாதவியாருக்குத் துன்பமூட்டும் ஊழ் நெருங்கிற்று. இவ்வூழ் நல்லார் என்றும் தீயார் என்றும் நோக்குதல் உண்டா? இல்லையே!

அந்நகரில் ஆண்டுதோறும் கொண்டாடும் இந்திர விழா வந்தது. அவ்வமயம் காவிரிப்பூம்பட்டினம் மிக்க குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அவ்விழாவின் இறுதி நாளில் யாவரும் கடற்கரைக்குச் சென்று கடலாடுதல் வழக்கம். அன்று பலபேர் அங்குச் சென்றனர். அங்ஙனமே கோவலனும் மாதவியாரும் அவண் போந்து, தாழை சூழ்ந்த நறுமணற்பரப்பில், ஒரு புன்னைமர நிழலில் அழகான திரை ஒன்று வளைத்துக் கட்டப்பட்ட இடத்தில் அமர்ந்திருந்தனர். அவ்வமயம் மாதவியார், தம் தோழி வயந்தமாலையினிடம் இருந்த யாழை வாங்கி அதன் நரம்புகளை நன்கு திருத்திக் கோவலன் கையில் ஈந்தனர். அதைக் கைக்கொண்ட கோவ

லன், காவிரியை நோக்கி, "என்றும் வற்றாது சோழநாட்டைச் சோறுடையதாக்கும் காவிரியே, உனக்கு நாயகனாய் விளங்கும் சோழன், கங்கையையும் கன்னியா குமரியையும் புணர்ந்தாலும் நீ புலத்தலைச் செய்யாய்! அங்ஙனம் நீ புலவாதிருத்தற்குக் காரணம் மாதருக்குப் பொருந்தி இருக்கும் கற்பின் சிறப்பே என்பதை அறிந்துகொண்டேன்!" என அகப்பொருளியலில் களவுத்துறை அமையச் சில பாக்களைப் பாடினான்.

"திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!"

—கானல் வரி, 2.

என்பது அப்பாக்களுள் ஒன்று.

அப்பாடல்கள், கோவலன் வேறு மகளிர்பால் விருப்புடையவனோ என்னும் எண்ணத்தை மாதவியாருக்கு உண்டாக்கின. ஆயினும், தூய மனத்தையும் களங்கமற்ற நெஞ்சையும் உடைய மாதவியார் அத்தீர்மானத்திலேயே ஊன்றி நிலைத்துவிடவில்லை. "நம் அன்புடைய நாயகர், நமக்கு ஊடல் விளைத்தற்பொருட்டே இங்ஙனம் செய்திருக்க வேண்டும். ஊடல் காதலை வளர்க்கும் அமுதமன்றோ! ஆதலின், நாமும் நம் நெஞ்சைத் துன்புறுத்திய இவர் சிறிது கலக்கமெய்துமாறு ஒரு விளையாட்டைப் புரிவோம். அப்போதுதான், அதனால் பிறருக்கு உண்டாகும் துன்பம் இன்னதென்பதை இவர்

அறியக்கூடும்!" எனத் தீர்மானித்தார். அத் தீர்மானம், மனமாசற்றவரும், மறந்தும் புறஞ் செல்லா நெஞ்சுடையவருமான இவரை, வேறொருவரிடம் குறிப்புடையவர் எனக் காட்டுதற்கேற்ற அகப்பொருள்சுவை துன்னிய சில பாக்களைப் பாடுமாறு செய்தது. உடனே இவர், கோவலன் கையிலிருந்த யாழை வாங்கி, "காவிரியே, நீ மலர்கள் நிரம்பிய சோலையில் மயில்கள் நடனம் புரிய, அதனை விரும்பிய குயில்கள் இன்னிசை காட்ட, அழகிய மாலைகள் அசைந்து துவள, மிக்க கம்பீரத்துடன் செல்லுகின்றாய். இங்ஙனம் நீ பெருமிதத்துடன் நடப்பதற்குக் காரணம், பகைவருக்கு அச்சத்தையும், தனக்குப் புகழையும் உண்டாக்கும் வேலைத் தாங்கிய, நின் அன்புடைக் கணவனை சோழனுடைய வன்மையைக் கண்டு, 'இனி நமக்குப் பிறரால் வருத்தமுண்டாதற்கு வழியில்லை" என்பதை அறிந்தேயாகும். ஆதலின், காவிரியே, உன்னை வாழ்த்துகின்றேன்!" என்பது போன்ற பொருள் நிரம்பிய பாக்கள் சிலவற்றைப் பாடினர்.

"பூவார் சோலை மயிலாடப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை யருகசைய நடந்த தெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே யறிந்தேன் வாழி காவேரி!"

—கானல் வரி, 26.

என்பது அவற்றுள் ஒன்று.

நடுவு நிலையுடையார் இவ்விருவர் செயல்களையும் சீர்தூக்கிக் காண்பரேல், இவை காதல் மிகுதியால்

ஏற்பட்ட ஓர் ஊடல் விளையாட்டென்றே தீர்மானிப்பர். இருவர் செயல்களும் இந்நிலையில்தானே நிகழ்ந்தன? இன்றேல், இவற்றிற்கு வேறு எந்தக் காரணத்தைக் கூறமுடியும்? இவ்விளையாட்டு வினையாய் முடியும் என்பதை இருவரும் அறிந்திலர்.

இச்செயலில் இருவர் நிலைகளையும் நோக்குவோம்:

மாதவியாரோ, "நம் அன்பர் எங்ஙனம் நம் அன்பை அசைத்துப் பார்க்க, நம் மனத்திற்கு மாறுபட்ட ஒரு காரியத்தைச் செய்தனரோ, அங்ஙனமே நாமும், இவர் அன்பை அசைத்துப்பார்க்க இவர் மனத்திற்கு மாறுபட்ட காரியத்தைச் செய்துவிட்டோம்! காதலில் இவருக்கு நாம் தோல்வியடைவோமா! இவருக்கு நம்மாட்டு எத்துணை அன்பு உண்டோ, அத்துணை அன்பு நமக்கும் இவர் மாட்டுண்டு என்பதை இவர் அறிதல் வேண்டும். நாம் அன்பற்றவளாய் இருக்கினல்லவா இவர் எதை நினைக்கினும் எதைச் செய்யினும் நமக்கென்ன என்றிருக்க முடியும்? அஃது நம்மால் ஆகும் காரியமன்று. நம் ஆருயிர்க் காதலர் எதன் பொருட்டு இத்தகைய பாட்டைப் பாடி இருப்பார்? 'இவள் இதைக் கேட்டவுடன் என்ன நிலையை அடைவாள்?' என்பதைச் சோதித்துப் பார்க்கவே இருத்தல் வேண்டும். நாமும் அவ்வாறே இவரைச் சோதிக்கினல்லவா, இவர் மனத்தை நாம் அறிய முடியும்? இதற்கு நாம் யாதொரு செயலையும் மேற்கொள்ளாவிடின், இவர் நம்மை அன்பற்றவள் என்றும், 'இவன் யாரிடமேனும்

அன்பு செலுத்திக்கொண்டு எங்ஙனமேனும் இருக்கட்டும்,' என்னும் மனவேறுபாட்டை உடையவள் என்றும் எண்ணமாட்டாரா? இவ்வமயம் தவறின், இனி எப்போதுதான் உண்மையும் தூய்மையும் கலந்த நம் காதலை இவருக்குக் காட்டுவது?'' என்னும் பல உயரிய எண்ணங்கள் இவர் மாசற்ற மனத்தில் உதித்தெழுந்தன. அதன்பொருட்டே இவர் முற்கூறிய செயலை மேற்கொண்டார்.

கோவலனோ, செப்பமுடையவர் நிலையிலும் நிற்கவில்லை; மாதவியார் நின்ற அன்பு நிலையிலும் நிற்கவில்லை. அவ்வமயம் அவன் தன்மை தனிப்பட்டதாயிருந்தது. இம்முறையில், மாதவியாரின் பாடல் கோவலன் செவியில் நுழைந்ததோ இல்லையோ, அவ்விநாடியே அவன் மனத்தில் கோபத்தீப் பொங்கி எழுந்தது! அவன் அச்சினத்திற்கு அடிமை பூண்டுவிட்டான்! கோபம் அறிவை எரிக்கும் அக்கினியன்றோ! "ஆ! நான் என் நெஞ்சில் கற்பணியாகிய கண்ணகிக்குச் சிறிதும் இடந்தாராது, இப்பொய்யளையே முற்றும் இருத்தினேனே! யான் இதுகாறும் எத்தகைய உண்மை அன்பை இவளிடம் கொண்டிருந்தேன்! இவளை மணம் புரிந்த மனைவியைக்காட்டிலும் மாண்புடையவளெனக் கருதினேனே! எனக்கு இவள் மாட்டிருந்த அன்பில் சிறு பகுதியும் இவளுக்கு என்னிடம் இருப்பதாகத் தெரிந்திலதே! அதை இன்றன்றோ அறிந்தேன்! இத்தனை நாட்களும் இவளுடைய போலிச் செயல்களையும், போலிச் சொற்களையும் உண்மை என நம்பி இருந்த என் அறி

யாமை என்னே! என் பொருள் முற்றும் இவளை வந்தடைந்துவிட்டதன்றோ! இனி என் உறவு இவளுக்கேன்? 'இனி இவன் நம் இல்லத்தில் இருப்பினும் நமக்குச் சுமைதானே! இவனைத் துரத்துதற்கு ஒரு வழி தேட வேண்டும்,' என்னும் எண்ணங்கள் இவள் மனத்தில் தோன்றின போலும்! அதற்கேற்ற சமயமும் கிடைத்தது. இவள் குலத்தின் கொள்கையும், இவள் முன்னோர் களின் போக்கும் இவளை விட்டு நீங்குமோ! காலம் வரும் வரையும் கண்ணியமாக நடந்துகொண்டாள். என்னைப் புறம்போக்கற்குத் தக்க செயலையும் செய்துவிட்டாள். இதையும் நோக்காது இவள் பின் செல்வேனாயின், தன் இல்லத்தைவிட்டு விலகுமாறு வெளிப்படையாகச் சொல்லவும் கூடும்! ஆகலின், இப்போதே, இவ்விடத்திலிருந்தே விலகுதல்தான் உத்தமம்,'' என்று எண்ணினான். அதனால், அவன், மாதவியாரை நோக்காமலும், அவருடன் ஒரு வார்த்தையும் பகராமலும், விரைவுடன் தன் இல்லம் நோக்கி நடந்தான். மாதவியார் பாடிய பாக்களிலிருந்து இத்தனை குற்றங்களையும் இவர் மாட்டுச் சுமத்தியவன், இக்காரியத்தில் முதன்மையாய் நின்ற தன் பாக்களையும் அவற்றின் பொருளையும் உன்னிப் பாராதது, வியப்பினும் வியப்பே! தன் குற்றம் கண்ணிற்கும் மனத்திற் கும் தோன்றாது போலும்! இஃது அறிவுடைய வர்க்கு அழகாகுமா?

மாதவியாரின் மாசற்ற தன்மையைக் காட்டு தற்கு இஃதொரு சிறந்த இடமாகும். இவ்விருவரும்

ஒரு விதமான செயலையே மேற்கொண்டனர். இதில் மாதவியார், தம் காதலன் செய்தது அன்புடைச் செயலென்றும், தாமும் அவ்வன்பின் செயலை அவனுக்குத் திருப்பிக் காட்ட வேண்டுமென்றும் நினைத்தனரேயல்லாமல், அவன் மேற்கொண்டது தம்மை வஞ்சித்தற்கேற்ற தீய செயலென்றும், அவன் தம்மாட்டு இதுகாறும் பொய்யன்பு பாராட்டி வந்தானென்றும், அதனால் அவனை விலக்கிவிடுவதே நலமென்றும் சிறிதும் உன்னினாரல்லர். மாதவியார் தாம் மாசற்றவராய் இருந்ததனாலல்லவா பிறரையும் மாசற்றவர் என நினைத்தார்? குற்றமற்றவர் நெஞ்சில் பிறர் குற்றம் தோன்றுதல் யாங்ஙனம்? இவர் மனப்பான்மையை, இவர் கோவலனுக்கு எழுதிய இரு கடிதங்களாலும், பின் நிகழ்ந்த செயல்களாலும் தெள்ளிதின் அறியலாம்.

கோவலன் தம்மை வெறுத்துச் செல்லுகிறான் என்பதை இவர் முதலில் அறிந்தாரில்லை. விரைவில் திரும்பி வருவானெனச் சென்ற வழியை நோக்கி நின்றார். இவர் எண்ணம் பழுதுபட்டது. பொழுது சாய்ந்தமையின் மிக்க வருத்தத்துடன் தம் தோழியுடன் இல்லம் போந்தனர். நாயகன் பிரிவு இவரைப் பெரிதும் துன்புறுத்திற்று. வீடெல்லாம் வெறுமையாய்த் தோன்றிற்று. என்ன செய்வதென்றும் தோன்றாமல், சிறிது நேரம் திகைத்திருந்தார்; பின்பு தம் நாயகனுக்குக் கடிதம் எழுதுவது எனத் தீர்மானித்தார். அவ்வெண்ணம் தோன்றியதும், இவர் தாழை மடலிலே, சண்பகத்

தின் முகையை எழுதுகோலாகக்கொண்டு, அதைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து, தாம் அந்த இளவேனில் மாலைப் பொழுதிலே நாயகனைப் பிரிந்திருத்தலால் தமக்கு உண்டாயிருக்கும் துன்பத்தைக் குறிப்பித்து, அதைக் கண்டதும் தம் காதலன் தம்மிடம் போதரல் வேண்டும் என வரைந்து, அதைத் தம் தோழி வயந்தமாலையின் கைக்கொடுத்து, "இம்மடலில் எழுதிய பொருள் யாவற்றையும் என் நாயகர் ஏற்கும் முறையில் அவருக்குச் சொல்லி நன்கு உணர்த்தல்வேண்டும்," எனப் பகர்ந்து, அவளைக் கோவலனிடம் அனுப்பினர்.

மாதவியாரின் முடங்கலைப் பெற்றுச் சென்ற வயந்தமாலை, கோவலனைப் பல இடங்களிலும் தேடி, இறுதியில் ஆவணத்தெருவில் கண்டு, மாதவியாரின் கட்டளைப்படியே அதை அவனிடம் ஈந்து, இவர் செப்பிய செய்திகளையும் அவனுக்கு நயமுறத் தெரிவித்தாள். அதைப் படித்துப் பார்த்த பின்பும் அவன் நெஞ்சம் தன் காதலியின்பால் இரக்கங் கொண்டிலது. கடற்கரையில் அவன் கொண்ட எண்ணங்களும் அவன் மனத்திலிருந்து அகன்றில. ஆகலின், அவன் வயந்தமாலையை நோக்கி, "உன் தலைவி செய்த எத்தனையோ நடிப்புகளுள் இஃதும் ஒன்று. இது பொது மகளிர்க்குப் பூணன்றோ! இனியும் இப்பொய் மயக்குகளுக்கு யான் வயப்படுவேனோ!" எனப் பல வசைகளைக் கூறி, வயந்தமாலையைச் செல்ல விடுத்தான். இச்சொற்கள் வயந்தமாலையின் மனத்தைப் புண்படுத்தின. "இனி

இவன் நம் தலைவியை நோக்கி வாரான். இவன் போக்கு வேறுபட்டுள்ளது. இவனுக்கு அவள் மாட்டிருந்த அன்பு எங்ஙனமோ பறந்தோடியது! இவை யாவும் காலத்தின் போக்கேயாகும்! ஆதலின், மாதவிக்கு இவனிடமுள்ள அன்பை அகற்ற வேண்டுமேயன்றி, இவனுக்குப் பழைய அன்பை உண்டாக்க நம்மால் இயலாது. இங்ஙனம் செய்யவில்லையேல், நம் தலைவின் உயிர் நீங்கினும் நீங்கும்!" என மிக்க வருத்தத்துடன் திரும்பிய வயந்தமாலை, தன் தலைவிக்குக் கோவலன்மாட்டு வெறுப்புத் தோன்றுதற் பொருட்டு, "உன் தலைவன் வன்கணாளன்; அருளற்ற நெஞ்சினன். அவனை எண்ணி எண்ணி நீ ஏங்குவதில் பயனின்று," எனக் கோவலன் குணங்களைப் பழித்துக் கூறினாள். அவ்வார்த்தைகளைத் தாங்கலாற்றாத மாதவியார், "அந்தோ! என் காதலர் அருளற்றவர் அல்லர்; கருணையே வடிவெனக் கொண்டவர்; இம்மாலைப்பொழுதில் வருவார்; இன்றேல், நாளைக் காலைப்பொழுதிலேனும் வந்துவிடுவார்," என இயம்பி வருந்திய நெஞ்சினராய் அமளி மிசை இருந்தார்.

> "மாலை வாரா ராயினும் மாண்இழை
> காலைகாண் குவம்எனக் கையறு நெஞ்சமொடு
> பூமல ரமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
> மாமலர் நெடுங்கண் மாதவி."
>
> — வேனிற்காதை. (115 - 118)

என இச்செய்தியை நயம்படக்கூறும் சிலப்பதிகாரம்.

கோவலன் கருதிய வண்ணமும், சிலர் செப்புதல் போன்றும் மாதவியாருக்குக் குலக்குற்றமேனும் குணக்குற்றமேனும் இருப்பின், இவர் இந்த இடத்தில் இத்துணைப் பெருந்தகைமையுடன் நடந்துகொள்ள முடியுமா என்றுதான் கேட்கின்றோம்?

மாதவியார் கருதிய வண்ணம் கோவலன் வந்திலனல்லவா? அப்போதேனும் மாதவியாருக்கு அவன்மாட்டுப் பொருந்தியிருந்த அன்பு குறைந்ததா? அன்றிச் சிறிது வெறுப்பேனும் தோன்றிற்ரு? இல்லையே! அங்ஙனமாயின், இவர் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கவும், இரண்டாம் கடிதம் எழுதியனுப்பவும் மனம் இடந்தாராதல்லவா?

பின்பு கோவலன், கண்ணகியோடு மதுரைக்குச் சென்றுள்ளான். என்னும் செய்தியைக் கேள்வியுற்ற மாதவியார், என்ன செய்கின்ருர்? சென்றவன் திரும்பி வருமளவும் பொறுமையுடன் இருக்க மனம் பொருராய், பணிவும், பண்பும், அன்பும் கலந்த ஒரு கடிதத்தை எழுதிக் கௌசிகன் என்னும் ஓர் அந்தணனிடம் கொடுத்து அனுப்புகிருர்.

"ஞானத்தையுடைய பெரியீர், குற்றமற்ற நான், தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கித் தொழுகின்றேன். நீவிர் வயது முதிர்ந்த தாய் தந்தையர் அருகில் இருந்து அவர்க்கு வேண்டிய பணி இயற்ருது விடுத்ததுமன்றி, நற்குலத்தில் தோன்றிய கற்பிற்சிறந்த மங்கையுடனே, நள்

விரவில் நகரை நீங்கிச் செல்லுதற்கு ஏற்பட்ட குற்றம் யாதோ அறிகிலேன்! அஃது என் குற்ற மாய் இருக்கக்கூடுமோ என, என் நெஞ்சம் துயரத் தில் ஆழ்கின்றது! அங்ஙனமிருப்பினும், மகளிர் சொல், திருத்தமற்ற சொல் எனத் திருவுள்ளத்தில் கொள்ளல் வேண்டும். இஃதன்றியும், உம்மைப் பிரிந்ததனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் மனப் புண்ணை ஆற்றாமலிருத்தலும் உமக்கு நன்றன்று. ஆதலின், உம் புகழிற்குக் குறைவு உண்டாகா வண்ணம் நோக்கிக் கொள்வீராக!" என்பனவே அக்கடிதத்தில் அடங்கிய பொருள்களாகும்.

"வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்:
குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!"

—புறஞ்சேரி இறுத்த காதை, (88-92.)

என்பது அது.

இப்பொருள்கள் பொறிக்கப்பட்ட கடிதத்தை மடித்து, அதன் மேற்புறத்தில் தம் கூந்தல் அடையாளம் (முத்திரை) இட்டுக் கௌசிகன் கையில் தந்தார். அக்கடிதத்தைப் பெற்றுச் சென்ற கௌசிகன், கோவலனைப் பல இடங்களிலும் தேடி, இறுதியில் மதுரைப் புறஞ்சேரியில் ஒரு பொய்கை யிடம் அவனைக் கண்டு, அதை ஈந்தான். அக்கடி தத்தில் இட்டிருந்த கூந்தற்பொறி, தாங்கள் இரு வரும் சேர்ந்திருந்த போது பூசப்பெற்ற நெய்யின் வாசம் வீசிக் கோவலனுக்குப் பழைய நினைப்புகளை

யும் உணர்ச்சியையும் எழுப்பிற்று. ஆதலின், அவன் அதை விரைவில் திறந்து பாராது, அதை உற்று நோக்கிக்கொண்டே சிறிது நேரம் தயங்கி நின்ருன். பின்பு அம்முடங்கலிலுள்ள பொருள்களின் நுட்பங்களை நன்குணர்ந்த கோவலன், மனமுருகி நைந்து, "அவளிடத்தில் யாது குற்றமுமிலது; அவள் தீதற்றவளே! யானே குற்றமுடையவன். என்னிடமே தீதுள்ளது," என மனத்திற்கொண்டு அவ்வோலையில் வரையப்பட்ட வாசகம் தன் தந்தைக்குச் செல்ல விடுதற்கும் ஏற்றதாயிருந்தமையின், அவ்வோலையையே தன் பெற்ரோரிடம் அளிக்குமாறு அவனுக்குப் பணித்தனுப்பினுன்.

முன்னுள் மாதவியார் செய்த செயல் பெருங்குற்றத்தின்பாற்பட்டதென எண்ணி மனச்சலிப்புடன் அவணிருந்து விலகிய கோவலன், பின்னுள் இவர் மாசற்றவர் என்றும், தன்னிடமே மாசுள்ளதென்றும் ஓர் உண்மை உணர்ச்சியை அடைதற்கு, இவர் போக்கிய ஓலையே காரணமெனக் கருதுதல் அத்துணைச் சிறப்புடையதன்று. கோவலன் தம் உண்மையை அறியுமாறு செய்தற்கு இவர் எழுதி அனுப்பிய அவ்வாசகங்கள் ஒருவாறு காரணமாயிருப்பினும், அவ்வாசகங்கள் உருக்கொண்டெழுந்த இவருடைய மனத்தின் மாசற்ற தன்மையே இதற்குச் சிறந்த காரணம் எனச் செப்பலே சாலப் பொருத்தமுடையதாகும். இங்ஙனம் மாசற்ற மனப்பான்மை வாய்ந்த தேவியாரை மாசுற்றவர் என இயம்ப யாருக்குத்தான் மனமெழும்!

5. மாதவியாரின் கோதறு பண்பு

இடையில் பல நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. அவை, இக்கட்டுரைக்கு வேண்டற்பாலனவல்ல. காதலரைப் பிரிந்த மாதவியார், யாவற்றிலும் வெறுப்புற்றுத் தம் அருமை மகள் மணிமேகலையுடன் காலங் கழித்து வருகின்றார். அவ்வமயம், 'கோவலன் பாண்டியனால் கொல்லப்பட்டான்,' என்னும் பேரிடி இவர் செவியில் வந்து நுழைகிறது. அப்பேரிடி இவர் உடலையும் நெஞ்சையும் தாக்குகிறது. உடலும் நெஞ்சும் நிலை குலைகின்றன. ஆயினும், அஃது இவர் உயிரைத் தாக்கிற்றில்லை. அஃது, அங்ஙனம் செய்யவில்லையே என்பதுதான் இவர் பெருங்கவலை! அவ்வாறு நிகழ்ந்திருக்குமாயின், கண்ணகியைப் போன்று இவரும், தம் காதலன் சென்ற சுவர்க்கம் சென்று இன்புற்றிருப்பார். ஆனால், அப்போது நம மாண்பு வாய்ந்த மணிமேகலையின் நிலை என்னாகுமோ, அறியோம்! அதன் பொருட்டே இறைவன் இவரை உயிருடன் நிறுத்தினன் போலும்! பெறற்கரிய தம்மகளைச் செந்நெறியில் செலுத்தல் தம் கடமை என்பதையும், அவள் பொருட்டேனும் தாம் உயிர் தாங்கியிருத்தல் இன்றியமையாதது என்பதையும் உளங்கொண்ட மாதவியார், தமக்குள்ள பெருஞ்செல்வத்தையும் அறவழியிற் செலவிட்டு, முற்றும் பற்றற்றவராய், அந்நகரத்தின்கண்ணுள்ள பௌத்த மடத்தைச் சார்ந்தார். அதற்குத் தலைவராகிய அறவணவடிகளிடம் இவர் கேட்ட நற்பொருள்கள் பலவாகும். தம் ஆன்ம உய்விற்கேற்ற உயர் பொருள்களைச் செவி

மடுப்பதிலேயே இவருடைய பெருங்காலம் கழிந்தது. ஆனால், இவர் தாய் சித்திராபதி பல சமயங்களில் பல முறைகளில் இவரைத் தன் வசப்படுத்தவும் தன் குலத்தொழிலில் நுழைக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் அளவிறந்தன. இப்பொய்ச் சூழ்ச்சிகளும், இவ்வற்ப வார்த்தைகளும் மெய்யறிவாகிய குன்றத்தின்மேல் உறுதியுடன் நிலைபெற்றிருக்கும் நம் அன்னையார் மனத்தைச் சிறிதேனும் அசைக்க முடியுமா? பின்பு சித்திராபதியே மனமும் உடலும் சோர்ந்து இவரைக் கைவிட்டனள். இங்ஙனம் தம் குலப்போக்கை அறுத்தெறிந்து, உடலழகை உதறித் தள்ளி, பணச் செருக்கைப் பறித்தெறிந்து, கல்வியும் அறிவும் கற்புமே தமக்குத் துணை எனக்கொண்டு உயர் நிலையில் நின்ற மாதவியாருக்கு மாசேது! நற்குடி மகளிரினும் ஞானமுற்று முன்னணியில் நின்ற இவரா குற்றமுடையவர்! இவரையா தூய்மையற்றவர் எனச் செப்புவது! சொல்வார் சொல்லினும் கேட்பார் சிந்தித்தல் வேண்டாவா?

இம்மாதவியார் மகளை வளர்த்த மாண்பன்றோ, மணிமேகலையை அறச் செல்வியாய் — காமனைக் கடந்த கன்னியாய்—தன்னலங்கருதாத் தையலாய் —அருள் நிறைந்த அரிவையாய்—புலவர் போற்றும் பூவையாய் விளங்கச் செய்தது! அம்மணிமேகலை இளமையிலேயே துறவு பூண்டு, அமுதசுரபியைத் தாங்கி, அருள் தெய்வமாய் நின்றாள். பசித்தவர் இன்முகத்தைக் காண அவள் கை அன்னத்தை அள்ளி அள்ளி அவர்கட்கு ஊட்டிற்று. அச்செய

லயே தனக்கு இன்பமெனக் கருதினள். அவள் பண்பு தனக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மையே புரிந்தது. அவள் மதவாதியர் பலரையும் வெல்லும் கல்வி அறிவையும் பெற்றிருந்தாள். இத்தகைய நலங்கள் பல வாய்க்கப்பெற்ற மணிமேகலையின் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதற்கு முன்பு, அம் மாண்புடையவளைப் பெற்று உயர் சால்புகளோடும் உருப்படுத்திய மாதவியாரிடமல்லவா அறிஞர் உள்ளம் செல்லாநிற்கும்! ஒரு தாயார் அறநெஞ்சுடையராய், மாசற்ற மனமுடையராய், விரிந்த மனப் பான்மையுடையராய் இலராயின், அவரிடம் நற்பண்பமைந்த ஒரு மகவு தோன்றுதல் யாங்ஙனம்! இம் முறையில் மணிமேகலையின் தோற்றமும் மாதவியார் மாசற்றவர் என்பதை நிலைநிறுத்தவில்லையா? 'நூலைப்போலச் சேலை, தாயைப்போலப் பிள்ளை,' என்பது பழமொழியன்றோ?

இக்கட்டுரையினால், மாதவியார், நுட்பமதி வாய்ந்தவரென்றும், இசையிலும் நாடகத்திலும் பேரறிவு பெற்றிருந்தாரென்றும், சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரு சங்க காவியங்கட்கும் உயர்வளித்தவர் இவரே என்றும், சிலப்பதிகாரம் முத்தமிழ் நூலாகத் திகழ்தற்கு இவரே காரணரென்றும், சேற்றில் தாமரை பூத்தல் போன்று ஒழுக்கமற்றவர் குலத்திலும் ஒழுக்கமுடையவர் தோன்றக் கூடும் என்பதை நிலை நிறுத்த இவர் தக்க சான்றாவார் என்றும், இவர் கோவலனோடு சேர்ந்து இல்லறம் நடத்துங்கால் குல மகளிரினும் பன்மடங்கு உயர் நிலையில் நின்றனர் என்றும்,

இவர் மரபின்படி இவர் வாழ்க்கை பொருளைப்பற்றியதாயிராமல், அன்பையே கொழுகொம்பாகப் பற்றியிருந்ததென்றும், கோவலனும் இவரும் ஒருவரைவிட்டொருவர் பிரிதற்கு இவர் அடிகோலியவர் அல்லரென்றும், மிக்க இளமையிலேயே கணவனைப் பிரிய நேர்ந்த போதும், தம் மரபிற்கேற்ப வேறு நாயகரைச் சேர்ந்து வாழ்தற்குரிய வசதிகளும், வேண்டிய இன்பங்களை வேண்டியவாறே துய்த்தற்குப் போதிய பொருளும், கட்டமைந்த உடல் நலமும் வாய்ந்திருந்த போதும், யாவற்றையும் ஒருங்கே வெறுத்துத் தள்ளிய துறவு உள்ளங்கொண்டவர் என்றும், கணவன் காரணமின்றியே தம்மை உதறித் தள்ளியதை அறிந்திருந்தும், அவனுக்குத் தம் பழுதற்றநிலையைத் தெரிவித்துப் பின்னும் அவனை அடைய வழி கோலிய இயல்புடையவரென்றும், இதற்கு இவருடைய இரு கடிதங்களே சான்று பகர்கின்றன என்றும், தாம் குற்றமுடையவரெனக் கருதிய தம் நாயகன் வாக்கின் மூலமாகவே தாம் குற்றமற்றவர் என்னும் உண்மையை உறுதிப்படுத்தக் கூடிய அத்துணை மாசற்ற தன்மை இவரிடம் பொருந்தியிருந்தது என்றும், இவருடைய தூய்மையே மணிமேகலையை அறச்செல்வியாக்கிற்று என்றும், இவருடைய மாசற்ற தன்மையை நிலைநாட்டுதற்கு மணிமேகலையின் உயரிய செயல்களே போதியன என்றும், ஆதலின், மாதவியார் மாசற்றவர் என இயம்புதற்கு ஒருவரும் பின வாங்கார் என்றும் அறிந்துகொண்டோம்.

உ. பசிப்பிணியைப் போக்கியது அமுதசுரபியா, அறிவையரா?

1. அமுதசுரபியின் அற்புதம்

இத்தலைப்புச் சிலருக்கு ஐயத்தையும், சிலருக்கு நகைப்பையும், சிலருக்கு மகிழ்வையும் தோன்றச்செய்யும்: அமுதசுரபி என்பது இன்னது என்பதையே அறியாத சிலருக்கு, "இஃது என்ன? இங்ஙனமும் ஒரு பொருள் இருந்ததா?" என்னும் ஐயப்பாடு தோன்றுமன்றோ! இதைக் குறித்துச் சிறிது அறிந்தவர், "அமுதசுரபி அன்னத்தைப் பெருக்கி யாவருடைய பசிப்பிணியையும் நீக்கியதென்பது யாவரும் அறிந்தவொன்று. இங்கு அறிவையர் வந்து நிற்பானேன்? இஃதென்ன ஒரு கேள்வி?" எனச் சொல்லிச்சொல்லி நகையாடாநிற்பரல்லரா? மணிமேகலை என்னும் நூலை முற்றும் கருத்துடன் படித்தவரோ, இத்தலைப்பின் உண்மையை நோக்கி மகிழக்கூடும். ஆயினும், யான் இந்நூலில் செப்பப்போகும் பொருள்கள், இம்மூத்திறத்தினருக்கும் மன நிறைவையும் உவகையையும் விளைக்குமோ, அன்றி மனக் குறைவையும் ஏமாற்றத்தையும் அளிக்குமோ அறியேன். எங்ஙனமாயினும், என் புல்லறிவிற்கெட்டியவற்றைப் பகராமலிருக்க என் மனம் இடந்தந்திலது; ஆகலின், இதில் குற்றங்குறைகள் இருப்பின், ஆன்றோர் பொறுப்பாராக!

மணிமேகலையின் ஆசிரியர், பாத்திரம் பெற்ற காதையில் 'ஆபுத்திரன் கை அமுதசுரபி' என்றும், பாத்திரமரபு கூறிய காதையில் 'திருந்து முகங்காட்டும் தெய்வக் கடிஞை' என்றும், பாத்திரங்கொண்டு பிச்சை புக்க காதையில் 'அறனேடு, உலகின் வான் துயர் கெடுக்கும் வற்றாப் பாத்திரம்' என்றும் அமுதசுரபிக்குப் பல பெயர்களை இயம்புகின்றார்.

இவற்றின் பொருளை நோக்குவாம்:

அமுதசுரபி: இச்சொற்றொடரில் அமுதம், சுரபி என்னும் இரு சொற்கள் உள்ளன. அமுதம் என்பது உணவு என்றும், சுரபி என்பது காமதேனு என்றும் பொருள்படும். இதனால், இஃது அமுதம் போன்ற உணவைக் காமதேனுவைப் போன்று வரையாது கொடுக்கும் இயல்புடையது என்பதை அறிந்தோம்.

தெய்வககடிஞை: இரு சொற்களால் அமையப் பெற்ற இது, தெய்வத்தன்மை வாய்ந்த பாத்திரம் எனப் பொருள்படும். பாத்திரத்திற்குத் தெய்வத்தன்மை யாது? தன்னை நோக்கி வந்தவரின் பொறுத்தற்கரிய பசிப்பிணியை நீக்கி, அவர் இனிய முகத்தைக் காணச்செய்யும் இயல்பு இப்பாத்திரத்திற்கு உண்டாதலின், இதைத் தெய்வப் பாத்திரம் என்றார். ஒருவர் துன்பத்தை நீக்கி இன்பத்தை ஈவது தெய்வத்தன்மை அன்றோ? இதனாற்றான், ஆசிரியர் இதற்குத் 'திருந்து முகங்காட்டும்' என்னும் அடைமொழியைத் தந்துள்ளார் போலும்! ஈண்டு,

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்?"

என்னும் தெய்வப்புலவர் வாக்கை நோக்குக.

அறனோடு — அறன் + ஓடு என்னும் இச் சொற்கள் அறத்தன்மை வாய்ந்த ஒரு பாத்திரம் எனப் பொருள்படும். ஒரு கால், பாற்கடல் தந்த அமுதத்தில் தேவருண்ட மிகுதியைத் திரட்டி வைத்தது போன்ற இவ்வறவோடு, பஞ்சத்தினல் நெருக்குண்டு, பசியினல் வருந்தும் உலக மக்களின் ஆறாத்துன்பத்தை அறவொழிக்கும் இயல்புடையது என்பது ஆசிரியர் கருத்து.

இன்னும், இதற்கு அட்சயபாத்திரம் என்றும் கடவுள் கடிஞை என்றும் சில பெயர்களும் வழங்குகின்றன. ஆகவே, இவ்வமுதசுரபி, பாற்கடலில் திரட்டியெடுத்த அமுதம் போன்ற உணவை வரையாது கொடுத்து, மக்களின் பசிப்பிணியாகிய ஆற்றொணத் துன்பத்தை அற ஒழித்து, அவர்கள் இன்முகம் பெறுமாறு செய்யும் வன்மையுடையதெனத் தெளிந்தோம்.

இத்துணை நலமமைந்த இவ்வமுதசுரபி உலகிற்கு வந்த வழி யாது?

வாரணசியில் வாழ்ந்த வேதம் ஓதுவிப்பவனுகிய அபஞ்சிகன் என்னும் அந்தணன் மனைவி சாலி என்பாள், ஒழுக்கத் தவற்றல், தனக்கு ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக்கொள்ள, கன்னியாகுமரியில் நீராடச் சென்றள். அவ்வமயம் பூரண

கர்ப்பிணியாயிருந்த அவளுக்குக் கொற்கை நகரத்தின் இடைச்சேரியில், ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதை அவள் அங்குள்ள ஒரு தோட்டத்தில் விடுத்துச் சென்றாள். அவணிருந்த பசு ஒன்று, ஏழு நாட்கள் வரையும் தன் பாலை ஈந்து அம்மகவைக் காத்து வந்தது. பின்பு மனைவியுடன் அவ்வழியே போந்த பூதி என்னும் ஓர் அந்தணன், அம்மகவை எடுத்துச் சென்று, ஆபுத்திரன் எனப் பெயரிட்டு, அவனைத் தன் மகனெனவே பாராட்டிக் கல்வி முதலியவற்றைக் கற்பித்து வளர்த்து வந்தான்.

ஆபுத்திரன் ஒரு நாள், யாகத்தில் கொலைசெய்தற்பொருட்டு ஓர் அந்தணன் வீட்டில் கட்டியிருந்த பசு, மிகவும் அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்புவதைக் கண்டான். அவன் அருள் நிறைந்த உள்ளம் அதைத் தாங்கிற்றில்லை. ஆதலின், அவன் நடு இரவில் அப்பசுவைக் கைப்பற்றி ஊருக்கு வெளியே சென்றான். அதைத் தேடிச் சென்ற அந்தணர், ஆபுத்திரனைக் கண்டு, அவனைத் துன்புறுத்தினர். அவன் செப்பிய நீதிகளுள் ஒன்றும் அவர்கள் செவியில் நுழைந்திலது. ஆபுத்திரன் பிறப்பை அறிந்த அந்தணன் ஒருவன், "இவன் ஒழுக்கந் தவறிய சாலியின் மகன். ஆதலின், இவனை ஒருவரும் தீண்டாதீர்," எனப் பகர்ந்தான். அவனை வளர்த்த பூதியும் அவனை அசுத்தன் எனக் கருதிக் கைவிட்டான். அவ்வூரில் வாழும் மக்களால் அவனுக்குப் பல இடையூறுகள் நேர்ந்தமையின், அவன் தென்மதுரையைச் சேர்ந்து, அவணுள்ள சிந்தாதேவியின் கோவிலின் முன்னுள்ள

அம்பலத்திற்றங்கி, பிச்சை ஏற்றுக் கிடைத்த அவ்வுணவைக் கண்ணற்றவர், காலற்றவர், ஆதரவற்றவர், பிணியுற்றவர் முதலியவர்க்கு முன்னர் ஊட்டி, மிகுந்ததைத் தான் உண்டு காலங்கழித்து வந்தான்.

அவன் அம்பலத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு நாளிரவில், சிலர் பெரும்பசியுடன் அவனிடம் வந்து, "அந்தோ! எங்களைப் பசி வருத்துகின்றதே! நாங்கள் என் செய்வோம்!" என ஓலமிட்டழுதனர். அவர்கள் கொடும்பசியின் துன்பத்தைப் பொறுத அவன் மனம் கசிந்துருகியது. அவ்வமயம் சிந்தா தேவி என்னும் தெய்வம் அவன் முன் தோன்றி, "மகனே, இவ்வட்சய பாத்திரத்தைக் கைக்கொள்வாயாக! நாடு முற்றும் பஞ்சத்தினல் பரிதவிப்பினும் இப்பாத்திரத்தில் இடும் உணவிற்குப் பஞ்சம் உண்டாகாது. இதிலிட்ட உணவு எடுக்க எடுக்க வளர்ந்துகொண்டே வரும். இப்பாத்திரத்தினுள்ள அன்னத்தை எடுப்பவர் கை வலிக்குமே அன்றி, இதிலுள்ள அன்னம் குறையாது," எனச் சொல்லி, அத்தெய்வம் அப்பாத்திரத்தை அவன் கைக் கொடுத்தது. அது,

யாவரு மேத்து மிருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
'ஏடா அழியல்; எழுந்திது கொள்ளாய்;
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது;
வாங்குநர் கையகம் வருந்துத லல்லது
தான்றொலை வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திர மவன்கைக் கொடுத்தலும்

— பாத்திரமரபு கூறிய காதை, 10-16

என்பதனால் விளங்கும். அதைப்பெற்ற ஆபுத்திரனுடைய ஆனந்தத்திற்கு அளவு கூற இயலாது. அவன் அப்பாத்திரத்தினால் மக்கள், விலங்குகள், பறவைகள் யாவற்றிற்கும் உணவூட்டி மகிழ்ந்தான்.

ஆபுத்திரன் அறச்செயலினால் தன் பதவியைக் கொள்ளை கொள்வானோ என்றஞ்சிய இந்திரன், ஒரு முதிய அந்தணன் போன்று வடிவு கொண்டு அவன் முன் தோன்றி, "யான் இந்திரன்; உனக்கு அருள் புரிதற்பொருட்டு வந்தேன். உனக்கு வேண்டும் வரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொள்," என்றான். அதைச் செவியேற்ற ஆபுத்திரன்—நகைத்து, "வருந்திவந்தவர் பசியைப்போக்கி, அவர் இன்முகங்காணுமாறு செய்யும் இத்தெய்வப் பாத்திரம் ஒன்றே எனக்குப் போதியதாகும். யான் மற்றொன்றையும் விரும்பிலேன்," என விடையிறுத்தான். அதனால் சினங்கொண்ட இந்திரன், எங்கும் மழை பெய்வித்துச் செல்வத்தை மலியச்செய்தான். உணவின்பொருட்டு ஆபுத்திரனிடம் ஒருவரும் வந்திலர். ஊர் எங்கும் சென்று, "உண்பவர் யாரேனும் உண்டோ?" எனக்கேட்டான். இச்சொற்களைச் செவியுற்ற யாவரும் அவனை இகழ முற்பட்டனர். இதனால், ஆபுத்திரன் பெருஞ்செல்வத்தை இழந்தவன் போன்று செல்லுங்கால், சிலர் "சாவகநாடு வறுமையால் வருந்துகின்றது. அங்குச் செல்க!" என்றனர். அதைக் கேட்டதும் அவன் இழந்த செல்வத்தைப் பெற்றவன் போன்று மகிழ்வு கூர்ந்து, அந்நாட்டிற்குச் செல்லும் கப்பலிலேறிப் போயினன். அது மணிபல்லவத்தீவில் ஒரு நாள்

தங்கிற்று. அவண் இறங்கிய ஆபுத்திரனை நோக்காத மீகாமன், கப்பலைச் செலுத்திவிட்டான். அதை அறிந்ததும் ஆபுத்திரனுக்கு ஆராத்துயரம் மேலிட்டது. அவன், "யாருமற்ற இவ்விடத்தில் இவ்வோட்டை வைத்துக்கொண்டு யான் உயிருடன் வாழ்வதில் யாது பயன்!" எனக் கருதினன். ஆதலின், அவன், தன் தெய்வக்கடிஞையை நோக்கி, 'ஆண்டிற்கொருமுறை நீ இப்பொய்கையின்மேல் தோன்றுவாயாக. அருளோடுங்கூடி அறஞ் செய்தலையே தம் கடமையாக மேற்கொண்டு, எல்லா உயிர்களையும் பாதுகாப்பவர் யாரேனும் வருவாராயின், அவர் கையிற்சென்று சேருவாயாக," எனச் செப்பி, அதை அவணிருந்த கோமுகிப் பொய்கையில் விட்டான்; பின்பு அவ்விடத்திலேயே பட்டினி கிடந்து உயிர் துறந்தான். அவ்வறனோடுதான் மணிமேகலா தெய்வத்தினல் மணிபல்லவத்தில் கொண்டுவிடப்பட்ட நம் அறச்செல்வியின் கையில் வந்துற்றது. அவ்வமுத சுரபியைகொண்டு, நம் தெய்வப்பாவை, யார் யாருக்கு என்னென்ன நலங்களைப் புரிந்தாள் என்பதன் விளக்கம் ஈண்டைக்கு வேண்டற்பாலதன்று. இது நிற்க.

தேவாமிர்தம் போன்ற உணவை உதவி மக்கள் உயிரை நிலைபெறச் செய்யும் தெய்வத்தன்மை வாய்ந்த அமுதசுரபி என்னும் இப்பாத்திரம், சாமானியமானதன்று. இது தெய்வத்தால் தரப்பட்டது. தெய்வத்தன்மை வாய்ந்தது; பிணிகளுக்கெல்லாம் தலை நின்ற கொடிய பசிப்பிணியை நீக்க வல்லது; உடலை விட்டுப் பிரியவிருக்கும் உயிரை நிலைநிறுத்த

வல்லது; ஊக்கத்தையும், இன்சொற்களையும், இன்முகத்தையும் உண்டாக்க வல்லது; பசியினால் செய்யும் பாவத்தொழில்களை அறவே ஒழிக்கக்கூடியது; முற்றத் துறந்த முனிவரும் வயிற்றுக்கொடுமையினால் செய்யும் தீச்செயல்களைத் தடுக்கவல்லது. இங்ஙனமே இயம்பிச் செல்லின், இதன் சீர்மைகள் அளவில் அடங்குவன அல்ல.

இப்பாத்திரத்தை ஆபுத்திரனும் மணிமேகலையும் தங்கள் கரத்தில் வைத்துக்கொண்டே, வந்தவர்க்கு உணவூட்டினர் எனக் கூறப்படுகின்றமையின், இக்கடிஞை அவர்தம் கையில் அடங்கக் கூடிய அத்துணைச் சிறியதென அறிகின்றோமல்லவா? ஒருவர் வயிற்றுப் பசியை அடக்கக் கூடிய அளவான உணவையும் கொள்ள முடியாத ஒரு சிறு பாத்திரம், ஆயிரக்கணக்கானவர் பசியை ஆற்றுவித்தது என்பது பெருவியப்பைத் தருவதொன்றன்றோ?

2 ஆதிரையாரின் தீதறு கற்பு

இத்தெய்வப் பாத்திரம் இங்ஙனம் ஊற்றுநீர் போன்று அன்னத்தை எடுக்க எடுக்கச் சுரவாநிற்கும் என்னில், இவ்வன்னத்தை முதன்முதலில் இப்பாத்திரமே தோற்றுவித்ததா, அன்றி வேறெங்கேனுமிருந்து இதைப் பெற்றதா என்னும் ஓர் ஐயப்பாடு தோன்றுமன்றோ? இதை அறிவதற்கு நாம் நூலிடந்தான் செல்லல் வேண்டும். "அவ்வமுத சுரபியில் பெய்த ஆருயிர் மருந்தன்ன அன்னம், மேன்மேலும் பெருகி, அதை எடுத்துப் பிறருக்கு

ஊட்டுபவரின் கையை வலிக்கச்செய்யுமேயன்றி அது குன்றுதல் இல்லை" எனத் தீவதிலகை மணிமேகலைக்கும், "பாத்திரத்தில் இட்ட அன்னம், பசித்தவரின் வாடிய முகங்கண்டு பெருகுதலைக் காணும் விருப்பத்தைக் கொண்டுள்ளேன்," என மணிமேகலை தீவதிலகையினிடமும் கூறுவதிலிருந்து, அக்கடவுட்பாத்திரம், ஒருவரால் இடப்பட்ட அன்னத்தைப் பெருக்கும் இயல்புடையதேயன்றி, அது தானாகவே அன்னத்தைத் தோற்றுவிக்கும் தன்மையுடையதன்று என்பதை அறிந்தோம். இங்கு, 'இல்லது தோன்றாது; உள்ளது போகாது,' என்னும் தத்துவத்தை நோக்குக.

இதனால், உலகப் பண்டங்களை நன்கு காண்பதற்குக் கண்ணொளியும் ஆதித்தனொளியும் எங்ஙனம் இன்றியமையாதனவோ, அங்ஙனமே மக்கள் பசியை ஆற்றுதற்குப் பாத்திரமும் அன்னமும் இன்றியமையாது இருத்தல் வேண்டும் என்பது தெள்ளிதின் புலப்படுகின்றது. இது மட்டுமன்றி, அமுதசுரபி ஓரிடத்திலும், அன்னம் மற்றோரிடத்திலும் இருப்பினும், பயனளியா என்பது நமக்குத் தெரியும். ஆகலின், இரண்டும் ஒன்று சேருதல் வேண்டும். அப்போதே அவற்றாலாய நலனை நாம் அடையக்கூடும்! எங்ஙனம் ஆதித்தன், செவிப்புலன் வாய்ப்புலன்களோடு சேர்ந்த காலத்தில் பொருள்களை விளக்கப்படுத்தாமல், தன்னைப்போன்றே ஒளி வீசும் இயல்பு வாய்ந்த கட்புலனோடு சேர்ந்த காலத்திலேயே தன் செயலைச் செய்கின்றானோ, அங்ஙனமே

இவ்விரண்டும் ஒன்று சேர்ந்த காலத்திலேயே பயனளிக்கும் என்னில், இவ்விரண்டிற்கும் ஒரே தன்மையான மேன்மைகள் அமைந்திருக்க வேண்டுமல்லவா? இம்முறையில் இவை இரண்டனுள் அமுதசுரபி ஒரு தெய்வத்தால் ஈயப்பட்டதென்பதும், தெய்வத்தன்மை வாய்ந்ததென்பதும் அறிவோம். இனி, மணிமேகலை ஏந்தி நின்ற அவ்வமுதசுரபியில் இடப்பட்ட அன்னம், அத்தன்மைகளைப் பெற்றிருந்ததா என்பதை நோக்குதல் வேண்டும்.

மணிமேகலை பிக்குணிக் கோலம்கொண்டு அமுதசுரபியைக் கையிற்றாங்கி வீதியை அடைந்தாள். இவளை இன்னாள் என அறிந்த பலர், இவளைச் சூழ்ந்துகொண்டனர். யானைத்தீ என்னும் பிணியினுல் பன்னிரண்டாண்டுகள் துன்புற்று வருந்திய காயசண்டிகையும் அவண் வந்துசேர்ந்தாள். அவ்வமயம் மணிமேகலை, காயசண்டிகையை நோக்கி, "இதில் கற்பிற்சிறந்த மகளிர் அன்புடன் இடும் ஐயத்தையே (அன்னத்தையே) முதலில் ஏற்றுக்கொள்ளுதல் மிக்க தகுதியுடையதாகும்," என்கிறாள்.

இதைக் குறித்துச் சிறிது ஆராய வேண்டும்: நம் தேவி, தெய்வத்தன்மை வாய்ந்த அத்தெய்வப்பாத்திரத்தில் யாரிடம் அன்னம் பெற விழைகின்றாள்? வீரம் கொடைகளில் சிறந்த ஆண் மக்களிடமா? அன்றி அழகும் செல்வமும் பொருந்திய பெண்மகளிரிடமா? பத்தினிப் பெண்டிரிடமேயாகும். பத்தினி என்பதற்குப் பொரு

ளென்ன? 'கற்பு வாய்ந்தவள்' என்பதாகும். கற்பு என்பது மற்றச் சொற்களைப்போன்று, இரண்டொரு பொருள்களையே கொண்ட சொல்லன்று. அது கல்வி, நீதிநெறி, மகளிர் நிறை. உறுதிப்பாடு என்னும் பல பொருள்களைத் தரும், எம்மங்கை அறிவு நூற்கல்வியும், நன்னெறியின் கோட்பாடும், மனவுறுதியும் பெற்றிருக்கின்றனளோ, அவளே, பெற்றோருக்கும், சுற்றத்தினருக்கும், உலகத்திற்கும் ஏற்ப நடந்து, தன்னை இல்லாளாகக்கொண்ட கணவன் தீயனாயினும்' அவனை நல்வழிப்படுத்தி, அவனையே தெய்வமெனக் கருதி ஒழுகுவள். அவளைத்தான் பெரியார் உயர்ந்த கற்புடையவளென்றும், பண்புடைப் பத்தினி என்றும் பகர்கின்றனர். கொடியவரை எரிக்கவும், பகலவனை மங்கச்செய்யவும், மழையைப் பெய்விக்கவும், கடல் கொண்ட கணவனையும் மீட்கவும் அவளால் முடியும்! அவள் வாழும் இடம் தேவருலகமாகவும், அவள் தொட்ட பொருள்கள் தெய்வத்தன்மை பொருந்தியனவாகவும் இருப்பதோடல்லாமல், அவளே தெய்வமாகவும் விளங்குவாள். அவளைச் சார்ந்தவர்க்குத் துன்பமேது? அவள் கைப்பட்ட பண்டங்களுக்குப் பாவமேது? அருள் நிறைந்த அவளுள்ளம், பிறர் நலத்தையே நாடி, பிறர் இன்பத்தையே நோக்கித் தொழில் புரியாநிற்கும். அருளையே தனக்கணியாகக் கொண்ட அவள், தான் கருதியது கருதியபடியும், தான் பகர்ந்தது பகர்ந்தபடியும் முடிவதற்கான தெய்வ அருளை நிரம்பப் பெற்றிருப்பாள். இன்னும்

அவளிடம் அமைந்திருக்கும் நலன்கள் பலவற்றை யும் விளக்கமாகச் சொல்வதற்கு இஃது இடமன்று. கற்புடைய மகளின் பெருமிதங்கள் யாவற்றையும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்?"

எனச் சில சொற்களால் ஒருங்கு திரட்டிப் பகரு கிறார் செந்நாப்போதார். தெய்வத்தால் தரப்பட்டுத் தெய்வத்தன்மை வாய்ந்த அவ்வமுதசுரபியில், தெய்வமென விளங்கி, தெய்வ இயல்பு அமைந்த பத்தினி மகளின் பரிசம் பட்ட அன்னத்தைப் பெறத்தானே அறிஞர் கருதுவர்? அங்ஙனமே நம் அன்னையின் கருத்தும் சென்றது.

மணிமேகலையின் கருத்தையும் சொல்லையும் நன்கு அறிந்த காயசண்டிகை, "தேவியாரே, நம் பட்டினத்தில் ஆதிரை என்னும் ஒரு கற்பரசி வாழ் கின்றாள். ஒருகால் அவள் கணவன் வாணிகத்தின் பொருட்டு ஏறிச்சென்ற கப்பல் கடலில் கவிழ்ந்தது. அதில் சென்ற மற்றவர் யாவரும் கடலுக்கிரை யாயினர். ஆயினும், அவள் கற்பின் வன்மையினால், அவன்மட்டும் உயிர் பிழைத்து நாகருலகம் சென்று உறைந்தான். மற்றவரைப்போன்றே தன் கணவ னும் மாண்டிருப்பான் என்னும் தீர்மானத்தைக் கொண்ட ஆதிரை, தீப்பாய்ந்தாள். அத்தீ அவளை எரித்திலது. அவ்வமயம், "யான் தீயும் எரிக்காப் பாவியானேனே! இனி என் உயிரை ஒழிக்க எவ்வழி யைத் தேடுவேன்!" எனப் பெரிதும் வருந்திய ஆதிரைக்குத் தெய்வம் அசரீரியாய் நின்று, "நீ

வருந்தற்க! உன் கணவன் நாகருலகத்தில் உயி ருடன் இருக்கின்ருன். இன்னும் சின்னுட்களில் சந்திரதத்தன் என்னும் வணிகனுடன் இவண் திரும்புவான்,' எனப் பகர்ந்தது. அங்ஙனமே அவன் ஊர் வந்து சேர்ந்தான். இருவரும் இன்பத்துடன் வதிகின்றனர். ஆதலால், இத் தெய்வப் பாத்திரத்தில் முதன் முதல் அன்ன மிடுதற்கு அவளே தகுதியானவள்,'' என இயம்பினுள்.

இவ்வரலாற்றைச் செவி ஏற்ற மணிமேகலை, ஆதிரையாரின் கற்பின் திறத்தில் வியப்பும், அவ ரிடம் மதிப்பும் கொண்டு, தெய்வப்பாத்திரத்தைத் தாங்கி, அவரகம்புக்குச் சித்திரத்தில் எழுதிய பாவையைப் போன்று ஒன்றும் பேசாது நின்ருள். இது பிச்சை பெறும் போது துறவறத்தினர் மேற் கொள்ளும் கொள்கையாகும். அக்குறிப்பை அறிந்த ஆதிரையார், என்ன செய்தார்? பிச்சைப் பாத்திரம் ஏந்தி அறக்கடவுளென நின்ற மணி மேகலையை வலமாகச் சுற்றி வந்து தொழுதார்; தமக்கு மட்டுமேயன்றிப் பலருக்கும் பயன்பட வேண்டுமென்னும் தூய எண்ணத்துடன், தம் தூய கரங்களினுல் சமைத்த அன்னத்தைக் கொணர்ந்தார்; கொணர்ந்த அன்னத்தை, “ இங் ஙனம் மேன்மேலும் பெருகி, உலக மக்கள் யாவ ருடைய பசிப்பிணியையும் ஒழித்தல் வேண்டும்,'' என்னும் இனிய சொற்களைச் சொல்லிக்கொண்டே அப்பிச்சைப் பாத்திரத்தின் நிறைய இட்டார்.

இங்ஙனம் கற்புக்கடம் பூண்ட ஆதிரையார், தாம், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், ஒக்கல் என்னும் ஐம்புலத்தாருக்கும் பகுத்தளித்துண்ணும் உணவை அப்பாத்திரத்தில் இட்டவுடன், அஃது, அறவழியில் ஈட்டிய பொருள் அறஞ்செய்யும் இயல்புடையாரிடம் மேன்மேலும் வளர்தல் போன்று, எடுக்க எடுக்கக் குறையாது வளர்ந்து, பலர் பசிப் பிணியையும் பறித்தொழித்தது. இதனால், அமுத சுரபியைப்போன்றே, அதிலிட்ட அன்னமும், உயர்ந்த கற்பொழுக்கம் வாய்ந்த ஒரு பெண் தெய்வத்தினால் அளிக்கப்பட்டதென்பதும், அற வோர், துறவோர் முதலிய பல்லோர் பசியை ஆற்றி அவரைப் பாதுகாக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த தென்பதும் அறிந்தோம்.

இதுகாறும் இயம்பிக்கொண்டு வந்தவற்றால், பிறரால் இடப்பட்ட அன்னத்தைப் பெருக்கும் இயல்புடைய அமுதசுரபியும், தானே பெருகாநிற் கும் அன்னமும் ஒரே இயல்பு வாய்ந்தவை என் பது பெறப்பட்டது.

3. அரிவையரின் ஆற்றல்

இனி இவ்விரண்டிற்கும் ஏற்றத்தாழ்வுண்டா என்பதை நோக்குவோம்: காயசண்டிகை என்பவள் யானைத்தீ என்னும் நோயினால் பன்னிரண் டாண்டுகள் துன்பப்பட்டாள் என்பதை முன் னரே குறித்துள்ளோம். யானைத்தீ என்பது ஒரு நாளில் மிக்க சோற்றையும் கறியையும் பன்முறை உண்டாலும் வயிற்றெழுந்த பசியடங்காமல் வருத்

தும் ஒரு வித நோய். அந்நோயினுல் ஓராண்டு ஈராண்டுகளன்றி, பன்னிரண்டு ஆண்டுகள் அவள் துன்பப்பட்டாள். அக்கொடிய நோய் மணி மேகலை அமுதசுரபியிலிருந்து எடுத்துத் தந்த ஒரே பிடி அன்னத்தால் மாய்ந்தொழிந்தது என்னின், அவ்வன்னத்தின் மேன்மையும் தெய்வத் தன்மையும் சொல்லுந்தரமுடையனவோ!

இந்த இடத்தில் இன்னுமோர் ஐயப்பாடு தோன்றலாம்: அது, 'காயசண்டிகையின் நோயை நீக்கியது அமுத சுரபியா, அன்னமா?' என்பது. அமுத சுரபியின் இயல்பென்ன? பிறரால் இடப் பட்ட அன்னத்தை மேன்மேலும் பெருக்குவது. இப்பெருக்கு என்ன நலனை அளிக்கும்? பல கவளங் களால் ஒருவர் பசியை ஆற்றுவிக்கும்! ஆனல், எத்தனை முறை எத்தனை கவளங்களை உண்டாலும் அடங்காத ஒரு வகையான பசிப்பிணியை அப் பாத்திரம் நீக்குமா? நீக்காதென்பது, மேற்கூறிய பாத்திரத்தின் இயல்பினுல் நன்கு அறிந்தோம். அங் ஙனமாயின், காயசண்டிகையின் அடங்காப் பசியை அடக்கியது, அன்னத்தின் மகிமையே என்பதைத் தெள்ளிதின் உணர்ந்தோமல்லவா?

ஆயினும், கற்புடைய மங்கையல்லாமல், வேறு யாரிடமேனும் அவ்வன்னத்தைப் பெற்றிருப்பின், அமுத சுரபியும் அன்னமும் இருப்பினும், இதைப் போன்று அது பெருகுமா? அங்ஙனம் பெருகாது என்பதை எண்ணித்தானே மணிமேகலை, 'இதில் யாரிடம் அன்னம் பெற்றுல் நலனளிக்கும்?' எனக்

காயசண்டிகையைக் கேட்கின்றனள்? அவளும் அந் நகரின்கண் உள்ள மற்றெவரையும் குறிப்பிடாது, தெய்வக் கற்பு வாய்ந்த ஆதிரையாரைக் குறிப் பிக்கின்றனள். ஆதலின், பிறர் பசியை நீக்கும் தன்மை பொதுவாக அன்னத்திற்கிருப்பினும், பிற ருக்கு இன்பமூட்டும் தன்மையும், நோயை நீக்கும் இயல்பும் கற்புடையார் கையாலிட்ட அன்னத் திற்கே உண்டு என்பது புலப்படுகின்றதல்லவா? இதனல், அமுதசுரபியைக்காட்டிலும் அன்னம் சிறந்ததென்பதும், அன்னத்தைக்காட்டிலும் அன் னத்தை இட்ட சீரிய கற்புடைய ஆதிரையார் மேம் பட்டவர் என்பதும் அறிந்தோம்.

அங்ஙனமாயின், பிறர் பசி நோயைப் போக்கு தற்கு அமுதசுரபியும், அன்னமும், அவ்வன் னத்தை இட்ட கற்பரசியாரும் இருத்தல் போதிய தாமா? போதியதாகாது. ஏன்? அறனேட்டிற் சுரந்த அன்னம் பலருடைய துன்பத்தையும் போக்கிவிடுமா? ஒரு காலும் போக்காது. அதற்கு அவ்வோட்டைத். தாங்கிப் பல திக்குகளிலும் சென்று வறியார்க்கு அன்புடன் உணவூட்டியவரும், தருமத்தையே சான்ருகக்கொண்டு தனக்குச் சிறிதும் தொடர்பற்ற உயிர்கள் படுந்துயரத்தைக் காணுங்கால் அவற்றின்மேல் இயல்பாக எழும் இரக்கமாகிய அருளுள்ளம் படைத்தவருமாகிய ஒருவர், இன்றியமையாது வேண்டும்.

"அறங்கரி யாக அருள்சுரந் தூட்டும்
சிறந்தோர்க் கல்லது செவ்வனஞ் சுரவாது."

—பாத்திரம் பெற்ற காதை, 121, 122.

எனக் கூறும் தீவதிலகையின் வாக்கைக் காண்க. அதற்குத்தான் நம் மணிமேகலை அமைந்தாள். இதனால், இட்ட அன்னம் மேன்மேலும் சுரப்பதற்கும், சிறந்த அவ்வன்னம் ஏழைகள் வயிற்றை நிரப்பி அவர்களை இன்புறுத்தற்கும் கற்புச்செல்வியார், அறச்செல்வி ஆகிய இரு அரிவையர் வேண்டற்பாலர். இவர் இருவருமின்றேல், தெய்வக்கடிஞையோ, அமுதன்ன அன்னமோ, பயனளியாதென்பது ஒருதலை. ஆகவே, வறிஞர் வயிற்றெழுந்த பசிப்பிணியைப் போக்கி, அவர்தம் இன்முகத்தைக் கண்டு ஆனந்தமுற்றவர், உயிர்கள் மாட்டு அன்பும் அருளும் நிறைந்த இவ்வரிவையரே எனத் தெளிக. கடிஞைக்கு அன்பேது? அருளேது? களிப்பேது?

இதுகாறும் செப்பிப் போந்தவற்றால், அமுதசுரபி தானே அன்னத்தைத் தோற்றுவியாது என்பதும், அதில் அன்னம் இட்ட பிறகே அது பெருகும் என்பதும், அவ்வன்னமும் தூய்மையுடையதாய் இருத்தல் வேண்டுமென்பதும், அன்னத்திற்குத் தூய்மை அதை ஆக்கும் கற்புடைமங்கையரினாலேயே உண்டாகிறதென்பதும், அத்தூய அன்னமே மேன்மேலும் பெருகும் என்பதும், அங்ஙனம் பெருகிய அன்னமும் அருளுள்ளம் படைத்த ஒருவராலேயே யாவருக்கும் ஊட்டும் பெருமிதத்தைப் பெறுகிறதென்பதும, இதனால் பசியைப் போக்கிய பெருமை அரிவையரையே சார்ந்து நின்றதென்பதும் புலப்படவில்லையா?

௩. மணிமேகலை மானிட மகளா?

1. மணிமேகலை மாதவியின் மகளா?

தமிழை ஊன்றிக் கற்றவர்கள் மட்டுமேயல்லாமல், சாமானிய மக்களும், கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை இவர்களைப்பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம், கோவலன் கதையைத் தெருக்களில் நடித்துக் காட்டுவதேயாகும். அது தெருக்கூத்து எனச் சொல்லப்படுகிறது. அக்கூத்தில் பல பொய்ச் செய்திகள் புனையப்பட்டிருக்கின்றன என்பதை, அதைக் கண்ணுறுபவர் மறந்துவிடுதல் கூடாது. இவர்களுடைய உண்மை வரலாறுகளைத் தெரிந்துகொள்வதற்கு நாம் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு நூல்களிடமே செல்லுதல் வேண்டும்.

இவ்விரு நூல்களிலும் பல பேர் காட்சியளிப்பினும், இவர்களுள் முக்கிய பாத்திரங்களாய் நின்றொளிர்பவர் **கோவலன்** என்னும் ஓர் ஆண் மகனும், **கண்ணகி, மாதவி, மணிமேகலை** என்னும் பெண்மகளிர் மூவருமாவர். இம்மூன்று மகளிருள்ளும் ஒருத்தியாகிய மணிமேகலையைக் குறித்து ஆராய எழுந்ததே இச்சிறு கட்டுரை எனக்கொள்க.

இம்மணிமேகலை, கோவலன் காதற்கிழத்தியாகிய மாதவியினிடம் தோன்றியவள்; அக்குடும்பத்தின் செல்வச் செழிப்பினாலும், மாதவியின் மதி மாண்பினாலும் இம்மகள் நன்முறையில்

உருக்கொண்டெழுந்தாள். சின்னாட்களில், கோவலனுக்கும் மாதவிக்கும் ஏற்பட்ட மன வேறுபாட்டினால், கோவலன் மாதவியைப் பிரிந்து, கண்ணகியுடன் மதுரைமாநகரம் போந்து, சிலம்பு காரணமாகப் பாண்டியனால் கொலையுண்ண நேர்ந்தது. இச்செய்தியை அறிந்த மாதவி தன் குலத்தொழிலை மேற்கொள்ளாமலும், தன் செல்வத்தில் திளைத்துக் காலந்தள்ளாமலும், உடனே வீடு, வாயில், அணி, ஆடை, செல்வம், சுற்றத்தினர் ஆகிய யாவற்றையும் அறவே துறந்து, பௌத்தமடத்தை அடைந்தாள். அவ்வமயம், மணிமேகலை மங்கைப் பருவமடைந்திருந்தாள். மாதவி, தான் துறப்பினும், தன் மகளையேனும் உலக இன்பத்தைத் துய்க்குமாறு விட்டனளா? அங்ஙனம் செய்தாளில்லை. புண்ணியச் செயலில் சிறிதும் மனஞ் செலுத்தாத தன் தாய் முதலியவரிடம் மணிமேகலையை விட்டுச் செல்லின், அவர்கள் இவளைத் தீயொழுக்கத்தில் படருவித்து, இவள் வாழ்க்கையைத் தூய்மையற்றதாக்குவர் என்னும் அச்சம் மாதவிக்குண்டு. அவ்வச்சமே, மகளையும் தன்னுடன் அழைத்துச் செல்லுமாறு மாதவியைத் தூண்டிற்று. இருவரும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த பௌத்தமடத்தைச் சென்றடைந்தனர்.

அங்குச் சென்ற பின்பு மாதவி தன்மகள் மணிமேகலையை எம்முறையில் வளர்க்கின்றாள்? பண்டைய போக்கிலா, பழைய நிலையிலா? அதுதான் இல்லை. இவளை எளிய உணவு, எளிய உடை, எளிய போக்கு இவற்றில் பழக்குகிறாள். இவற்றால்,

ஆரவாரத் தன்மை இவளை விட்டு அறவே ஒழிகின்றது. புதிய மலர்களைக் கொய்தல், அம்மலர்களுக்கு யாதொரு மலினமும் ஏற்படா வண்ணம் காத்து, அவற்றை விசித்திர மாலைகளாகத் தொடுத்தல், அவற்றைப் புத்தனுக்குச் சூட்டுதல் முதலியவற்றில் இவளைப் பயில்விக்கின்ருள். இத்தொண்டுகள் மணிமேகலையின், உடலைத் தூய்மைப்படுத்துகின்றன. இன்னும் புத்தனைத் தன் பாக்களாலும் சொற்களாலும் துதித்தல், மனத்தால் தியானித்தல், அறவணவடிகளிடம் அறவுரைகளைக் கேட்டல் முதலியவற்றில் இவளை நுழைக்கின்ருள். இவை, இவள் ஆன்மாவைத் தூயதாக்குகின்றன; எப்போதும் உயர்ந்த எண்ணங்களும், மலினமற்ற சிந்தனைகளுமே இவள் மனத்தில் உலவுமாறு செய்கின்றன. இவை மணிமேகலை மனத்திற்கு ஞான ஒளியை ஊட்டுவதுமட்டுமேயல்லாமல், அவ்வொளி இவள் முகத்திலும் தேங்கி மிளிர்கின்றது. இம்முறையில் செல்வச் சிறப்பிலும், இனிய உணவு, உயர்ந்த ஆடை, ஆய்ந்த அணிகள் முதலியவற்றிலும் துலங்கிக்கொண்டிருந்த மணிமேகலையின் ஆரவாரப் போக்கு அமைதிப் போக்காக மாறிவிட்டது. இரும்பை வேதித்துப் பொன்னுக்குவாரைப் போன்று, மாதவி, தன் அறிவுரைகளினுல் மணிமேகலையை வேதித்து உயர் நிலைக்குக் கொணர்ந்துவிட்டாள்.

ஆகவே, இம்முறையில் மணிமேகலை எந்நிலையில் நிற்கிருள்? "மணிமேகலை மனத்துறவு பூண்ட மாதவியின் மகள் என்பதற்குத் தகுந்த

வள்; அவள் மனத்திற்கேற்ப நடந்துகொண்டாள்; தாய் சென்ற வழியிலேயே தானும் சென்றாள்; மாதாவின் பெயரை மாண்புறச் செய்தாள். மாதவி இவளைச் சிரமமெடுத்து வளர்த்ததன் வளர்ப்புப் பழுதுறவில்லை. மகள் என்றால் இப்படியல்லவா இருத்தல் வேண்டும்? பெற்றதெல்லாம் பிள்ளையாகுமா? 'எப்பிள்ளை, பெற்றவர் புகழைப் பரவச் செய்கின்றதோ, அப்பிள்ளையன்றோ ஈன்றவர்க்கு இருநிதி எனப்படுவது!' என அறிஞர் போற்றும் தன்மையில் உள்ள நம் மணிமேகலையை யாருடைய மகள் எனச் செப்புதல் வேண்டும்? இவள் மாதவியின் புதல்வியே என்றல்லவா கூற வேண்டும்? ஆயினும், இவள் மாதவியின் மகள் எனப் பகரக் கூடிய பண்பிலேதான் நின்றனளா, அன்றி அதற்கு மேற்படியிலும் சென்றனளா என்பது தான் இங்கு நாம் அறிய வேண்டுவது.

மாதவி வரைவின்மகளிர் குலத்தில் தோன்றினாள்; அக்குலவழக்கத்திற்கும், தாய் சித்திராபதியின் விருப்பத்திற்கும் ஏற்ப, ஆடல் பாடல்களில் வல்லவளாயினாள்; செல்வச் சீமானாகிய கோவலனையும் காதலனாய்த் தேர்ந்தெடுத்துக்கொண்டாள். ஆனால், இனித்தான் அவள் வாழ்க்கை, அவள் குல முறையிலிருந்து மாறுபடுகிறது. யாங்ஙனம்? அவள் தன் உறவினரைப் போன்றல்லாமல், தான் காதலித்த கோவலனிடம் மாசற்ற உண்மை அன்பைச் செலுத்திவந்தாள். அது மட்டுமா? அவன் பொருள் குறைந்து தனக்கு ஈதற்கு ஒரு காசும் இல்லாத காலத்திலும் அவன்மாட்டு வைத்த அன்பில் சிறி

தும் குறைந்திலள். ஊழ் வலியால் அக்கோவலன் தன்னை விட்டுப் பிரிந்த காலத்தும், தான் அன்பு ததும்ப எழுதிய முதற்கடிதத்திற்கு அவன் பல வசைகளைக் கூறிவிட்ட காலத்தும், தன் மரபொழுக் கத்தின்படியே பொருள் நிறைந்த மற்றொருவனைத் தேடிக்கொண்டிருக்கலாம். அப்போதல்லாவிடி னும், கோவலன் பாண்டியனால் கொலையுண்டிறந்த போதேனும், இக்காரியத்தை மேற்கொண்டிருக்க லாம். ஆயினும், தூய மாதவியின் நெஞ்சம் இதற்கு இடந்தந்திலது. இச்செயல், அவளுடைய எத்தன்மையைக் காட்டுகிறது? அவள் தன் மரபினரைக்காட்டிலும் மேம்பட்டவள் என்பதை அன்றோ? அவள் அத்துடன் நின்றனளா? இல்லை இல்லை. உடனே தனக்குண்டான பொருள்களை யெல்லாம் அறவழியில் பயன்படுத்தி, பற்றற்ற மன முடையளாய்ப் பௌத்த மடத்தையடைந்து, ஆன்ம உய்விற்காக நற்பொருள்களைக் கேட்டலை மேற் கொண்டாள். இச்செயல், அவளுடைய எந்நிலையைக் காட்டுகிறது? அவள் சாமானிய குல மகளிரைக் காட்டிலும் உயர்ந்தவள் என்பதையன்றோ? இன் னும், கோவலன் இறந்துபட்டதைக் கேள்வியுற்ற தும் தனிப்பட்ட நற்குடிப் பெண்டிர் சிலரைப் போன்று, அவள் தீக்குளித்திருப்பினும் இருப்பாள். அவ்வாறு செய்யாமல் நின்றது, மணிமேகலையின் நல்வளர்ப்பைக் கருதியே போலும்! இவற்றால், தேர்ந்த பொருள் யாது? மாதவி உயர்ந்த குல மகளுக்கு ஒப்பாக, ஒரு முறை காதலித்தவனையே கருத்திலிருத்தி, அவனுக்குத் தீங்குண்டான போது

மனத்துறவடைந்து, ஆன்ம உய்வில் மனங்கொண்டாள் என்பதேயன்றோ?

இப்பண்பை மனத்திருத்தி, மணிமேகலையை நோக்குவோம்: தன் தாய் மாதவியைப்போன்று, சின்னாட்களில் மாறக்கூடியதும், சிறு இன்பத்தை ஈயக்கூடியதுமான உலகக் காதலுக்கே இவள் இடந்தாளில்லை. இவளை ஒருவரும் காதலிக்காமலுமில்லை. இவளிடம் அன்பு செலுத்தினவனோ, மன்னன் மகனை உதயகுமரன்; அவனோ, ஆண்மையிலும், அறிவிலும், கல்வியிலும் மேம்பட்டவன். அவன் பன்முறை தேவியிடம் வந்து தன்னை மணந்துகொள்ளுமாறு இறைஞ்சுகின்றான். இவளிடம் வைத்த காதலை வேறிடம் திருப்ப அவன் நெஞ்சம் இடந்தந்திலது. அதையும் நம் அன்னை அறிவாள். அன்றியும், அவ்வுதய குமரன் முற்பிறவியில் தனக்குக் கணவன் என்பதையும் ஒருகால் கந்திற்பாவையால் இவள் தெரிந்துகொண்டுள்ளாள். இவை யாவும் ஒருபுறமிருப்பினும், இன்னோர் அதிசயம் இங்கு ஏற்படுகின்றது: இவள் பளிக்கறையில் இருந்த போது, இவள் மனமும் அவன்பால் அன்பு கொள்கிறது. இத்தனை பொருத்தங்களும் இருத்தலின், இவள் உதயகுமரனை மணம் புரிந்துகொண்டு இன்பவாழ்வை நடத்தியிருக்கலாம். இச்செயல், குலமகளைப் போன்று ஒழுகிய தன் தாய் மாதவியின் கொள்கைக்கும் மனத்திற்கும் மாறுபட்டதுமன்று.

ஆயினும், இவள் இயல்பு இதிற்செல்லுதற்கு இடந்தந்திலது. இவள் மாதவியின் மகள் என்ற

நிலையில் மட்டும் இருந்தாலல்லவா, இவள் நெஞ்சம் இவ்வொழுக்கத்தில் பதிந்து இன்பந்துய்க்கும்? இவள் இயல்பு மாதவியின் பண்பையும் கடந்து மேற் செல்லுகின்றது. ஆதலின், இவள் இல்லற வாழ்க் கையை முற்றும் வெறுத்துத் துறவற வாழ்க்கைக் குச் செல்லுகின்றாள். இவள் மனம் எல்லாவற்றை யும் விட்டொழித்து முற்றும் துறவை மேற்கொள்ளு கின்றது. அங்ஙனம் துறந்த இவள், காட்டிற்குச் சென்று தன்னலத்தையே நாடி நிற்கவில்லை. அங் ஙனமாயின், இவள் இத்துணை உயர் நிலையில் வைத் தெண்ணப்படுவளா? ஒருகாலும் இல்லை. இதனால், மணிமேகலை மாதவியின் மகள் என்னும் அளவி லேயே இராமல், அவளினும் உயர்ந்து செல் கின்றாள் என அறிகின்றோம். இது நிற்க.

2. மணிமேகலை கண்ணகியின் மகளா?

முன்னர்க் கூறியவாறு மாதவியும் மணிமேகலை யும் பௌத்தமடத்திற்றங்கி, அறவணவடிகளிடம் அறவுரைகளைக்கேட்டுக்கொண்டிருக்குங்கால்,வழக் கம்போல இந்திர விழா வந்தது. அவ்வமயம், மாதவி யின் தாய் சித்திராபதியால் அனுப்பப்பட்ட வயந்த மாலை அவண் வந்து, இந்திரவிழாவில் நடனம் புரிய மாதவியை வருமாறு வற்புறுத்துகின்றாள். "தீயைக் காட்டிலும் தீயனவற்றிற்குப் பெரிதும் அஞ்சுதல் அறிவாளர் தொழிலாதலின், இத்தீய தொழிலை மேற்கொள்ள யான் இசையேன்!" எனச் சிறிதும் தாட்சணியமின்றி அவ்வயந்த மாலைக்கு விடை யிறுக்கின்றாள் மாதவி. அப்போதும் அவண் விட்டுச்

செல்ல மனமற்ற வயந்தமாலை, "கணிகையர் குலத்திற் பிறந்த நீ நற்றவம்புரிய எண்ணியது நாணத்தைத் தருவதாகும். இதன் சார்பாக ஊரார் செப்பும் பழிமொழிகள் பலப்பல. ஆதலின், உன் மகள் மணிமேகலையையும் இத்துறவில் புகுத்தாமல், தன் ஆடல் பாடல்களால் இந்திரவிழாவைச் சிறப்புறச் செய்தற்கு அவளை என்னுடன் செல்லவிடுவாயாக," என மன்றாடுகின்றாள்.

வயந்தமாலையின் கொடுஞ்சொற்களைச் செவியேற்ற மாதவி, மனம் நொந்தவளாய், அவளை நோக்கி, "யான் கூறும் சிலவற்றைப் பொறுமையுடன் கேட்பாயாக: கண்ணகி என்னும் பெண்ணரசி, தன் தலைவன் தீயொழுக்கத்தில் படர்ந்த போதும், அவன் தீநெறியை அயலாரறியா வண்ணம் மறைத்து, கணவனுடன் வாழ்க்கை நடத்துபவள் போன்றே யாதொரு குறைபாடுமின்றி இல்லறத்தை நடத்தி வந்தாள். சோமகுண்ட சூரிய குண்டங்களில் மூழ்கிக் காமனைத் தொழுதால், பரத்தையர்பாற்பட்ட கணவனை அடையலாம்எனத் தோழி புகல,கணவனையன்றி மற்றத் தெய்வத்தைத் தொழல் கற்புடையவர் காரியமன்று என அவள் மனம் அச்செயலைப் புறக்கணித்தது. கைப்பொருள் யாவும் இழந்து கணிகையினிடமிருந்து திரும்பிய கணவனை, அவள் முகம் அன்புடன் வரவேற்றது. இவை மட்டுமா? அவன் வாணிகத்தின் பொருட்டுத் தன் காற்சிலம்பையும் உதவினாள்; அவன் அழைத்ததும், அயலூருக்கு நள்ளிரவில் அவனுடன் சென்று, அவன் துன்பத்தைத் தனதெ

னவே தாங்கிக்கொண்டாள். உலகில், தம் கணவரை இழக்க நேரும் திண்ணிய கற்பு வாய்ந்த மகளிருள் சிலர், அத்துயரைத் தாங்காது பாண்டியன் தேவியைப்போன்று உடனே உயிர் துறப்பர்; சிலர், தம் கணவர் உடல் எரிந்துகொண்டிருக்கும் ஈமத் தீயைத் தாமரைத் தடாகம் எனக் கருதி, அதிற்பாய்ந்து உயிர் விடுவர்; சிலர், தாம் இறந்த பின்பு, தம் கணவர் உறையும் சுவர்க்கத்தில் தாமும் உடன் உறைய வேண்டுமெனக் கருதிக் கைம்மை நோன்பை மேற்கொண்டொழுகுவர். ஆனால், கற்பையே உருவெனக் கொண்ட கண்ணகியோ, இம்மூத்திறத்தினருள்ளும் சேராதவளாய், இவர்கள் கொள்கைகளையெல்லாம் கடந்து நின்றாள்! யாதொரு குற்றத்தையும் புரியாத தன் நாயகன், நீதியின்றிக் கொலையுண்டிறந்ததைக் கேள்வியுற்றதும், தன் கூந்தலை விரித்து,கண்ணீர் ஆறாய்ப்பெருகப் பாண்டியனிடம் சென்று வழக்குரைத்து, தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநாட்டினாள்; பின்னும் அவளுக்குக் கோபமடங்காமையின், வனப்பு வாய்ந்த தன் கொங்கையைத் தன் கையால் திருகி, தன் சினமென்னும் தீயை அதிற்செலுத்தி, மதுரையின் மேல் எறிந்து, அந்நகர் தீக்கிரையாகும்படியான ஒரு புதிய வழியைக் கண்டனள்; கணவன் இறந்த பதினான்காம் நாள் கணவனுடன் விமானமேறி மேலுலகஞ்சென்றாள். இத்தகைய சிறந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் மகளே இம்மணிமேகலையாவாள். என மகள் அல்லள். ஆதலின், இவள் உயர்ந்த தவத்தொழிலிற்கு உரியவளே

அல்லாமல், இழிந்த பரத்தமை தொழிலிற்கு உரிய வளல்லள். இவள் இயல்பும் இதற்கு இடந்தாராது. யானும் இவளை அத்தொழிலில் நுழைய விடேன். நீ இவண் நேரந்தாழ்த்தல் அவமேயாகும்,'' என வரையறுத்துக் கூறினாள்.

"கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்."

—ஊர் அலருரைத்த காதை, 50—57.

எனச் சிலப்பதிகாரம் இதனை அழகுறக் கூறும்.

இவளிடம் நாம் வந்த காரியம் கைகூடாது என உணர்ந்த வயந்தமாலை, மிக்க துயரத்துடன் திரும்பிச் சென்றாள். மாதவி இதுகாறும் கூறிய சொற்களால், மணிமேகலை, கண்ணகியின் மகளே என்பதற்கு உரிமையுடையளாய் இருந்தாள் என்னும் முடிவிற்கு வந்தோம். ஆயினும், 'இவ்விள மங்கை, கண்ணகி மேற்கொண்ட சிறப்பியல்களோடு நின்றனளா, அன்றி, இவள் இயல்பு அதன்மேலும் உயர்ந்து சென்றதா?' என்பதை ஆராய்வோம்:

கண்ணகியின் செயல்களை மனிதச் செயல், வீரச் செயல், தெய்வச் செயல் என முப்பகுதிகளில் அடக்கலாம். இவளுடைய சரிதம் யாவருக்கும்

தெரியுமாதலால், இச்செயல்களைச் சுருக்கியே சொல்லலாம்.

மனிதச் செயல்: ஒருகால் அன்புக் கயிற்றால் பிணிக்கப்பட்டுத் தன்னிடமன்றிப் புறஞ்செல்லா மனத்தினனாய், தன்னை உயிரெனவும், கண்ணின் மணியெனவும் கருதித் தன்னுடன் ஒரு நிகராய் வாழ்ந்த கணவனாகிய கோவலன், தன்னைத் தனியே விட்டுச் சென்றபோது மேற்கொண்ட பொறுமை, அக்கணவனை அடைதற்பொருட்டும் வேறு தெய்வத்தைத் தொழ மனமிசையாத கற்புத் திண்மை, வந்த கணவனை உண்மை அன்புடன் வரவேற்று உபசரித்த பெருந்தகைமை இவை போன்ற பலவும் கண்ணகியின் சிறந்த மனிதச் செயல்களாகும். இவண் ஓர் ஐயப்பாடு தோன்ற லாம்: கண்ணகியால் பின்பற்றப்பட்ட இச்செயல் கள் எல்லா மக்களாலும் இயற்ற முடியுமா? முடியா தல்லவா? அங்ஙனமாயின், இவற்றை எங்ஙனம் மனிதச் செயல்கள் எனச் செப்புவது? இஃதுண் மையே. ஆயினும், கண்ணகி போன்று கற்பு உரம் பெற்ற மகளிர் சிலராலே இவை நிகழ்த்த முடியுமாதலின், இவற்றை நாம் மனிதச் செயல்கள் எனக் கூறவேண்டுவதாயிற்று.

வீரச் செயல்: குற்றமற்ற கோவலன் பாண் டியனால் கொல்லப்பட்டான் என்பதைக் கண்ணகி செவியேற்றவுடன், "இனி என் செய்வது! என்ன செய்யினும் இறந்தவர் வருவரா! அவர் விதி அங் ஙனமிருந்தது போலும்!" என ஊழை நொந்து கொண்டு, கோழை மனத்துடன் இருந்துவிட்டா

யில்லை. "என் கணவர் உயிர் நீங்கினும், அவர் தூய தன்மை நீங்க ஆற்றேன்! அவர் கள்வர் அல்லர் என்பதைப் பலரறிய நிலை நாட்டுவேன்!" என்னும் வீர உள்ளத்துடன் பாண்டியனிடம் சென்று வாதிட்டுத் தன் கணவன் உண்மையை உறுதிப்படுத்துகின்றனள். இஃது எத்தகைய வீரச் செயலாகும்!

தெய்வச் செயல்: இத்தெய்வச் செயலை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, மக்களே தெய் வத் தன்மை வாய்ந்திருத்தல்; மற்றொன்று, மக்கள் தெய்வ அருளைப் பெற்றிருத்தல்.

தெய்வத்தன்மை வாய்ந்திருத்தல்: 'நல்லெண்ணங் களையும் நற்செயல்களையுமே நாம் என்றும் மேற் கொள்ள வேண்டும். இதற்கு இறைவனும் நமக்கு அருள் புரிதல் வேண்டும்,' என்னும் ஊன்றிய எண்ணத்துடன் முயலுங்கால்,ஒருவருக்கு நற்பண்பு கள் அமைகின்றன. இத்தகையவர், அவற்றுள் நன்கு பழகிப்பழகி யாவருக்கும் நலமே புரியும் நல் லியல்பைப் பெறுகின்றனர். இவருக்குத் தெய்வத் தன்மை பொருந்துகின்றது. இத்தெய்வத் தன்மை யினால், இத்தூயவர் இயற்றும் உயரிய காரியங்கள் அளவிடற்பாலனவல்ல. பின்பு இவை, தெய்வ அருளால் இயற்றப்பட்டனவா, அன்றி, தெய்வத் தன்மை வாய்ந்த மனிதரால் இயற்றப்பட்டனவா என்பதையும் அறிய முடியாத நிலையில் உள்ளன.

தெய்வ அருள் பெற்றிருத்தல்: முன் இயற்றிய தவத்தினாலோ, தம் நல்லியல்புகளினாலோ. சிலருக் குத் தெய்வ அருள் வந்து சேருகின்றது. அதனால்,

இச்சான்றோர் மற்றவர் அடைய முடியாத பல நலங்களையும் அடைகின்றனர். இவர் எண்ணிய எண்ணியாங்கு முடிகின்றது. சில போது இவர் களிடம் தெய்வமும் பணி கேட்டு நிற்கின்றது; உலகில் நடக்கக்கூடாத செயல்களும் இவரால் நடைபெறுகின்றன. இந்நல்லவர் பல நற்பொருள் களைப் பெறுதல் மட்டுமேயன்றி, அவற்றால் பல நன்மைகளையும் அடைகின்றனர். இவரை மண் ணுலகமும் விண்ணுலமும் புகழ்கின்றன. இவர் புலாலுடம்பு நீங்கினும், புகழுடம்பு நீங்குதல் இல்லை. இவர் என்றும் உலகில் நிலைபெற்றிருக்கின்றனர்; அறிஞர் உள்ளத்தில் வீற்றிருக்கின்றனர்.

முற்கூறியவற்றால், தெய்வத் தன்மையும் தெய்வ அருளும் இன்னவை என்பதும், இவற்றைப் பெற்றவரின் தன்மை இன்னது என்பதும் அறிந் தோம். இவற்றை மனத்திருத்திக் கண்ணகியைக் காண்போம்.

மிக்க துயரத்துடன் நகரத்தில் புகுந்த கண்ணகி, பகலவனை நோக்கி, "என் கணவர் கள்வரோ?" எனக் கேட்கின்றாள். உடனே அவனிடமிருந்து அவளுக்கு விடை கிடைக்கின்றது: "உன் கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள் வன் எனக் கூறிய இந்நகரம் அழிந்தொழியும்," என்கின்றான் ஆதித்தன். மதுரைத் தெய்வம் இவள் முன் தோன்றிச் சில நல்லுரைகளைப் பகர் கின்றது. இவள் தெய்வத் தன்மை, இவளுக்குத் தீங்கிழைத்த மதுரையைச் சுட்டெரிக்கின்றது. இது நிற்க. இவற்றுள் முந்திய இரண்டிற்கும் குறைகூறு

பவர் யாருமிலர். ஆனல், பிந்திய செயலிலேதான் பலருக்கும் பல வேறுபட்ட எண்ணங்கள் தோன்றும். அவை யாவை? "தான் இழைத்த தீங்கிற்காக மன்னன் உயிர் துறந்தானல்லனே? நற்பண்பு வாய்ந்த இவள் அத்துடன் விடவேண்டாவா? தெய்வத் தன்மை வாய்ந்த இவள் பிறருக்குத் தீங்கிழைக்க முற்படலாமா? இச்செயல் இவளுக்குப் பொருந்துமா? மன்னன் ஒருவன் தவறிழைக்க மக்கள் யாவரையும் அழித்தல் நியாயமாகுமா?" என்பன போன்றனவாகும். இஃது, இவள் இயல்பிற்குச் சிறிது குறைவுபட்டதேயாயினும், முற்றும் பிழை எனக் கூறுதற்கில்லை. ஆனல், இவ்வாராய்ச்சிக்கு இஃது இடமன்று.

முன்னர்க் கூறியவாறு கணவனை இழந்த கண்ணகி, இனி உயிர் வாழ முடியாது என்னும் உறுதியுடன் சேரநாடு செல்கின்றாள்; அவண் உள்ள முல்லை நிலத்தில் ஒரு மரத்தின் நிழலில் தங்குகின்றாள். கோவலன் இறந்த பதினன்காம் நாள் தேவருலகத்திலிருந்து ஒரு விமானம் கீழிறங்குகின்றது. அஃது அவணிருந்த இடைச்சிறாரின் கண்களை மூடச்செய்கின்றது. அதன் அழகும் அமைப்பும் அவர்களை வியப்பில் ஆழ்த்துகின்றன. "அவ்விமானம் எங்கு இறங்கப்போகின்றது? என்ன செய்யப்போகின்றது?" என நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள் அவ்விளைஞர்கள். கண்ணகி எம்மரத்தடியில் நின்றனளோ, அம்மரத்தினிடமே அதுவும் வந்தது. அதில் இன்னோர் அதிசயத்தைக் கண்டனர் அவ்விடையர். அத்தெய்வ விமானத்தில்

ஓர் ஆண்மகன் (கோவலன்) மிகக் கம்பீரமாய் வீற்றிருந்தான். அவன் முகத்தில் ஆனந்தம்பெருகிக் கொண்டிருந்தது. அவ்விமானம், தன் அருகில் அணுகியதோ இல்லையோ, உடனே தலைவிரிகோலமாய் நின்றுகொண்டிருந்த கண்ணகி, அதில் குதித்தேறித் தன் கணவன் கோவலனுடன் அமர்ந்தாள். இருவரும் தெய்வங்களெனவே மிளிர்ந்தனர். அவ்விநாடியே விமானம் மேல் நோக்கிச் சென்றது. சிறிது நேரத்தில் அஃது அவர்கள் கண் பார்வையை விட்டு நீங்கிற்று. இவ்வுயர்நிலை யாவருக்கும் கிடைப்பதொன்றோ! இதைக் கேட்கும் போது, நமக்குக் கண்ணகியினிடம் முன்பிருந்த மதிப்புப் பன்மடங்காக உயர்கின்றதன்றோ! இச்சீரிய நிலை தானே சேரனுக்கும் அவள் இல்லக் கிழத்திக்கும் கண்ணகிக்குக் கோவிலமைக்க வேண்டும் என்னும் எண்ணத்தை உதிக்கச் செய்தது? இச்செயல் தெய்வ அருளாலன்றி வேறெதனால் நிகழக்கூடும்? இவற்றால் கண்ணகியினிடம் மிருகத்தன்மை நீங்கிய மனிதத்தன்மையும், கோழைத்தன்மை நீங்கிய வீரத்தன்மையும், அரக்கத்தன்மை நீங்கிய தெய்வத் தன்மையும் இருந்தனவென்பது தெரிகிறது.

இனி, மணிமேகலையின் தன்மைகளை நோக்குவோம்:

மனிதச் செயல்: கோவலன் பிரிவைத் தாங்காத மாதவி யாவற்றையும் துறந்து பௌத்த மடத்தைச் சாருங்கால், மணிமேகலை உலகத்தை அறியாத சிறு குழவியாய் இருந்தாளில்லை. பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகளினால் இவள் உற்ற

வயதை அடைந்திருந்தாளெனத் தெரிகிறது. அவ் வமயம் இவளுக்குச் சித்திராபதி வயந்தமாலை ஆகிய இருவரிடமும் தொடர்பிருந்திருத்தல் வேண்டும். இன்னும் ஊன்றி நோக்கின், பாட்டியாகிய சித்திரா பதியினிடமே அதிகப் பற்றும் பழக்கமும் இருந்திருக் கக்கூடும்! பேரன் பேர்த்திகள், பாட்டி பாட்டன் மாரிடமே பெரிதும் செல்லங்கொள்ளலும் பற்று வைத்தலும் உலக வழக்கல்லவா? சித்திராபதியின் இயல்பு யாது? அவள் மணிமேகலையை எவ்வழி யில் திருப்பவேண்டுமென நினைத்திருப்பாள் என் பது, சிலப்பதிகாரம் படித்தவரும், கோவலன் கதை யைக் கேட்டவரும் நன்கு அறிந்திருப்பர். அதற் கேற்ப, அவள், மணிமேகலையிடம் பல சூழ்ச்சி களையும் இழைத்துத்தான் இருப்பாள். ஆனல், மந்தரை (கூனி)யின் சூழ்ச்சிகளினல் தூய தன்மை வாய்ந்த கைகேயியின் மனம் திரிந்ததுபோன்று, சித் திராபதியின் சூழ்ச்சிகளினல் மணிமேகலையின் மனம் மாறுபட்டிலது. எங்ஙனம், உடல் வன்மை வாய்ந்த ஒருவன், ஒரு பொருளை எத்துணைப் பலத்துடன் மேல் வீசி எறியினும், அது மேலேயே நில்லாமல், பூமியின் ஈர்க்கும் சத்தியினல் கீழிறங்கு கிறதோ, அங்ஙனமே சித்திராபதி, தன் வன்மை யினல் மணிமேகலையைத் தன்பாலாக்க வேண்டு மென எவ்வளவோ முயன்றும், நன்மை இது தீமை இஃது என ஆய்ந்தறிந்து, தீதொழித்து நலத் தில் மனத்தைச் செலுத்தும் மணிமேகலையின் இயல்பு இதற்கு இடந்தந்திலது. அவ்விளமையி லேயே பெரும்பான்மையர் எளிதில் பற்றக்கூடி யதும், மேற்பகட்டினல் பலரையும் மயக்கக்கூடிய

தும், அப்போதைக்கு இன்பச்சுவையைத் தரக் கூடியதுமான சித்திராபதியின் வழியை விட்டு, பல வகையினும் பெரிதும் கடினமான மாதவியின் வழியைப் பின்பற்றி வந்தனள் என்னின், இவளுடைய செயல் சிறந்ததன்றே! இது மனிதரால் செய்யக் கூடிய காரியமாக இருப்பினும், சிலராலேயே முடியுமன்றி யாவராலும் முடிதல் அருமையே!

இன்னும், சோழ நாட்டின் மன்னன் மகன் உதயகுமரன், மணிமேகலையை மணந்துகொள்ள அரும்பாடு படுகின்றான்; இவளைப் பன்முறையும் கெஞ்சி இறைஞ்சுகின்றான். ஆனால், இவளுடைய திண்ணிய உள்ளம் அவ்விளவரசன் உருவுக்கேனும் திருவுக்கேனும் அடிமைப்பட்டுத் தன் உறுதியை இழந்திலது. இதைப்பற்றி முன்னரே கூறியுள்ளோமாதலின், இங்கு அதிகம் விரிக்காது விடுத்தோம். மணிமேகலையின் உயர்ந்த மனிதத் தன்மையைக் காட்டுதற்கு இதைப்போன்ற செய்திகள் இன்னும் சில இருப்பினும், விரிவஞ்சி நிறுத்தப்பட்டன.

வீரச்செயல்: பௌத்தமடத்தில் இருந்த மணிமேகலை, தோழி சுதமதியுடன் புதிய மலர்களைக் கொய்துவர மலர்வனம் போதருகிறாள். இவள் மாட்டு வேட்கையுற்றிருந்த உதயகுமரன், இவள் செல்கையை எட்டிகுமரனால் அறிந்து, பூஞ்சோலைக்கு விரைந்து செல்கிறான். தேரொலியைக் கேட்ட மணிமேகலை, வருகின்றவன் இன்னானென அறிந்து நடுங்குகிறாள். இவள் உடல் பதைக்கிறது; உள்ளம் துடிக்கிறது. இவள் அச்சத்தை நீக்கச் சுதமதி அவ

ணிருந்த பளிக்கறையில் இவளை விட்டுத் தாழிடு கிறாள். அங்கு வந்த உதயகுமரனுக்கு மணிமேகலை புலப்படவில்லை. இவளைப்பற்றிச் சுதமதியைக் கேட்டும், அவனுக்கு யாதொரு பயனும் ஏற்பட வில்லை. பின்பு, தேவி பளிக்கறையில் இருப் பதை அவன் கண்டான். ஆயினும், இவளை வெளிக் கொணர்தற்கு அவனுக்கு இயன்றிலது. ஆகலின், அவன் தேவியைப் பலபடியாக இழித்துக்கூறி அவ்விணிருந்து அகன்றான். அவன் அங்ஙனம் இவளைப் பழிபடப் பகர்ந்தும், இவளுக்கு அவன் மாட்டு வெறுப்புத் தோன்றிலது. அதற்கு மாறாக இவள் உள்ளம், அவனிடம் அன்பு கொண்டது.

அதைக்குறித்து இவள் ஆராயத் தொடங்கு கிறாள்; காரணம் தெரியாது தயங்குகிறாள். தன் னிடமே தனக்கு மதிப்புக்குறைவும் நம்பிக்கையற்ற தன்மையும் ஏற்படுகின்றன. "என் கோழை உள்ளமே, இதுதானா உன் பெருந்தகைமை! கண்டவரிடம் காதல் கொள்ளுவது கண்ணியம் என நினைத்துள்ளனையோ! உன் தூய்மை மிக அழகுடையதுதான்! ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டுத் தனக்கும் தன் குடும்பத்திற்குமட்டும் சில செய்து கொள்ள வேண்டும் என்னும் குறுகிய தன்மையை யொழித்து, 'உலக உயிர்கள் யாவற்றுக்கும் நலம்புரி தல் வேண்டும்,' என நீ கொண்ட பரந்த தன்மையை எங்கு விட்டனை? இது நினைப்பளவில் நின்றதோ! வரைவின்மகளிர் வழக்கத்தை மேற்கொண்ட னையோ! அக்குலத்தில் பிறக்கினும், உத்தம மகள் போன்று ஒருவனையே காதலித்து, ஒருவனுடனேயே

வாழ்ந்து, அவன் உடல் மறைந்ததும் வேறொருவன் உடலிற்குத் தன்னை உரிமையாக்காமல் துறவு உள்ளத்தைக் கொண்ட மாதவியின் கருப்பத்தில் உருப்படுத்தப்பட்டவளா நீ? அவளால் வளர்க்கப் பட்டவளல்லவா? நீ அவளினும் சிறிது உயர்ந்து செல்ல வேண்டாவா? அவளுடன் துறந்த உன் துறவு மிக்க சீர்மையுடையதுதான்! இஃதிருக் கட்டும்! உன்னைப் பெற்றதாய், "இவள் இழிகுலத் தில் பிறந்த என் மகளல்லள்; உயர்குலத்தில் தோன்றிக் கற்பை அணியெனப் பூண்ட கண்ணகி யின் புதல்வி," எனக் கூறினளே! அவ்வார்த் தைக்கேனும் பழுது வாராமல் பார்த்துக்கொண் டனையா? அந்தோ! என் அன்னையார் கண்ணகி யின் ஆன்மா இதை அறியின், என்னை மக்களினத்தில் சேர்க்குமா? மாக்களினத்தில் அன்றோ சேர்க்கும்! ஒருகால், அவர் சாபம் என் மேல் பாயினும் பாயுமே! இதற்காகவா யான் பெண்ணெனப் பிறந்தேன்! அருமைத் தந்தை தாயரை இழந்து படுந்துன்பம் போதாதோ! இவ்விழிவான துன்பத்தையும் யான் அடைய வேண்டுமா! ஓ நெஞ்சமே, பார்த்தார் பரிகசிக்க உடம்படுத்தனையே! உனக்கு நாணமில்லையா! பெண்மை உருவத்தைத்தான் கொண்டிருக்கின் றனை! பெண்மை உன்னிடம் எங்கிருக்கின்றது! அஃதிருந்திருந்தால் இக்கேடு ஏன் உண்டாகிறது! இன்னும் உயிரை வைத்துக்கொண்டிருக்கின்ற னையே! இஃதும் ஒரு பிறவியா! ஒழுக்கம் உயிரினும் உயரியதன்றோ!" எனப் பலவாறு அரற்றிக்

கண்ணீர் விட்டாள். மறு கணத்திலேயே இவளுக்குச் சிறிது தெளிவு உண்டாகிறது. தன்னைத்தான் தேற்றிக்கொள்ளுகிறாள். "என் கோழை உள்ளம் அவனிடம் சென்றதனாலேயே, அதை அது போன வழியிலேயே விட்டுவிடுவேனா? அதை அடக்கி ஆள என்னால் முடியாதா? அங்ஙனம் செய்யவில்லையேல், என் கல்வியும், ஆராய்ச்சியும், இயல்பும் என்னாகும்? அதை மேற்கொள்ளும் வீரம் எனக்கில்லையா? இதில் வெற்றி பெறுவதுதானே பெண்களுக்கு வீரம் எனப் பகர்வது!" எனக் கம்பீர வீரத்துடன் நிற்கிறாள்! இவள் முகத்தில் வீரம் வீறு கொண்டொளிர்கிறது!

இடையில் பல செய்திகள் நிகழ்கின்றன. மணிமேகலை மணிபல்லவத் தீவில் கோமுகிப் பொய்கையினிடம் அமுதசுரபியைப் பெறுகின்றாள்; இவள் ஆகாய மார்க்கமாகக் காவிரிப்பூம்பட்டினம் போதருகின்றாள். அவ்வமுதசுரபியில் ஆதிரையினிடம் பெற்ற அன்னம் வறுமையுற்றவர் வயிறுகளை நிரப்புகின்றது. யாவரும் ஆனந்தக் கூத்தாடுகின்றனர். அக்கூத்தின் நடுவண் உலகவறவி என்னும் தெய்விகம் பொருந்திய ஓர் இடத்தில் மணிமேகலை அறத்தேவதையென நிற்கின்றாள். அவ்வமயம், சித்திராபதியால் தூண்டப்பட்ட உதயகுமரன் அவண் வந்து சேர்ந்தான்; இவளுக்கு யாதொரு தீங்கும் செய்ய மனமெழாத உதயகுமரன், இவளையணுகி, "நீ இத்தருமத் தொழிலை மேற்கொண்டதற்குக் காரணம் யாது?" என வினவினான். அவனைக் கண்டதும், மணிமேகலை

மனம் திடுக்கிட்டது. சிறிது பொழுது தயங்கி ஞள். ஆயினும், உடனே இவள் மனத்தில் ஒரு வித ஊக்கம் பிறந்தது. சில எண்ணங்கள் தோன் றின; "நாம் செல்வது தீய வழியன்றே! நன் னெறியை மேற்கொண்டு பிறருக்கு உதவி புரிந்து வரும் நாம் ஏன் பிறருக்கு அஞ்சுதல் வேண்டும்! உண்மை உணராமையின், இக்குமரன் நம்மைக் கேட்டிருக்கலாம்! நம்மனத்திலுள்ளவற்றை ஒளி யாமல் சொல்வதற்கு நமக்கேன் அச்சம்?" எனத் தீர்மானித்து, "மன்னன் மகனுகிய இவன் நம்மைக் கொடுந்தண்டனைக்குள்ளாக்கின் என் செய்வது?" என்னும் பேதைமை கொள்ளாமல், வீரத்துடன் நின்று, உடல் முதலியவற்றின் நிலையா மையை அவனுக்கெடுத்தோதி, அவனுக்குச் சிறிது மனச் சாந்தியை ஏற்படுத்துகிருள்; இவண் மணி மேகலை வீரத் தெய்வமெனத் திகழ்கிருள்.

"பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலும் உடைய திடும்பைக் கொள்கலம்;
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்."

—உதயகுமரன் அம்பலம் புக்க காதை, 136—139.

மணிமேகலை பசித்தாரைத் தேடிச் செல்லுங் கால் சிறைக்கோட்டம் ஒன்று இவள் கண்ணிற் குத் தோற்றமளிக்கின்றது. அதில் அடைக்கப்பட் டிருக்கும் மக்கள் பசியினுல் பெரிதும் வருந்துகின் ருர்கள். அக்காட்சி இவளைப் பெரிதும் துன் புறுத்துகின்றது. அவர்களை அப்பசியிலேயே விட் டுச் செல்ல இவள் இளகிய உள்ளம் இடந்தந்திலது.

அமுதசுரபியில் பெருகும் அன்னத்தை அவர்கள் வயிறு நிரம்புமட்டும் ஊட்டி, அவர்கள் இன்முகங் கண்டு மகிழ்ந்தாள். தான் செய்வது அரசன் கருத்திற்கு மாறுபட்டது என்பதை நன்கு அறிவாள். ஆயினும், அதற்கு அஞ்சி இவள் அறச்செயலை நிறுத்திக்கொண்டாளில்லை. இவளது வீர உள்ளம் மன்னவனுக்கோ மற்றவருக்கோ அஞ்சி நிற்க இடந்தந்திலது. எவை அறமெனத் தோன்றுகின்றனவோ, அவற்றையெல்லாம் சிறிதும் அச்சமின்றி ஆண்மையுடன் செய்து முடித்தாள்.

மணிமேகலையின் இச்செயலைக் கேள்வியுற்ற சோழன், மணிமேகலையை அழைப்பித்து, "தாங்குவதற்கு அருமையான தவத்தை மேற்கொண்ட பெண்மணியே, நீ யார்? இக்கடிஞை உனக்கு எவணிருந்து கிடைத்தது?" எனக் கேட்டான். மணிமேகலை அவனுக்குச் சிறிதும் அஞ்சாதவளாய், அத்தெய்வப் பாத்திரத்தின் பெருமைகளை அவனுக்கு விளங்கச் செப்பினுள் இதற்கு உவந்த மன்னன், "யான் செய்ய வேண்டுவதியாது?" எனக் கேட்க, கண்ணகி பாண்டியனுடன் வழக்குரைத்து எங்ஙனம் உண்மையை நிலை நாட்டினளோ, அங்ஙனமே மணிமேகலையும் மிக்க மனத்திட்பத்துடன் சோழனுக்கு அறத்தின் சிறப்பை எடுத்தோதி, அச்சிறைச்சாலையை அறச்சாலையாக்குவதே தகுதியுடையதென வற்புறுத்தினுள். மன்னனும் இவள் கருத்திற்கு உடன்பட்டு, அங்ஙனமே செய்தான். அரசன் இவள் செய்த வரம்பு கடந்த செயலுக்காகத் தண்டனையுமீயாமல், இவள் எண்ணத்தின்படியே பன்னுட்களாக வழங்கி வந்த ஒரு நிலை

யத்தை மற்ெருரு நிலையமாக மாற்றுவது என்னின், அப்பொருளை எத்துணை உறுதியுடன் பகர்ந்திருத்தல் வேண்டும்? அதற்கு எத்துணை மனத்திட்பம் வேண்டும்? இம்மனத்திட்பம் வீரம் வாய்ந்த ஒருவர்க்கல்லாமல் மற்றவருக்கு அமையுமா? இவைகள் மட்டுமல்ல. மணிமேகலைக்குக் கல்வியறிவினுல் ஏற்பட்ட வீரம், பல மதவாதியார்களையும் வென்று கம்பீரத்துடன் நிற்குமாறு செய்ததன்ரே!

"'தாங்கருந் தன்மைத் தவத்தோய்! நீயார்?
யாங்கா கியதிவ் வேந்திய கடிஞை?' என்
றாசன் கூறலு மாயிழை யுரைக்கும் :
'விரைத்தார் வேந்தே! நீநீடு வாழி!
விஞ்சை மகள்யான்; விழவணி மூதூர்
வஞ்சந் திரிந்தேன்; வாழிய பெருந்தகை!
வானம் வாய்க்க! மண்வளம் பெருகுக!
தீதின் ருக கோமகற் கீங்கீ
தையக் கடிஞை; அம்பல மருங்கோர்
தெய்வந் தந்தது; திப்பிய மாயது;
யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது;
ஊனுடை மாக்கட் குயிர்மருந் திது,' என,
'யான்செயற் பாலதென் னிளங்கொடிக் கென்று
வேந்தன் கூற, மெல்லிய லுரைக்கும் :
'சிறையோர் கோட்டம் சீத்தரு ணெஞ்சத்
தறவோர்க் காக்கும் அதுவா ழியர்,' என
அருஞ்சிறை விட்டாங் காயிழை யுரைத்த
பெருந்தவர் தம்மாற் பெரும்பொரு ளெய்தக்
கறையோ ரில்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க் காக்கின னரசாள் வேந்தென்."

—சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கிய காதை, 143-162.

என இதனை அழகுபெறக் கூறுகின்றது காவியம்.

தெய்வச்செயல்: இது, தெய்வத்தன்மை வாய்ந் திருத்தல், தெய்வ அருளைப் பெற்றிருத்தல் என இரு வகைப்படும் என்றும், இவை இன்ன இயல்பு களை உடையன என்றும் முன்னர்ப் பகர்ந்துளோம். இவற்றை மனத்தில் இருத்தி மணிமேகலையிடம் செல்வோம். இவ்விரு தன்மைகளும் வாய்ந்த இயல் கள் பல மணிமேகலையிடம் அமைந்திருந்தன. அவற்றுள் ஒவ்வொன்றையும் விரித்துரைப்ப தெனின், நூல் மிக விரியாநிற்கும். ஆதலின், சுருக்கிக் கூறுவோம்:

தெய்வத்தன்மை: பன்னிரண்டு ஆண்டுகள் யானைத்தீ என்னும் நோயினால் வருந்திக்கொண் டிருந்த காயசண்டிகை, மணிமேகலையினுடைய ஒரு கைப்பிடி அன்னத்தினால் நலமடைந்தனள். தன் உடல் நலத்தைச் சிறிதும் கருதாளாய், தெருத் தோறும் திரிந்து திரிந்து, பசித்தவருக்கு உணவை ஊட்டினாள் மணிமேகலை; உணவின்றி உலந்தவர் இன்முகத்தைக் காணுதலே தனக்கு நேரிய இன்பமெனக் கருதினாள். விலங்குகளும், பறவை களும் இவளிட்ட உணவை உண்டு களித்தன. உண்பவரை அடையாத போது இவள் மனம் பெரிதும் வருந்தினது. முன்னர்ச் செப்பியவாறு இவள் தெய்வத்தன்மை, சிறையாளருக்கு அன் னத்தை அளித்ததுமட்டுமே அன்றி, அவர்கள் சிறையை நீக்கி, அச்சிறைக் கோட்டமே இல்லாத வாறு செய்ததன்றோ!

இவைகள் யாவும் மின்மினி என்னுமாறு இன்னொரு செயல் பகலவன் நிலையில் நின்றது

சோழன் இல்லக்கிழத்தியாகிய இராசமாதேவி, சோழனால் சிறையிடப்பட்ட மணிமேகலையைத் தன் வஞ்சனையினால் விடுவித்து, தன்னிடம் வைத்துக்கொண்டாள். தன் மகன் உதயகுமரன் கொலையுண்டிறத்தற்குக் காரணமாயிருந்த இவளை, எங்ஙனமேனும் மறு உலகத்திற்கு அனுப்பிவிட வேண்டுமென்பது அவள் எண்ணம். ஆதலின், அவள் முதலில் பித்துண்டாகும் மருந்து ஒன்றைத் தேவிக்கு ஊட்டினாள். மறு பிறப்புணரும் மாண்பு வாய்ந்த நம் அன்னைக்கு அரசியின் மயக்க மருந்து ஒரு கெடுதியையும் இழைத்திலது. பின்பு இராசமாதேவி, ஓர் இளங்காளைக்கு நிறையப் பொற்காசுகளைக் கொடுத்து, அந்தப்புரத்தில் இருக்கும் மணிமேகலையின் உடலிற் சில குறிகளை உண்டாக்கி, 'இவள் என்னைக் காதலித்தாள்,'' என யாவர்க்கும் தெரிவிக்குமாறு ஏற்பாடு செய்தாள். பொருளை விரும்பிய அக்காளை அந்தப்புரம் சென்றான். அவன் அந்தப்புர வரவு மணிமேகலைக்கு இராசமாதேவியின் வஞ்சனையை நன்கு தெரிவித்தது. அதை அறிந்ததும் இவள் தன் மந்திர வன்மையினால் ஆண் உருக் கொண்டிருந்தாள். அத்தோற்றத்தினால் அவன் நடுநடுங்கி ஓட்டமெடுத்தான். இறுதியாய் அரசி, தேவியைப் பன்னாட்கள் உணவின்றிப் புழுக்கறையில் அடைத்துவைத்தாள். தெய்வத் தன்மை வாய்ந்த நம் மணிமேகலை இதனாலெல்லாம் நசித்துப்போவளோ! ஊணொழி மந்திரம் இவளுக்கு யாதொரு துன்பமும் வாராது காத்தது. பின்பே நம் தேவியின் தெய்வத் தன்மை அரசிக்குப் புலனாயிற்று. தேவிக்குத்

தான் செய்த இன்னல்களைப் பொறுக்கு மாறு அவள் இறைஞ்சி நின்றாள். மணிமேகலை அவள் தனக்குப் புரிந்த இன்னல்களைச் சிறிதும் மனங் கொண்டாளில்லை. இது துன்பம் நேர்ந்த காலத்தில் மக்களுக்கு ஏற்படும் இயற்கைக் குணம் என்பதே இவள் கருத்து. இவள் தெய்வத் தன்மை, அரசியைப் பொறுத்ததோடு நின்றதா? அவளுக்கு மகன் இறந்த வருத்தம் நீங்க, இவள் நா, பல நீதிகளையும் அறவுரைகளையும் எடுத் தோதியது. இவளுடைய ஞானம் நிறைந்த சொற் கள் அவளை ஆற்றியது மட்டுமேயல்லாமல், அவ ளைப் பற்றற்றவளாகவும் செய்தன. ஈதன்றோ தெய்வத்தன்மை எனக் கூறுவது! இதனைப் பின் வரும் மணிமேகலைப் பகுதியாலறிக:

"'அறிவு திரித்திவ் வகனக ரெல்லாம்
எறிதரு கோலம்யான் செய்குவல்,' என்றே
மயற்பகை யூட்ட மறுபிறப் புணர்ந்தாள்
அயர்ப்பது செய்யா அறிவின ளாகக்
கல்லா இளைஞன் ஒருவனைக் கூஉய்
'வல்லாங்குச் செய்து மணிமே கலைதன்
இணைவளர் இளமுலை யேந்தெழி லாகத்துப்
புணர்குறி செய்து பொருந்தின ளென்னும்
பான்மைக் கட்டுரை பலர்க்குரை,' என்றே
காணம் பலவுங் கைந்நிறை கொடுப்ப,
ஆங்கவன் சென்றவ் வாயிழை யிருந்த
பாங்கி லொருசிறைப் பாடுசென் றணைதலும்,
'தேவி வஞ்ச மிது'வெனத் தெளிந்து
நாவியன் மந்திர நடுங்கா தோதி
ஆண்மை கோலத் தாயிழை இருப்பக்
காணம் பெற்றோன் கடுந்துய ரெய்தி,

'அரச ருரிமையில் ஆடவ ரணுகார்;
நிரயக் கொடுமகள் நினைப்பறி யேன்!' என்
றகநகர் கைவிட் டாங்கவன் போயபின்,
'மகனைநோய் செய்தாளை வைப்ப தென்?' என்
றய்யா நோயி னூனொழிந் தனளெனப்
பொய்ந்நோய் காட்டிப் புழுக்கறை அடைப்ப,
ஊணொழி மந்திர முடைமையின் அந்த
வாணுதல் மேனி வருந்தா திருப்ப,
ஐயென விம்மி யாயிழை நடுங்கிச்
'செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்,
என்மகற் குற்ற இடுக்கண் பொறுத்து!
பொன்னே ரனையாய்! பொறுக்'கென் றவள்தொழ,
....
'பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை!
உடற்கழு தனையோ, உயிர்க்கழு தனையோ?
உடற்கழு தனையேல், உன்மகன் றன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே?
உயிர்க்கழு தனையேல், உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது;
அவ்வுயிர்க் கன்பினை யாயி னாய்தொடி!
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்.''

— சிறை விடு காதை, 39-66; 72-79.

ஒருவர் தமக்குக் குற்றம் செய்தவரை நல்வழிப் படுத்தற்கு இருவழிகள் உண்டு: ஒன்று, சினத்தால் திருத்துதல்; மற்றொன்று பொறுமையினால் திருத்துதல். சினத்தினால் கொடுக்கும் தண்டனையால் செம்மைப்படுபவர் மிகச் சிலரேயாவர். பலர் தண்டனைக்கு அஞ்சித் திருந்தியது போன்று நடிப்பரே யல்லாமல், உண்மைத் திருத்தம் அவரிடம் காணுதல் அரிது. பொறுமையினால் செம்மைப்படுபவர்

பலராவர். அவர்தம் திருத்தம் மனத்துடன் பொருந்தியதாய், அவரிடம் என்றும் நிலைத்திருக்கும். மேற்கூறிய தண்டனை, சினத்தினாலும், பொறுமை அருளினாலும் ஏற்படுகின்றமையின், சினத்தின் வன்மையைக்காட்டிலும் அருளின் வன்மை பல கடின காரியங்களை முடித்துத் தரும் என்பது கண்கூடு.

பொறுமையின் இலக்கணம் யாது? ஒருவர் ஏதேனும் காரணம் பற்றியோ, அன்றி அறியாமையினாலோ தமக்குத் தீங்கிழைத்த காலத்தில் அதைப் பொறுத்துக்கொள்ளுதல் மட்டுமேயன்றி, அத்தீங்கை அவர்க்குத் திருப்பிச் செய்யாமலிருத்தலே பொறுமை எனப்படும். இவ்விலக்கணத்தை மனத்திருத்தி நம் மணிமேகலையை நோக்கின், இவள் இராசமாதேவிக்குத் தீங்கிழையாமல் பொறுத்ததுடன் நில்லாமல், அவளுக்கு அறவுரைகளும் பகர்ந்து; அவளை நல்வழியிலும் கொணர்ந்தாளாதலின், இப்பொறுமையின் இலக்கணத்திலும் இவள் உயர்ந்து நின்றாள் எனவே கூறுதல் வேண்டும். மனச் செருக்கினால் செய்யத் தகாத கொடிய செயல்களைத் தமக்குச் செய்பவரைத் தண்டித்தலினால், தண்டித்தவர்க்கு அப்போது ஓர் இன்பம் உண்டாகுமேயன்றி, அவர்தமைப் பொறுத்தலினால் ஏற்படும் அழியாப் புகழ் உண்டாகுமா? அத்தகையவரை அறிஞரும் ஒரு பொருளாக மதிப்பதில்லை! பொறுத்தவரையல்லவா, அவர் என்றும் பொன்னெனத் தம் மனத்தில் வைத்துப் போற்றுகின்றனர்?

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."
ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து."

—திருக்குறள்

என்பன இங்குச் சிந்திக்கத்தக்கன.

இங்ஙனம் அறிஞரால் போற்றப்படுவதும், நீங்காப் புகழை நிறுத்தக் கூடியதுமான இந்த ஒப்பற்ற பொறுமையைத் தெய்வத் தன்மை வாய்ந்தவரிடமன்றி மற்றவரிடம் காண இயலுமா? இறுதியாக, இவள் தெய்வத் தன்மை தான் பிறவி அற நோற்று நலமடையவும் இடந்தந்ததன்றோ!

தெய்வ அருள்: தெய்வத் தன்மை வாய்ந்த செயல்கள் பல மணிமேகலையிடம் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றையும் விரித்துரைப்பதெனின், நூல் மிக விரியாநிற்கும். ஆதலின், அவற்றைச் சுருக்கிக் கூறுவோம்: ஒருகால் உவவனத்தில் ஆதரவின்றி நின்ற இவளை, மணிமேகலா தெய்வம், உதயகுமரன் ஆபத்திலிருந்து தப்புவித்தது. மணிபல்லவத் தீவில் இவள் முன்பு தரும பீடிகை தோன்றி, இவள் பழம்பிறப்பின் நிலைகளை உணர்த்திற்று. அறநெறி வழாது தெய்வத்தன்மை வாய்ந்தவரைச் சென்றடையும் அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரம் இவள் கைப்புகுந்தது. முன் கூறிய மணிமேகலா தெய்வம், இவளுக்கு உணவின்றியே பன்னாட்கள் வன்மையுடன் வாழ்ந்திருத்தல், வேண்டும் போது வேற்றுருக் கொள்ளுதல், ஆகாய வழியில் பறந்து செல்லுதல் என்பவற்றிற்

காகிய மூன்று மந்திரங்களைப் போதித்தது. அம் மந்திரங்களினுலாய பயனை அப்போதைக்கப்போது இவள் துய்த்துக்கொண்டே வந்தாள். இவளைப் பல ஆபத்துக்களிலிருந்தும் நீக்கியவை, அம்மந்திரங் களேயாகும். பின்பு வஞ்சி மாநகரம் சென்று, கல்லுருவிலிருந்த கண்ணகி சில செய்திகளை அசரீரி யாகச் சொல்ல, அவற்றல் சில ஐயப்பாடுகள் நீங்கப்பெற்றுள். கல்வியறிவிற்சிறந்த பல மத வாதியர்களை வெல்லும் தெய்வ அருளும் இவளுக்கு இருந்தது.

இதுகாறும் எடுத்துரைத்தவற்ருல், கண்ணகி மணிமேகலை இவர்கள் இருவரின் இயல்புகளையும் ஊன்றிப் படிப்பவர், இவ்விருவருக்குமுள்ள பெருமைகளை அறிவது மட்டுமேயல்லாமல், கண் ணகியைக்காட்டிலும் மணிமேகலையே மனிதச் செயல், வீரச்செயல், தெய்வச் செயல்களில் உயர்ந் திருந்தனள் என்பதை நன்கு தெரிந்துகொள்வர்.

ஒருகால் மாதவியும் சுதமதியும் வஞ்சிமா நகரத்திலிருப்பதை மணிமேகலை தீவதிலகையால் அறிந்து, அவண் சென்ருள்; அவண் ஓரிடத்தில் கோவலன் கண்ணகி இவர்களின் உருவங்களைக் கண்டு, அன்பு மீதூர வலம் வந்து, அவர்களைப் போற்றி வணங்கினுள். பின்பு, கண்ணகியின் சிலையை நோக்கி, "என் அருமை அன்னுய், உன் வீரமும் தெய்வத்தன்மையும் என் நெஞ்சைப் பிணித்தன! யான் பெரிதும் பெருமையடைந்துள் ளேன்; ஆயினும், உன்னுடைய ஒருசெயல் எனக்கு ஐயத்தை விளைவித்துள்ளது. உன் தலைவர் பாண்

டியனுல் கொலையுண்டிறந்த பின், நீ அவருடன் உயிர் துறத்தலோ, தீப்பாய்தலோ, அன்றிக் கைம்மை நோன்பை மேற்கொள்ளுதலோ செய்யாமல், பாண்டியன் தன் பிழையை உணர்ந்து உயிர் துறந்த பின்பும் கோபந்தணியாது, மதுரையைத் தீக்கிரையாக்கி, பதினுன்காம் நாளில் கணவருடன் தேவருலகம் சென்றதற்குக் காரணம் அறிந்திலேன்!" எனப் பணிவுடன் வினவினுள். அவற்றைச் செவியேற்ற கண்ணகியின் ஆன்மா மறைய நின்று, "என் உயிரினும் இனிய உத்தம மணியே, என் ஆருயிர்த் தலைவர் வீணே கொலையுண்டிறந்ததை ஆற்ருத யான், அதற்குக் காரணமாயிருந்த மதுரையை எரிக்கத் தொடங்கினேன். அவ்வமயம் மதுராபதி என்னும் அந்நகரத் தெய்வம் என் முன் தோன்றி, 'உன் கணவன் மாண்டதற்குக் காரணம் மானிடர் அல்லர்; உங்கள் ஊழ்வினையேயாகும். ஆதலின், உன் சீற்றத்தைத் தணித்துக்கொள்க,' எனச் செப்பிற்று. அப்போதும் என் சினம் அடங்காமையின், மதுரையைத் தீக்கிரையாக்கினேன். முன்பு நாங்கள் இழைத்த நல்வினையினுல், இன்று தெய்வமாய் விளங்குகின்ருேம். இந்நல்வினை முடிந்தவுடன் சினத்தினுலாகிய பாவத்திற்கேற்ற துன்பங்களை அனுபவிப்போம்! இங்ஙனமே பல பிறவிகளையும் எடுத்து இறுதியில் அறிஞர் அற உபதேசத்தால் நிருவாணமடைவோம். இது நிற்க. என்னருமைப் பாவாய், நீ இந்த ஊரில் பல சமயங்களின் தத்துவங்களையும் கேட்டு, இறுதியில் புத்த சமயத்தைக் கடைப்பிடித்து, இப்பிறவி

யிலேயே நிருவாணம் அடைவாய்,'' எனச் சொல் லிற்று. பின்வருவது இளங்கோவடிகள் வாக்கு:

“ 'எம்மிறைக் குற்ற இடுக்கண் பொறாது
வெம்மையின் மதுரை வெவ்வழற் படுநாள்
மதுரா பதியெனும் மாபெருந் தெய்வம்
'இதுநீர் முன்செய் வினையின் பயன்........
....
உம்மை வினைவந் துருத்தலொழி யாது,' எனும்
மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னும்
சீற்றம் கொண்டு செழுநகர் சிதைத்தேன்;
மேற்செய்நல் வினையின் விண்ணகர் சென்றேம்;
அவ்வினை இறுதியின் அடுசினப் பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியா
தும்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்
பியாங்கணும் இருவினை உய்த்துமைப் போல
நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்து மிறந்தும் உழல்வோம்; பின்னர்
....
பிறவி நீத்த பெற்றிய மாகுவம்;
அத்திற மாயினும் அநேக காலம்
எத்திறத் தார்க்கும் இருத்தியுஞ் செய்குவம்;
நறைகமழ் கூந்தல் நங்கையும் நீயும்
முறைமையி னிந்த மூதா ரகத்தே
அவ்வவர் சமயத் தறிபொருள் கேட்டு
மெய்வகை யின்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்.''

—வஞ்சிமாநகர் புக்க காதை 11-66.,

இதனல் ஆன்ம உய்விலும் கண்ணகியைக் காட்டிலும் மணிமேகலை உயர்ந்தவள் என்பது தோன்றவில்லையா?

மணிமேகலை மாதவியின் வயிற்றிற் பிறந்திருப்பினும், இவள் சிறப்பியல்புகள் இவளை அவள் மகள்தான் எனச் சொல்லுதற்கியலாமல், அவளினும் மேலிடத்தில் நிறுத்தின. அங்ஙனமே, அப்பெற்ற தாய் மாதவியினால் இவள் கண்ணகியின் மகள் எனக் கூறப்பட்டிருப்பினும், இவள் உயரிய செயல்கள் அவளினும் உயரிடத்தில் நிறுத்தின. இதனால், மணிமேகலை, மாதவியின் புதல்வி என்றேனும் கண்ணகியின் புதல்வி என்றேனும் செப்பக்கூடிய மேன்மைகளைமட்டும் பெற்றிராமல், அவற்றிற்கும் உன்னத நிலையில் நின்று ஒளிருகின்றார் என அறிந்தாம்.

3. மணிமேகலை அறக்கடவுளின் மகளா ?

"அங்ஙனமாயின், இவளை யாருடைய மகள் என்றுதான் செப்புவது ?" என்னும் ஓர் ஐயப்பாடு தோன்றலாம். இவள், பெரிதும் மானிடர் மகள் எனப்பகரும் பண்பில் மட்டும் நில்லாமையின், இவளைத் தெய்வ மகள் என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. அங்ஙனமாயின், இவள் எத்தேவதையின் மகளாவாள்? இவளுக்குக் கலைமகளின் அருளும், திருமகளின் அருளும் நிறைந்திருப்பினும், இவள் செய்தன யாவும் பெரும்பாலும் அறத்திலேயே அடங்குமாதலால், இவளை அறத்தேவதையின் அருஞ்செல்வி என இயம்புதலே பொருத்தமுடையதாகும். ஒரு தெய்வத்தின் மகள் என்பது எதைத் தெரிவிக்கின்றது? அத்தெய்வத்தின் அருளை மிகுதியும் பெற்றிருத்தலையே

அன்றோ! இன்னும் சிறிது உட்செல்லின், கலை மகள் அருளைப் பெரிதும் பெற்றவரைக் கலை மகளே எனப் பகர்தல் போன்று, அறக் கடவுளின் அருளை மிகுதியும் பெற்ற மணிமேகலையை அறக்கடவுளே எனக் கூறுதலும் குற்றமாகாது!

இம்முறையில் இவள் அறக்கடவுளாய் நின்ற இடங்கள் பல உண்டு. இவள் தரும தேவதையா யிராவிட்டால், அவ்வமுத சுரபி இவள் கையில் வந்து சேருமா? கற்புக்கரசியார் ஆதிரையாரால் இடப்பட்ட அன்னம்,இவள் கரத்தால் எடுக்க எடுக்க வளராநிற்குமா? பல இடங்கட்கும் சென்று பல பேருக்கும் ஓயாமல் உணவை ஊட்டிய போதும், இவள் உடலும் மனமும் சோர்வடையாமல் இருக்குமா? இவள் ஒரே ஒரு வார்த்தையினால் சிறைக்கோட்டம் அறககோட்டம் ஆகுமா? மிக்க அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த இராசமாதேவி நல்லறிவு பெற்றுத் திருந்துவளா? முற்பிறவியில் ஆபுத்திரனாயிருந்து பிற்பிறவியில் புண்ணிய அரசன் என்னும் பெயருடன் நாகபுரத்தில் அவதரித்திருந்த அரசன் இவள் வார்த்தைகளினால் தெளிந்து தன் பழைய பணபுகளை மேற்கொள்வனா? ஞானத்திற்றுறை போய மதவாதியர் பலரும் இவளுக்குத் தோற்று நிற்பரா? இறுதி வரையும் ஒரே மன வுறுதியுடன் நின்று, உயரிய நோன்பினை நோற்று, பிறவிப் பயனை எய்த முடியுமா? இத்தகைய பல காரணங்களினால் இவள் அறககடவுளின் அருளால் தோன்றி,அறக்கடவுளாகவே நின்றாள் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

இதுகாறும் இயம்பியவற்ருல், மாதவியார் மனத் துறவு பூண்டவரென்றும், கண்ணகி மாக்களியல் பில் செல்லாமல், மனிதச் செயல், வீரச் செயல், தெய்வச் செயல்களில் சிறந்து நின்றனள் எனவும், இவர் இருவருடைய மாண்புகளும் சிறப்புற்றிருப் பினும், மணிமேகலை எல்லா வகையிலும் இவர் களைக்காட்டிலும் மேன்மையுற்றிருந்தாளெனவும், ஆதலின், இவள் மாதவியாரின் மகள், அன்றிக் கண்ணகியின் மகள் எனச் செப்பக்கூடிய நிலை யில் நிற்காமல், 'அறத் தேவதையின் மகளே' என இயம்பக்கூடிய நிலையில் இருந்தாள் எனவும், தரும தேவதையின் முழு அருளையும் பெற்ற இவள் அறக்கடவுளாகவே நின்றனள் எனவும், இதற்கு இவளிடம் நிகழ்ந்த அறச்செயல்களே போதிய சான்றுகளெனவும் தெள்ளிதின் அறிகின்ருேம்.

மங்கையரின் மாண்பு

(இலக்கிய ஆராய்ச்சி)

இரண்டாம் பிரிவு

இராமாயண மகளிர்

---

1. திரிசடை அரக்கர் குல மங்கையா?

1. மக்கள் யார்?

உலகில் பொதுவாக ஒருவர் தோன்றிய குலத்தைக்கொண்டே, அவர் நல்லவர் தீயவர் எனக் குறித்தல் வழக்கு. ஆனால், இக்கருத்திற்கு அற நூல்களும் அறிஞரும் உடன்படுதல் இல்லை. சில போது, அனுபவமும் இதற்கு இடந்தருதல் இல்லை. ஏன்? உயர்குலத்தில் தோன்றிய சிலர் கொடியராகவும், தாழ்குலத்திற் பிறந்த சிலர் நல்லாராகவும் இருத்தலைக் காணலாம். ஆகலின், 'ஒருவர் கயவரா, அன்றிச் சான்றோரா?' என அறிதற்கு, அவர் எப்போதும் மேற்கொண்டு ஒழுகும் ஒழுக்கங்களை ஆராய வேண்டுமேயல்லாமல், அவர்தம் குலங்குடிகளிடம் நோக்கைச் செலுத்துதல் அத்துணை அறிவுடைமையாகாது. சில போது இது மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கிவிடும். இதற்குச் சான்று பகரக் கூடியவர் பலரிருப்பினும், திரிசடையின் தந்தை விபீடணனே இதை நிலைநிறுத்தத் தக்கவனாவான்.

இவ்விபீடணன் விசிரவசு என்னும் முனிவருக்கும் கைகசி என்னும் அரக்க மாதிற்கும் தோன்றியவன். இவன் இறைவன் தியானத்திலேயே மனத்தையிருத்திப் பல ஆண்டுகள் தவம் புரிந்தான். இதற்கு மனமுவந்து தன் முன் தோன்றிய நான்முகனை நோக்கி, 'எனக்கு எத்தகைய இடுக்கண் நேரினும், என் நெஞ்சம் அறத்திலேயே நிலை நின்று, யான் அறச் செயலையே செய்யுமாறு அருள்புரிதல் வேண்டும்,' என வேண்டிக்கொண்டான்; அங்ஙனமே வரம் பெற்று மகிழ்ந்தான். பின்பு இவன் மனம் தீய அரக்கனை விட்டு நல்லவனாகிய ராமன் நட்பையே நாடி நின்றது. "தூதுவரைக் கொல்லுதல் ஆண்மை வாய்ந்த அரசர்க்கு அழகன்று," என இவன் இராவணனுக்குச் செப்பிய நல்வார்த்தைகளே, அனுமான் உயிரைக் காத்தன எனக் கூறுதல் மிகையாகாது. இவன் மென்மைக் குணங்கள் பலவும் வாய்ந்த கந்தருவ அரசன் புதல்வியாகிய சரமை என்பவளை மணம் புரிந்து இல்லறத்தை நல்லறமாகச் செய்து வாழுங்கால் திரிசடை என்னும் இம்மகள் தோன்றினாள். இது நிற்க.

அறிஞர் யாரை அரக்கர் எனக் கருதுகின்றனர்? உலகில் உள்ள உயிர்த்தொகுதிகள் யாவும் இருபகுதியுள் அடங்கும்: ஒன்று மாக்கள் பகுதி; மற்றொன்று மக்கள் பகுதி. இவை இரண்டனுள் மாக்கள் பகுதியாகிய விலங்குகள் முதலியன, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்ன காரியங்களைச் செய்தனவோ, அவற்றைத்தாம் இன்னும் செய்யாநிற்கின்றன. அவற்றின் அறிவு,

காலத்திற்குக் காலம் எவ்வகையிலும் முன்னேறிய தாகத் தெரிந்திலது. இவற்றைக்கொண்டுதான் அவைகள் உயர்வல்லாத குலம் (அஃறிணை) எனப் பகரப்படுகின்றன. மக்கட்டொகுதியோ, அங்ஙன மன்று. அறிவு வாய்ந்த ஒருவன், ஆண்டிற்கு ஆண்டு மாதத்திற்கு மாதம் புத்தம்புதிய பொருள் களைக் கண்டு பிடிக்கிறான். அவற்றை ஆய்ந்து ஆய்ந்து நோக்குகிறான்; அவற்றின் நுட்பங் களை வரையறுக்கிறான்; அவற்றைப் பலருமறிய வெளிப்படுத்திப் புகழெய்துகிறான். இதைத்தான் பகுத்தறிவு என்கிறோம். இதனாற்றான் இவன் உயர் குலம் (உயர்திணை) என்னும் பெயரைப் பெற்றிருக் கிறான். இம்முறையில் மாக்களுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாடு நன்கு புலப்படாநிற்கின்றது. ஆனால், மேற்கூறிய அறிவு வாய்ந்தவர் யாவரும் மக்கள் தொகுதியுள் சேரும் வாய்ப்புடையவர் தாமா என்பதை நோக்குதல் வேண்டும். அறிவை நோக்கி அவர்களை மக்கள் எனக் கூறினும், அவர் கள் உண்மை மக்கள் ஆதற்கு இன்னும் சில சிறப்பியல்புகள் அவர்களிடம் அமைந்திருத்தல் வேண்டும்.

பொருள்களின் தன்மைகளை அறியும் பகுத் தறிவு பெற்றவருள்ளும் சிலர், தம் நலத்தையே கருதித் தமக்கும் தம் சுற்றத்தினருக்குமட்டும் நலந் தேடுதலிலேயே உழலாநிற்பர். இன்னும் சிலர், தாம் நலமடைதற்பொருட்டு, பிறருக்கு இன்னலை யும் இழையாநிற்பர். இவர், இதனால் மற்றவர் அடையும் துன்பங்களைச் சிறிதும் கருதுதல் இல்லை.

இவர்கட்குப் பகுத்தறிவு இருந்தும் பயன் யாது? இவர்களை மக்கட்டொகுதியுள் சேர்த்தல் யாங்ஙனம்? வேறு சிலர், தம்மைப் போன்றே பிறரையும் கருதி, அவர்கட்கு இன்னல் உண்டாகுங்கால் அதைத் துடைக்கப் பெரிதும் முயல்வர். அதில் உண்டாகும் வெற்றியே அவர்கட்குப் பேரின்பத்தை உண்டாக்குவதாகும். அன்றியும், அச்செயலில் தங்கட்கு ஊறு நேரினும் பொருட்படுத்தாது, பிறருக்கு நலம் செய்வதிலேயே தம் கருத்தைச் செலுத்தாநிற்பர். அத்தகையவரல்லரா உயர்குலத்தினராகவும் மக்களாகவும் எண்ணப்படுதற்கு உரியவராவர்!

இங்ஙனம் பிறர் துன்பம் துடைத்து, அவர்தம் இன்முகம் காணுதலிலேயே ஊன்றி நிற்றற்கு அடிகோலியாக இருக்கும் பண்பு யாது? எந்தப் பண்பு இப்பரந்த உள்ளத்தை உண்டாக்குகிறது? எது மனிதரை மனிதராகச் செய்கிறது? எஃது இவ்வுலகத்திலேயே பேரின்பத்தை ஈகிறது? எது தெய்வத் தன்மையை உண்டாக்குகிறது? எது மனிதரைத் தெய்வமாகவே செய்துவிடுகிறது? கூர்ந்த பகுத்தறிவு வாய்ந்த மக்கட்கு, ஒருவர் படும் துன்பத்தைக் காணுங்கால், "ஐயோ!" என்று மனத்தில் தோன்றும் ஓரிரக்கக் குணமே, இத்தனை நலங்கட்கும் காரணமாகும்! இவ்விரக்கக் குணம் அவர்களை வாளா இருக்க விடுகிறதா? உடனே, அதற்கேற்றவைகளை மேற்கொண்டு, பிறர் இன்னலைப் போக்குதற்கு வழி தேடுமாறு செய்கிறது. இதற்குக் கருணை, தயை, அருள் எனப்

பல பெயர்கள் உண்டு இஃதொரு பிறவிக் குணமாகும். 'கொடையும் தயையும் பிறவிக் குணம்,' என்னும் ஔவை வாக்கை நோக்குக.

ஒருகால் வேடுவன் ஒருவன், மழைக்கும் காற் றிற்கும் தாங்காமல் குளிரால் நடுங்கினவனாய், ஒரு பறவை வதியும் மரத்தடியில் நிற்க, அவ்வேடுவன் தன் பேட்டைப் பிடித்துக்கொண்டுள்ளான் என்பதை அறிந்தும், அவன் அப்போது படும் துன்பத்திற்காற்றாது மனமிரங்கி, அவன் குளிரைப் போக்கத் தீமூட்டியதோடன்றிப் பசியைத் தீர்க்கத் தானும் நெருப்பில் பாய்ந்து அவனுக்கு உணவாயும் நின்றதன்றோ? இஃது எத்தகைய அருட்குணம்! இது தெய்வப் பண்பன்றோ? இது கேவலம் பறவை யாயிருப்பினும், இதனை மாக்கட்பகுதியில் சேர்த்தல் தகுதியுடையதாமா? கருணையற்ற சில மக்களினும் இஃதுஉயர்ந்ததெனவன்றோ செப்புதல் வேண்டும்? இதனால் அருட்குணம் பெற்றவரே மக்களினத்தில் சேருதற்குத் தகுதியுடையரென்றும், அஃதில்லார் அவ்வினத்தில் சேருதற்குத் தகுதியற்றவரென்றும் அறிந்தோம்.

2. திரிசடையின் அருட்குணம்

இதை மனத்திற்கொண்டு அரக்கரிடம் செல்லு தல் வேண்டும். அரக்கர் என்ன செய்கின்றனர்? தேவரையும் மக்களையும் வருத்துகின்றனர்; அவர் களைத் தம்பால் கொணர்கின்றனர்; சிலரைத் தாம் இன்பந்துய்க்கும் கருவிகளாகவும், சில ரைப் பணியாளராகவும் பயன்படுத்திக்கொள்ளு

கின்றனர்; சிலரை வருத்தி அவர் படும் துன்பத்தைக் காணுதலே தமக்கு இன்பம் என எண்ணுகின்றனர்; சிலரைக் கொன்று அவர் செந்நீரைக் குடித்து மாமிசத்தைத் தின்று மகிழ்கின்றனர். இங்ஙனம் அரக்கர், மக்களுக்கும் தேவர்களுக்கும் செய்யும் கொடுமைகள் அளவிடற்பாலனவல்ல. தாடகை என்னும் அரக்கி முனிவருக்கும் மற்றவருக்கும் செய்த இன்னல்களைப்பற்றி விசுவாமித்திரர், ஸ்ரீராமபிரானுக்கு எடுத்துக் கூறியதே இதற்குத் தக்க சான்றாகும்.

"தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தெமைக்
கோதென் றுண்டிலள்; இத்தனை யேகுறை!"

"மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையிற் றீமையெ தோவைய!"

— **தாடகை வதைப் படலம்**

இங்ஙனம் தம் நலத்தையே கருதி இரக்கம் என்பதே இன்னதென ஓராமல் வாழ்பவரையே அறிஞர், அரக்கர் எனக் கருதுகின்றனர். இத்தகைய தீயவர்களை எங்ஙனம் மக்களினத்தில் சேர்ப்பது? மாக்களினத்திலல்லவா இவர்களைச் சேர்ப்பித்தல் வேண்டும்? ஆகவே, இலங்கையில் வதிந்த இராவணன் முதலியவரும் இம்முறையிலேயே வாழ்ந்தனராதலின், மாக்களினத்தில் வைத்தெண்ணப்படுபவரேயாவர். ஈண்டுச் சீதாபிராட்டி இராவணனை நோக்கி, "ஏகு வழியறிந்திலாத நீசா!" என்பதை நோக்குக.

இனி, இத்தகைய அரக்கர் குலத்தில் தோன்றிய திரிசடையைப்பற்றி நோக்குவோம்: இவள்,

தருமாத்துமா எனச் சொல்லப்பட்டவனும், அறச் செயலிலேயே ஊன்றி நின்றவனுமான விபீடணனிடம் தோன்றிய அருமைப்புதல்வி என்பதை முன்னரே கூறியுள்ளோம். இவள் குணங்கள் அரக்கருக்கு முற்றும் வேறுபட்டு, மனம் வாக்குக் காயம் மூன்றும் அறத்திலேயே நிலைபெற்று நின்ற விபீடணன் அளவாகவே நின்றனவா? அன்று அன்று. இவள் பண்புகள் தந்தையைக்காட்டிலும் பலவகையிலும் விஞ்சிநின்றன எனவே இயம்புதல்வேண்டும். விபீடணனுல் தன் தமையன் தீச்செயல்கள் பொறுத்தற்கியலவில்லை. அவ்விராவணனுக்குப் புத்தியும் புகட்டினுன். அவன் அவற்றை ஏற்றுக்கொள்ளாமையேயல்லாமல், விபீடணனையும் தன்னை விட்டு நீங்குமாறு புன்சொற்கள் பலவற்றையும் வழங்கினுன். தருமத்தை நாடியும், தீயவரிடமிருந்து தன்னை விலக்கிக்கொள்ள வேண்டும் என்பதைக் கருதியும், நல்லவரைச் சேர்ந்து தன் ஆன்ம உய்வைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதை எண்ணியும் விபீடணன், ஸ்ரீராமபிரானிடம் சென்று சேர்ந்தான். இதில் சிறிது சுயநலம் உள்ளது எனச் சிலர் கூறினும் கூறுவர். ஆனல், இவன் மகளாகிய திரிசடை செய்த காரியமோ, தன்னலமேனும், வஞ்சகமேனும், அன்றி வேறெந்தக்குற்றமேனும் கலந்துள்ளது எனச் செப்புதற்கு இடந்தருவதன்று.

சீதா பிராட்டி, அசோகவனத்தில், கொடிய புலிக்கூட்டத்தின் இடையில் அகப்பட்ட பெண் மான்போன்றும், கற்பாறையின் பிளவில் முளைத்

தெழுந்து மழைத்துளி ஒன்றையும் பெறுத சஞ்சீவி மூலிகை போன்றும், அழுதத்தால் தீட்டப்பெற்ற ஓவியம் புகை படிந்ததைப்போன்றும், அன்பரைப் பிரிந்த துன்பமே ஒருருக்கொண்டதுபோன்றும், தன்னந்தனியளாய் இருக்கின்ருள். தன் நாயகர் நிறத்தை யொத்தகரிய பொருள்களைக் காணுந்தோறும் அவள் கண்ணீர் ஆருய்ப்பெருகுகின்றது. தன் நாயகரை நினைத்துக் கீழே விழுகின்ருள்; வாய் விட்டுப் புலம்புகின்ருள்; எழுகின்ருள்; பரிதபிக்கின்ருள்: இங்ஙனம் ஆற்ருமையினுல் அவள் இயற்றும் காரியங்கள் பலவாகும்.

"வன்ம ருங்குல்வா ளரக்கியர் நெருக்கவங் கிருந்தார்;
கன்ம ருங்கெழுந் தென்றுமோர் துளிவரக் காணு
நன்ம ருந்துபோ னலனற வுணங்கிய நங்கை
மென்ம ருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்தாள்."

"தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே ஒக்கின்ற உருவாள்."

"அரிய மஞ்சினே டஞ்சன முதலியவை யதிகங்
கரிய காண்டலுங் கண்ணநீர் கடல்புகக் கலுழ்வாள்
உரிய காதலி னெருவரோ டொருவரை உலகில்
பிரிவெ னுந்துய ருருவுகொண் டாலன பிணியாள்."

"விழுதல் விம்முதல் மெய்யுற வெதும்புதல் வெருவல்
எழுதல் எங்குத லிரங்குத லிராமனை யெண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல் துயருழந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றும் செய்குவ தறியாள்."

அவள் படும் இத்தனைத் துன்பங்களையும் தங்கள் கண்ணினுலே பார்த்துக்கொண்டே இருக்கின்ருர்கள் அரக்கிகள். அவர்கள் மனத்தில் சிறிதேனும் கருணை உண்டானதா? அன்றி, "நம்மைப்போன்ற

பெண்தானே! இவள் இத்துணைத் துன்பத்திற் காளாயிருக்கின்றனளே!" என்னும் அனுதாப மேனும் அவர்கள் மனத்தில் தோன்றிற்ரு? ஒன்றுமே வேண்டா. இத்தகைய இடுக்கணோடு உறைகின்ற பிராட்டிக்கு ஒரு துன்பமும் செய்யாம லேனும் இருந்தனரா? அஃதும் இல்லையே! சிலர், கண் களில் நெருப்புப் பொறி வீசச் சூலத்தைக்கையி லேந்தி, "இவளைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்!" எனவும், " இவள் குடரைத் தின்னுங்கள்! தின்னுங் கள்!" எனவும் அச்சுறுத்தினர். சிலர், பிராட்டியை நோக்கி, "உன்னை விரும்பி இருக்கும் இராவணன் பிரம குலத்தில் வந்தவன்; உலகத்திற்கெல்லாம் தலைவன்; வேதங்களில் வல்லவன்; மிக்க அறிவுடை யவன்; உன்னிடம் உண்மை அன்பைச் செலுத்து பவன் ; இத்தகையவனை நீ மணந்துகொண்டால், உனக்குண்டாகும் இழுக்கு யாது?" என இகழ்ந் தனர். சிலர், "மானிடப் பெண்ணாகிய உன்னை அவன் விரும்பியதற்கு நீ மகிழ்வையல்லவா அடை தல் வேண்டும்? பெண்களிற்கொடியவளே, புண் ணிற் கோலிட்டது போன்று கடுஞ்சொற்களால் அவன் மனத்தை வருத்தினையே! நீயும் உன் குடியும் அடியோடு அழிதற்கு நீயே வழி தேடிக்கொண் டனையே!" என்றனர். சிலர், "நல்லறிவில்லாதவளே, பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் நீயே பழியைத் தேடிக்கொண்டாய்! இத்தீய மதியை விட்டுவிடு! இப்போதும் நீ அவனை மணந்துகொள் வதாக ஒப்புக்கொள்ளுவையேல், எல்லாவற்றையும் அடைவாய்," என அதட்டினர். இத்தீச்சொற்கள்

தன் செவிசுட, நெருப்பிலிட்ட புழுவைப் போன்று துடித்துக்கொண்டிருந்தாள் நம் சீதாபிராட்டி.

இத்தகைய பேய்களுக்கு இடையில் தெய்வப் பெண்ணன்ன ஒரு நல்லாள் இருந்தாள். இம்மங்கையே விபீடணனின் தவப்புதல்வியாகிய திரிசடையாவாள். இவள் அவ்வமயம், நச்சுப்பூண்டு களுக்கிடையில் முளைத்தெழுந்த சஞ்சீவிக்கும், நச் சரவங்களை அடக்கும் கலுழனுக்கும் ஒப்பநின்ருள். இவள் மனம் துடித்தது; உடல் பதைத்தது; கண் கள் நீரைக் கான்றன. "அந்தோ! ஈதென்ன கொடுமை! இக்கொடிய அரக்கிகள் சொல்லும் சொற்களும், செய்யும் செயல்களும் இவர்களுடன் பிறந்து வளர்ந்த எனக்கே தாங்க முடியவில்லையே! உயர்குலத்தில் தோன்றி, கற்பையே அணியெனக் கொண்டு வாழும் மெல்லியளாகிய இவள் அவற்றை ஆற்றிநிற்றல் யாங்ஙனம்? இவள் நெஞ்சம் எங்ஙனம் புண்பட்டுள்ளதோ! தன்னந்தனியளாகிய இவளைத் தாங்குவாரில்லையே! நெருப்பிலிட்ட பூங்கொம்பு போன்றல்லவா இவள் வாடி வதங்கிக் கிடக்கின் ருள்! செல்வமும் வீரமும் நிறைந்த இத்துணைப் பெரிய நாட்டிலே இவ்வேழை மகள் ஒருத்திக்கு இரங்குபவர் ஒருவரையும் கண்டிலேனே! இவ்வரக்கி களின் அறிவு இருந்தவாறு என்னே! உயிர்களைப் பிசைந்து தின்னும் இராவணனையே இடித்துரைத்த இவள் வீரச்சொற்களையும், உறுதிப்பாட்டையும் சிறிதும் நோக்கினர்களில்லையே! அரக்கிகள் கொடுமையுற்றவர்களே. ஆயினும், இவர்கள்பொது அறிவையும் பெறவில்லையே! பிறரை வருத்துதலே

தம் பிழைப்பெனக் கொண்டுள்ளனரே! இவர்கள் மனமென்ன கல்லோ, இரும்போ? தெரிந்திலதே! இவர்கள் மனித உருவைத் தாங்கியிருப்பினும், இரக்கமென்பது சிறிதுமில்லாத இவர்கள் உயிர் வாழ்க்கையினுல் யாருக்கு என்ன பயன்? பிறரைத் துன்புறுத்தற்கே இவர்கள் தோன்றினுர்கள் போலும்! அரக்க ஆண் மக்களிடந்தான் இத் துணைக் கொடுமைகள் குடி கொண்டிருக்குமென நினைத்தேன்? பிறருக்குக் கொடுமை இழைப்பதில் அவர்கட்கும் முன்னணியில் அல்லவா இப்பேதை கள் நிற்கின்ருர்கள்! இவர்களை இங்ஙனமே விட்டு விடின், இவர்கள் இழைக்கும் தீவினைகளுக்கு அளவே இராது. ஐயோ! இத்தெய்வத்தன்மை வாய்ந்த மங்கை மாண்டொழியினும் ஒழிவாள்! ஆதரவற்று நிற்கும் இவளைக் காத்தல் என் கடமை யாகும்,'' எனக் கருதி அவர்களைப் பார்த்துச் சில சொல்லத் தொடங்கினுள்:

"அரக்கிகளே, நீங்கள் இம்மங்கையை இன்னுளென அறியீர்கள்! தெய்வமன்னவள்—கற்பொழுக்கம் வாய்ந்தவள்—கணவனையன்றி மற்றவரைக் கனவிலும் கருதாதவள்— இவள் நன்மைபெறுதற் கேற்ற நற்கனவுகள் சிலவற்றை யான் கண்டிருக்கின்றேன். இவளுக்கோ, நல்ல நிமித்தங்களும் பல தோன்றியிருக்கின்றன. ஆதலின், விரைவில் இவளுக்கு மங்கலம் உண்டாகும். உங்கள் தீச்செயல்களை இவளிடம் செலுத்துதல் தகுதியுடையதன்று. இவளுக்குத் தீமைசெய்தால், நீங்கள் கெடுவீர்கள்," என நயத்துடனும் பயத்துடனும் அவர்கட்கு

அறிவு புகட்டினாள். திரிசடையின் நற்போதனை அவர்கட்குச் சிறிது நல்லுணர்ச்சியை உண்டாக்கிற்று. அவர்கள் மனம் ஒருவாறு திரிந்து பிராட்டியை அச்சமுறுத்தலைக் கைவிட்டுப் பெட்டியிற் பாம்பென அடங்கியிருந்தார்கள். அவ்வமயம் பிராட்டியின் நெஞ்சமும் அச்சத்தை ஒழித்துச் சிறிது ஆறுதலைப் பெற்றிருந்தது.

ஈண்டுத் திரிசடையின் இரக்கமனத்தையும் ஆண்மைக் குணத்தையும் காணுதல் வேண்டும்! அரக்கர் நெஞ்சமாகிய நிலத்தில் என்றும் முளைத்தெழாத இரக்கம் என்னும் கற்பகத்தரு, இவள் மனத்தில் நன்கு வேர் கொண்டு முளைத்திருந்தது. அத்தரு, பலருக்கும் பல நன்மைகளையும் ஈயுமன்றோ! படர்தற்குக் கொழுகொம்பற்று அலையும் கொடியைப்போன்று தாங்குவாரின்றித் தவித்துக்கொண்டிருந்த பிராட்டிக்குத் துன்பமுண்டாகாவகையைச் சூழ்ந்தனள். திரிசடையின் அச்சூழ்ச்சி பிராட்டிக்கு ஆறுதலை அளித்தது. அதனால், அவள் உயிர் உடலில் நிலைபெற்றது. அவ்வமயம் திரிசடை, அவண் இருந்த அவ்வரக்கிகளை அடக்கி அச்சுறுத்தவில்லையேல், எதற்கும் அஞ்சாத அப்பேய்கள் சீதைக்கு இன்னும் என்னென்ன தீங்குகளை இழைத்திருப்பார்களோ? அவற்றைத் தாங்காத அப்பிராட்டி என்ன நிலையை அடைந்திருப்பாளோ? ஒருகால், தன் ஆவியையும் அகற்றிக்கொண்டிருக்கவும் கூடும்! அவள் மரணம் இராமபிரான் உயிரையும் உண்டிருக்கும்! அவன் பிரிவு இலக்குவன், பரதன், சத்துருக்கினன் முதலியவரின் உயிர்களையும்

கொள்ளைகொண்டிருக்கும். பின்பு தாயரும், சுற்றத்தினரும், அயோத்தி மக்களும் உயிர் வாழ்தல் ஏது! இம்முறையில். கொடிய தீச்செயலாளரின் செயல் ஒரு நாட்டையே நாசஞ்செய்திருக்குமன்றே! மனத்தினுல் நினைத்துப்பார்த்தற்கும் இயலாத இப்பெரிய இன்னல், யாரால் தடுக்கப்பட்டது? எத்தெய்வப் பண்பினுல் ஒழிந்து நின்றது? திரிசடை என்னும் மாசற்ற பெண்ணினிடமிருந்து கிளர்ந்தெழுந்த மாண்புற்ற இரக்கக் குணத்தினுலன்றே?

திரிசடையினிடம் தெய்வப் பண்பாகிய இரக்கம் ஒன்று மட்டுமா அமைந்திருந்தது? இரக்கம் அமைந்த சிலர் கோழைத் தன்மை வாய்ந்தவர்களாயிருக்கவும் கூடும். திரிசடைக்கோ, இரக்கத்துடன் ஆண்மையும் பொருந்தியிருந்தது. சிலர், ஆண்மை என்பது ஆண்களுக்குத்தான் இயற்கையாய் அமைந்த குணமென்றும், அவ்வாண்மை, தன்னை எதிர்த்து வந்த பகைவரை வெல்லுதற்குத்தான் பயன்படுமென்றும் கருதுவர். இக்கருத்து அத்துணைப் பொருத்தமுடையதன்று. பெண்மையிலும் ஆண்மையுண்டு; ஆண்மையிலும் பெண்மையுண்டு.

முன்னர்க் கூறியவாறு போர் வீரர் போர்க்காலத்தில் கையாளுவது மட்டும் ஆண்மையன்று ஒருவர் தீநெறிச் செல்கின்றவர்கட்கு அறிவு புகட்டி அவர்களை நன்னெறியில் செலுத்துகின்றார்; ஒருவர் மற்றவருக்குத் துன்பமிழைத்துக்கொண்டிருப்பவரை நயத்தாலும் பயத்தாலும் அடக்குகின்றார்;

ஒருவர், மக்கள் யாருக்கு இன்னல் இழைக்கின்றார்களோ, அவர்தம் அருமைபெருமைகளை அப்பேதையர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் அப்பெரியாரிடம் மதிப்புக்கொள்ளுமாறு செய்கின்றார். இவர்கள் இயற்றும் இவைகள் யாவும் ஆண்மைக் குணத்தைச் சார்ந்தனவல்லவா? திரிசடைக்கு இருந்த ஆண்மைக் குணம் மேற்கூறிய முத்திற உபாயங்களையும் கைக்கொள்ளுமாறு செய்ததன்றோ?

போரில் காட்டும் ஆண்மையைக்காட்டிலும் பிறரைத் திருத்துவதில் பயன்படுத்தும் ஆண்மை சிறந்ததெனக் கொள்க. ஏன்? போராண்மை, ஒருபோது நன்மையையும், ஒருபோது தீமையையும் உண்டாக்கும்; அன்றியும், ஒருவர் ஆண்மை அஃதற்ற மற்றவர்க்குக் கெடுதியையே விளைவிக்கும் என்பது ஒருதலை. பிறருக்கு நன்மை விளைவிப்பதிலேயே கண்கொண்ட இவ்வாண்மை, அதை மேற்கொண்டவருக்குப் 'பிறரை நல்வழிப் படுத்தினோம்!' என்னும் எண்ணத்தினால் ஆனந்தத்தையும், ஆறுதலையும், திருப்தியையும் அளிக்கின்றது; இவர்தம் அறிவுரையை ஏற்றுக்கொண்டவர்க்கோ, 'நாம் செந்நெறி படர்ந்து உய்ந்தோம்!' என்னும் நினைப்பினால் மகிழ்வையும் அமைதியையும் தருகின்றது. இங்ஙனம் இருதிறத்தினருக்கும் இன்பத்தை அளிக்கும் இவ்வாண்மை மற்றதனைக்காட்டிலும் மேம்பட்டதன்றோ?

ஆகவே, இரக்கம் ஆண்மை என்னும் இவ்விரு தெய்வப் பண்புகளும் அமைந்து, இவற்றைச் செய

விலும் கொணர்ந்து, பலருக்கும் நலம் விளைத்த திரிசடையை அரக்கர் குல மங்கை எனக் கூறுதல் பொருந்துமா?

3. திரிசடை சீதையைத் தெளிவித்தல்

திரிசடை சீதாபிராட்டிக்குப் புரிந்த உதவிகளைக் காண்போம்: பிராட்டி பின்னர்க் கூறியவாறு, தன் ஆருயிர் நாதரைப் பிரிந்த ஆற்ருெணுத் துயரம் தன்னை வருத்த, கொடிய அரக்கிகளின் குழாத்திடையில் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கின்ருள். அவளை ஆதரிப்பவரோ, அவள் துக்கத்தை ஆற்றுபவரோ ஒருவருமிலர். அவ்வமயந்தான் ஸ்ரீராமபிரானேடு கூடிக் குலாவி இன்புற்று இருந்த நிலைகள் ஒன்றன்பின் ஒன்ருக அவள் நினைவிற்கு வருகின்றன. மதுபானம் குடிப்பவன், குடித்தவுடன் ஊக்கத்தையும், பின்பு சோர்வையும் அடைதல் போன்று, இந்நினைவுகள் அவளை முதலில் சிறிது தளிர்க்கச் செய்து, பின்பு அவளுக்குப் பெரிதும் தளர்ச்சியை உண்டாக்குகின்றன. "அந்நிலை இனி எப்போது உண்டாகுமோ! பாவியாகிய யான் இராமபிரானேடு சேரும் காலமும் ஏற்படுமா? அவர் அயோத்தி சென்று மகுடம் சூடும் மாண்பினைக் காணும் பாக்கியம் எனக்கேது? அரியாசனத்தில் அவருடன் அமரும் அமைப்பு கொடியாளுக்குக் கூடுதல் யாங்ஙனம்? இப்புண்ணியத்தைப் பெருத யான் இப்புவியில் இருந்துதான் பயனென்னை?" எனப் பலப்பல பன்னிப் பெருந்துயரில் ஆழ்கின்ருள். ஒருவர் பன்னுட்கள் துன்பத்திலேயே ஆழ்ந்திருக்க இறை

வன் விடுவதில்லையல்லவா? இதற்கு இயற்கையும் இடந்தருதலில்லை. இம்முறையில் பிராட்டிக்குச் சில நன்னிமித்தங்கள் தோன்றுகின்றன.

பண்டைக் காலத்தில் நம்மனோர், நிமித்தம், சகுனம், கனவு முதலியவற்றில் மிக்க நம்பிக்கை வைத்திருந்தனர். இப்போதும் சிலருக்கு இவற்றில் ஊற்றம் உண்டு. இவைகள், ஒருவருக்குப் பின் நிகழப்போகும் நன்மை தீமைகளை முன்னர்த் தெரிவிக்கும் குறிகள் என்பது நம் முன்னோர்களின் கருத்து. மக்களுக்குத் தத்தம் உடலில் ஏற்படும் துடிப்புஅசைவு முதலியவற்றிற்கு நிமித்தம் எனவும்; அவர்கள் எங்கேனும் செல்லும் போதோ, ஏதேனும் நினைத்தல் செய்தல்களை மேற்கொள்ளும் சமயத்திலோ ஏற்படும் மற்றவர் வருகை, அவர்தம் பேச்சு, பறவைகளின் போக்கு முதலியவை சகுனம் எனவும், தூக்கத்தில் காண்பவை கனவு எனவும் சொல்லப்படுகின்றன. இவற்றுள் எவை நன்மையளிக்கும், எவை தீமையளிக்கும் என்பதைத் தெரிவிக்கும் நூல்களும் உண்டு. அவைகளைப்பற்றிய ஆராய்ச்சிகள் ஈண்டு வேண்டற்பாலனவல்ல.

மிக்க துன்பத்தில் உழன்றுகொண்டிருந்த சீதைக்கு, அவ்வமயம் இடப்புருவமும் இடக்கண்ணும் துடித்தன. "இவை நமக்கு நன்மையுண்டாகப் போவதைக் குறிக்கும் குறிகளாய் இருத்தல்கூடும்," எனச் சீதை எண்ணினும், அதைத் தீர்மானமாகக் கொள்ள அவளால் இயலவில்லை. ஆதலின், அவற்றைத் தூய்மை நிறைந்த திரிசடை

யினிடம் சொல்லக் கருதினள். "தாயினும் அன்புடையவளே, என் இடப்புருவமும் கண்ணும் துடிக்கின்றன. இத்துடிப்பு எனக்கு நன்மை பயக்குமோ, அன்றித் தீமையையே தருமோ அறியேன்! எனக்கு நலமேற்படும்போது இடமும், தீமையுண்டாகும்போது வலமும் துடிப்பது வழக்கம். இப்போது இடந்துடிக்கின்றமையின், இதனல், எனக்கு என்ன நேரவிருக்கின்றதென்பதை நீ ஆராய்ந்து சொல்வாயாக," என்றாள்.

இதைச் செவி மடுத்ததும், திரிசடைக்கு மகிழ்வு மேலிட்டது. இவள் தன் இடப்புறம் துடிப்பது போன்றும், தனக்கே நன்மை வந்தணுகியதுபோன்றும் ஆனந்தமுற்றாள். "துன்பக் கடலில் மூழ்கிக் கரையேற வழியின்றி அலறிக்கொண்டிருக்கும் இக் கற்புடையாளுக்கு நற்காலம் வந்துவிட்டது! எனக்கு ஏற்பட்ட சகுனமும் கனவும் இதற்குச் சான்று பகர்கின்றன. யான் இவளுக்காகக் கொண்ட மனக்கவலைக்கும் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது. இனி யான் சிறிதும் வருந்தேன். துணையற்ற இத் தவ மங்கை விரைவில் வாழ்வையடைவாள். இஃதுண்மை! யானும் வாழ்ந்தேன்!" என நினைத்தவளாய், அவ்வுவகை முகத்தில் தோன்ற, சீதையிணிடம் சில பகரத் தொடங்கினாள்:

"பொறுமைக்குப் பூடணமன்ன பொற்கொடியே, இனி நீ சிறிதும் கவலை கொள்ளற்க. உன் துயரத்தைத் தொலைவில் துரத்திவிடு. உனக்கு இப்போது நேர்ந்திருக்கும் நிமித்தங்கள் உனக்கு மங்களத்தைத் தருவனவாகும். நீ உன்

நாயகர் ஸ்ரீராமபிரானை விரைவில் அடைந்து இன்புறுவாய். இஃதுண்மை! உன் நிறம் பசுமை பெற்று, உன் ஆவி நிலை பெறுமாறு, ஒரு பொன்னிற வண்டு வந்து தேன் போன்ற இன்னிசையை உன் செவியினிடம் இப்போதே ஊதிச் சென்றது. இதனால், உன் நாயகரால் ஏவப்பட்ட தூதுவன் ஒருவன் உன்னிடம் வந்து நல்வார்த்தைகளைத் தெரிவிப்பது நிச்சயம் என எண்ணுகிறேன். மயில் போலும் சாயலையுடைய மங்கையே, இதுமட்டு மன்று: யான் சில கனவுகளையும் கண்டுள்ளேன். இராவணன் தன் பத்துத் தலைகளிலும் எண்ணெய் தேய்த்துக்கொண்டு சிவந்த ஆடையை உடுத்திய வனாய்க் கழுதைகளும் பேய்களும் பூட்டப்பட்ட தேரின்மேலேறித் தென்திசை நோக்கிச்சென்றான். அவன் பிள்ளைகளும், சுற்றத்தினரும், மற்றவரும் அத்திசையையே நாடிச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வந்தார்களில்லை. ஓமத்தீ அவிந்தது. மணி விளக்குகள் ஒளிசெய்துகொண்டிருக்கும் அவனுடைய பழைய மாளிகைகள் பேரிடியினால் இடிந்து விழுந்தன. இரண்டு ஆண் சிங்கங்கள் பெரும் புலிக்கூட்டத்துடன் இங்கு வந்து பல பேரைக் கொன்று குவித்தன. இவணிருந்து ஓர் அழகிய மயில் அச்சிங்கங்களுடன் சென்றது.

"மென்மையான சொற்களையுடையவளே, இவ்விலங்கையில் சில உற்பாதங்களும் தோன்றுகின்றன: பெண் யானைகள் மதத்தைச் சொரிகின்றன; வீரர்கள் அணிந்த கற்பக மலர் மாலைகள் புலால் நாற்றம் வீசுகின்றன; பூரண கும்பங்கள்

உடைகின்றன; தீபத்தை இருள் சூழ்ந்து மறைக்கின்றது; தோரணங்கள் முறிகின்றன; மேகம் இரத்தமழை பெய்கின்றது; பெண்களின் மங்கல நாண்கள் தாமாகவே அற்று விழுகின்றன. இவைகள் யாவும் நல்லவர்க்குத் தீங்கிழைத்த இவ்வூருக்கும், இம்மக்கட்கும் உண்டாகப்போகும் அழிவை முன்னரே தெரிவிக்கும் அறிகுறிகளாய் இருக்கின்றன. ஆதலின், இனி நீ வருந்த அவசியமில்லை."

பிராட்டிக்கு இங்ஙனம் வேண்டிய தேறுதல்களை இயம்பி, திரிசடை அவளை ஆற்றுவித்தாள். அன்றியும் அனுமான் இலங்கைக்குப் போந்த பின்னர், ஆங்கு அவன் அப்போதைக்கப்போது இயற்றும் வெற்றித் திறன்களையும் திரிசடை சீதைக்குத் தெரிவித்துக்கொண்டு வந்தாள். இவற்றால் பிராட்டியின் மனத்திற்கு அமைதி ஏற்பட்டது மட்டுமேயன்றி, அனுமானுக்கு அவன் வாலில் தீயிடல் முதலிய சில ஆபத்துகள் நேர்ந்த காலங்களில், பிராட்டியின் தெய்வச் செயலால் அவற்றைப் போக்குதற்கும் வசதி ஏற்பட்டது.

சீதையின் துயரம் இத்துடன் நின்றிலது. இரு படைகளுக்கும் போர் மூண்டபின்னும் இராவணன் சீதையினிடம் வந்து பல வகையிலும் தொல்லை விளைக்கின்றான். அப்போதும் அவள் தன் உறுதியிலிருந்து சிறிதும் கலங்கினாளில்லை. எவ்வுபாயத்தினாலும் சீதை தனக்கு இணங்காததை நோக்கிய இராவணன், வஞ்சத்தினால் ஓரரக்கனைச் சனகனாக்கி, அவனை இறுகக் கட்டிச் சீதையினிடம் காட்டுமாறு கட்டளையிட்டான். மகோதரன் என்பான்

அங்ஙனமே செய்தான். அதை அரக்கர் மாயை என்றறியாத சீதை, கட்டுண்ட தன் தந்தையைக் கண்டவுடன் கண்களிலும் முகத்திலும் அறைந்து கொண்டு அழுதாள்; தன் தந்தையின் ஆண்மை, அறம், வேள்வி, ஞானம் முதலியவற்றைப் பன்னிப் பன்னிப் பரிதபித்தாள்; தரையில் வீழ்ந்து மூர்ச்சித்தாள். இளகிய நெஞ்சுடையவளும், பிறர் துன்பத்தைக் காணக் கண் கூசுபவளுமான திரிசடை, சீதையின் இத்தகைய நிலையை எங்ஙனம் பொறுப்பாள்? "இவ்வற்பர் இங்ஙனம் வீணாகவே இவளைத் துன்புறுத்துகின்றனரே!" என இவள் மனம் துடித்தது. இவள் சீதையைத் தூக்கி அவள் மயக்கத்தைத் தெளிவித்து, "அன்னாய், அஞ்சற்க! இக்கொடியார் செய்யும் ஒவ்வொன்றும் மாயையும் வஞ்சகமும் கலந்ததென, நீ மனத்தில் இருத்துதல் வேண்டும். இப்போது உன் முன்னிலையில் கொண்டு வரப்பட்டவர் உன் தந்தையாரல்லர்; மருத்தன் என்னும் ஓர் அரக்கனாவான். அவர்கள் வஞ்சகம் எத்தனை கொடுந்தொழிலையும் இயற்றும் என்பதை நீ மறத்தல் கூடாது," எனத் தேறுதல் கூறினாள். இவள் சொற்கள் உண்மையெனத் தோன்றினமையின், பிராட்டி, மனத்திடத்தைப் பெற்றாள். அன்றேல், அவ்வமயமும் சீதைக்குக் கெடுதி நேரினும் நேர்ந்திருக்கலாம்.

போர்க்களத்தில் மாயையில் வல்ல இந்திரசித்து, பிரமாத்திரத்தால் ஸ்ரீராமபிரான் தவிர மற்ற யாவரையும் கட்டுப்படுத்துகின்றான். இலக்குமணன் முதல் யாவரும் மூர்ச்சையடைந்து இறந்த

வர் போலக் கிடக்கின்றனர். இக்காட்சி, இராமரைத் தளருமாறு செய்கிறது. அவர் மனம் சோர்ந்து புலம்புகின்றார்; அத்துயரத்தினால் அவரும் மூர்ச்சையுற்று விழுகின்றார். இந்நிலையில் இராமர் சேனைவீரர் அனைவரும்முற்றும் இறந்தவர்போன்று போர்க்களத்தில் கிடக்கின்றனர். இதையறிந்த இராவணன், சீதையின் மனத்தைத் தன்னிடம் திருப்புதற்கு இதுதான் தக்க சமயமெனக் கருதி, அவளைக் கொணர்ந்து போர்க்களத்தைக் காட்டும்படி அரக்கிகளுக்குக் கட்டளையிட்டான். அத்தீயரும் அங்ஙனமே செய்தனர்.

இக்கோலத்தைக் கண்ட சீதை யாவரும் இறந்துவிட்டனரெனத் தீர்மானித்துக்கொண்டாள். அவளுக்கு ஒன்றுந் தோன்றிலது. விடத்தையுண்டவள் போன்று உணர்வும் உயிர்ப்பும் அடங்கினாள்; நெருப்பிலிட்ட தாமரை எனச் சாம்பினாள். அவள் துயரத்தைக் கண்டு தேவமங்கையரும் அறமடந்தையும் அழுதனர். அவள் துன்பத்தைப் பொறாது பாவமும் கலங்கிற்று என்னின், மற்றவர் வருத்தத்தைக் குறித்துக் கூறுதலும் வேண்டுமோ! சிறிது தெளிந்த குயிலன்ன பிராட்டி, ஒருவர் தவறாமல் யாவரும் சாய்ந்திருப்பதையும், தன் ஆருயிர் நாதர் மண்ணிற்கிடப்பதையும் கண்டதும், மனம் கொதித்தாள்; பதைத்தாள்; சோர்ந்தாள்; சுழன்றாள்; துள்ளினாள்; விழுந்தாள்; புரண்டாள்; வெதும்பினாள்; பெருமூச்சு விட்டாள்; சிரித்தாள்; “அயோத்திக்கரசரே, என்னாருயிர் நாதரே,” என்றாள். இத்தகைய துயர்நிலையில் அவள் பகர்ந்த

வார்த்தைகள் பலவாகும். தன் விதியை நோகின்றாள்; அறத்தை வெறுக்கின்றாள்; தன் நாயகரின் பெருமைகளைச் சொல்லிச் சொல்லிப் புலம்புகின்றாள். இறுதியில் எதனாலும் மனவாறுதல் உண்டாகாதசீதை, தன் கணவர் உடல்மேல் விழச் செல்லுகின்றாள்.

கருணையங்கடலாகிய திரிசடைக்குப் பிராட்டி படும் துன்பம் தாங்க இயலவில்லை. அவளைச் சூழ்ந்துகொண்டிருந்த அரக்கியரை விலக்கி, அவளை அன்புடன் பற்றி இருத்தி, மற்ற அரக்கியரின் செவியிற் படாவண்ணம் அவள் செவியிற் சில சொல்ல முற்பட்டாள்: "அறிவிற்சிறந்த அன்னையே, இந்தக் கொடுந்தொழில் பூண்ட அரக்கர், முதன்முதல் மாயமானை விடுத்ததும், பொய்ச் சனகரைக் கொணர்ந்ததும், யாவரையும் நாகபாசத்தினாற்பிணித்ததும் வஞ்சத்தொழில்கள் என நீ அறிந்திருந்தும், இதையும் மாயக்காரியமென உணராது, மாள நினைக்கின்றனையே! இஃது உன் அறிவுடைமைக்குத் தக்கதாகுமா? கண்ட கனவுகளும், உண்டான நிமித்தங்களும், உன் கற்பின் நலமும், உயர்ந்த ஸ்ரீ ராமபிரானது வீரத்தன்மையும் பழுதுபடலாமா? உலகிற்கே நாயகரான உன் தலைவர் உடலில் ஓரம்பேனும் எய்யப்பட்டுள்ளதா? ஊன்றிப்பார். இளையவர் முகம் பகலவன் போன்று ஒளிர்ந்துகொண்டிருத்தலைக் காணின், அவர் உயிர் நீங்கியவர் எனச் சொல்லுதற்கு இயலுமோ? அங்ஙனம் உன் நாயகர் இறந்திருப்பரேல், உடனே இவ்வுலகமும், உலகப்

பொருள்களும் அழிந்துவிடுமே! அவைகள் உருப் பெற்றிருத்தலின், உன் தலைவர் இறுதியை அடையவில்லை என்பதை நீ தெரிந்துகொள்வாயாக! உன் கற்பின் வன்மையினால் மாருதி இறவாத வரத்தை உன்னிடம் பெற்றுள்ளான் அல்லனோ? அவன் மரணமடைந்தால் உன் கற்பிற்கு இழிவுண் டாகாதா? அரக்கர் அழியவேண்டும் என்னும் ஊன் றிய எண்ணத்தைக் கொண்டுள்ள தேவர்களின் நினைவு பிழைபடுமோ? பெரிய கடலை ஒரு சிறிய குளம் தன்னுள் அடக்கிக்கொள்ள முடியாதது போன்று, அறச்செயலும் அறநினைவும் உடைய பெருமிதம் வாய்ந்த இவர்களைத் தூய்மையற்றவரால் அடக்க முடியாது என்பதை உறுதியாகக்கொள். அந் நியர் வலையில் சிக்காத மனத்திட்பம் வாய்ந்தவளே, உனக்கு வரவிருக்கும் பெருமிதங்களை நோக்கி மன அமைதியுறுவாயாக!'' எனத் திரிசடை தன் நற்பண்பெல்லாம் தோன்றுமாறு செப்பினாள்.

4. சீதை திரிசடையைப் புகழ்தல்

திரிசடையின் உண்மையும் அன்பும் நிறைந்த அறவுரைகளைச் செவி மடுத்த சீதை, சிறிது பொழுது சிந்தித்துப் பார்த்தனள். திரிசடை இயம் பிய ஒவ்வொரு சொல்லும் ஆணித்தரமுடையதாயும் சத்தியமானதாயும் காணப்பட்டது. "நம் கணவ ரும் இளையவரும் இறந்தவரல்லர்; அரக்கரின் மாய்யினால் மயங்கிக் கிடக்கின்றனர்,'' என்று அவள் அறிந்துகொண்டாள். ஆதலின், பிராட்டி, திரிசடையை நோக்கி, "என் நலத்தையே நாடி நிற் கும் அன்னாய், நீ இதுகாறும் கூறிய ஒன்றும்

பொய்த்திலது ; உண்மையுடையதாகவே நிலைபெற்றது. ஆதலின், யான் உன்னையே தெய்வமாகக் கொண்டு இத்தனைநாளும் உயிர் வாழ்ந்திருந்தேன்; அங்ஙனமே, இன்று இரவு முற்றும் இத்துயரத்தைப் பொறுத்திருக்கின்றேன். அருள் வாய்ந்த அம்மணி, அந்நியர் நலத்தையே நாடி நிற்கும் அணங்கனையாய், உனக்குப் பெரிதும் யான் கடமைப்பட்டுள்ளேன். நீ எனக்குச் செய்த உதவிகள் ஒன்ரு, இரண்டா? என்னையும் என் குடும்பத்தினரையும் ஒருங்கே காத்த உத்தமியே, சேற்றிற்பூத்த செந்தாமரையே போன்று இக்கொடிய அரக்கர் குலத்தில் உதித்த செல்வியே, உன்னை அரக்கியெனக் கூற அற்பரும் அஞ்சுவர் என்பது திண்ணம். தெய்வமாதருக்கும் இத்தூய பண்புகள் அமைதல் அருமையே! நீ இன்றேல், என் ஆவி பயனின்றிக் கழிந்து பாவத்திற்குள்ளாயிருக்கும் என்பதற்கு ஐயம் என்னை? என் உடலை மட்டுமா நீ காத்தனை? என் உயிரையுமன்ரே ஆதரித்தனை? எங்ஙனமோ என்னை உன் வசப்படுத்திவிட்டனையே! என்னை மாத்திரமா? இந்தப் பொல்லா அரக்கியர்களுமல்லவா உன்பாற்பட்டு உன் சொல்லின்படி நடக்கின்ருர்கள்! தீயவரையும் தன்பாலாக்கி அடக்கி ஆளுதல் அன்ரே தூயபண்பு எனச் சொல்லப்படுவது? இச்செய்கை சாமானியரால் முடியுமோ? யாவரிடமும் அருட்டன்மை வாய்ந்தவர்க்கல்லவா இது கை கூடுவது? அரக்கர் குலத்தில் தோன்றியும், அவரின் வேறுபட்டு அணங்கெனமிளிரும் நீ, இம்மை மறுமையாகிய இரண்டின்

இன்பங்களையும் பெற்று வாழ்வாயாக!" என்று புகழ்ந்து வாழ்த்தி மனந்தெளிந்திருந்தாள்.

ஈண்டுப் பிராட்டி திரிசடை இவர்கள் கண்ட கனவுகளையும், அவண் தோன்றிய உற்பாதங்களையும், அரக்கர் சீதைக்கு மாயா சனகனைக் காட்டியும், இராம இலக்குமணர் மூர்ச்சித்துக் கிடந்த களத்தைக் காண்பித்தும் மயக்கிய செய்திகளையும் விளக்கமாகக் கூறியதற்குக் காரணம் யாது? இவற்றை இவ்வளவேனும் விரித்து விளம்பவில்லையேல், திரிசடையின் பெருமிதங்களை அறிவித்தற்கே எழுந்த இக்கட்டுரை, கருதிய பயனைத் தாராதெனக் கொள்க.

5. திரிசடையின் சீர்மைகள்

இனி, இத்திரிசடையின் சீர்மைகளைக் காண்போம்: பிராட்டி எத்தகையவள்? வீரரும் ஒளிக்கும் வன்மையும், முனிவரும் நடுங்கும் கொடுமையும், தேவர்களும் அஞ்சும் ஆண்மையும் வாய்ந்த இராவணனையே எதிர்த்து நிற்கும் மனத்திட்பம் வாய்ந்தவள்; பல கலைகளிலும் வல்லுநனை அனுமானது தவறான கருத்தையும் தன் இன்சொற்களால் மாற்றிய நுட்பமதி பெற்றவள்; வீரரும், அழகரும், நற்பண்புகள் அமைந்தவருமான இராமபிரானைத் தன் அழகாலும் குணத்தாலும் வசப்படுத்தும் வன்மையுடையவள்; நெருப்பும் சுட்டெரிக்காத கற்புரம் தோய்ந்தவள். இத்தகைய பெருமாட்டியே, அப்போதைக்கப்போது திரிசடையினிடம் யோசனை கேட்டு நிற்கின்றாளல்லவா? அவளுக்குத் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் துன்பங்கள்

நேருங்காலத்தெல்லாம், அந்தந்தக் காலத்திற் கேற்பத் திரிசடை ஆராய்ந்து செப்பும் நுட்பமான அறிவுரைகளல்லவா அவள் உயிரைக் காக்கின் றன! இவை யாவும் எதைத் தெரிவிக்கின்றன? திரிசடையின் அறிவு நுட்பத்தையல்லவா?

திரிசடை சீதைக்கு நலமேற்படக்கூடிய சில கனவுகளையும், உற்பாதங்களையும், சகுனங்களையும் காண்கின்றாள். அவை, பின் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளை முன்னர்த் தெரிவிக்கும் அறிகுறிக ளாய் இருந்தன. செயல்முறையில் அவற்றின் பயன் சிறிதும் பொய்த்திலது. இங்ஙனம் நன்மையை முற்கூட்டியே தெரிவிக்கும் நிகழ்ச்சிகளைக் காணு தற்கும், அவை தவறாது நடைபெறும் என்னும் உறுதியினால் கவலைக் கடலில் ஆழ்ந்திருக்கும் பிற ரைக் கரையேற்றுதற்கும், யாவருக்கும் இரங்கும் தூயமனமும், அவர்கட்கு நன்மையே புரியும் உயரிய கருத்துகளும், பிறர் துன்பத்தைக் களையும் தூய சொற்களும் பெறுதற்கும், இவளைப்போன்ற சான்றோர்க்கல்லாமல் மற்றவருக்கு இயலாதென் பது திண்ணம். இச்சிறப்புகள் யாவும் திரிசடையி னிடம் அமைந்திருந்தமையின், திரிசடையின் சான் றாண்மை வெளிப்படுகின்றதன்றோ?

பிராட்டி தனக்குண்டான நன்னிமித்தங்களைத் திரிசடையினிடம் தெரிவித்த போது, "இதனால் சீதைக்கு மங்கலம் ஏற்படுதல் உண்மை" எனக் கரு திய எண்ணத்தினால், இவள் மனம் மகிழ்வால் நிரம் பியது. தனக்கே மங்களம் உண்டானதாகவும், தானே வாழ்வு பெற்றதாகவும் உவகை பூத்து நின்

ருள். இவள் கண்ணும் மனமும் களிப்பில் ஆழ்ந் தன. இதைக்காட்டிலும் தான் அடையும் பேறு வேறொன்றில்லை என நினைத்தாள். அன்றியும், இக்குறிப்புகளினுலெல்லாம் தீமையை அடையப் போகின்றவர் தன் சுற்றத்தினரே என அறியினும், அவர்களைப்பற்றி இவள் மனம் இரக்கங்கொண் டிலது. ஏன்? தீயவர் மாண்டொழிதலும், நல்லவர் வாழ்தலுமே அறம் எனக் கருதினுள். அந்நியளா கிய பிராட்டியினிடம் இவள் காட்டிய கருணையில் ஒரு சிறிதும் தன் உறவினரிடம் காட்டினுளில்லை. இவள் இரக்கத்தையே உருவெனக் கொண்டிருப் பினும், இவள் செப்பமுடைய நெஞ்சம் தீயவர்பால் இரங்கிற்றிலது. இவற்ருல் திரிசடையின் நடுவுநிலை யோடுங் கூடிய தெய்வத்தன்மை புலப்படுகின்ற தன்ருே?

இங்ஙனம் நுட்ப அறிவும், சான்ருண்மையும், நடுவுநிலையோடுங் கூடிய தெய்வத் தன்மையும் வாய்ந்த ஓர் உயரிய வனிதையை அரக்கர் குலத் தைச் சார்ந்த மங்கை எனக் கூறல் யாங்ஙனம்?

இனி, கம்பர், அனுமான், பிராட்டி முதலியவர் இத்திரிசடையைப் பற்றித் தெரிவிக்கும் சில கருத்துகளைக் கவனிப்போம்:

கம்பர், திரிசடை இனிய சொற்களையும், அன் பும் அருளும் நிறைந்த உள்ளத்தையும் உடையவள் என்கின்ருர்.

இனிய சொற்கள் என்பன யாவை? சொற்கள் மட்டும் இனியனவாயிருந்து, அவற்ருல் நிகழும்

செயல்கள் கொடியனவாயிருப்பின், அவை இனிய சொற்கள் எனச் செப்புதற்கு இடம் பெறுமா? அன்றியும், நம்மாட்டு அன்பற்றவர்களும், உண்மைப் பொருளுணராதவர்களும் சொல்வன இன்சொற்கள் என்னும் பெயரைத் தாங்குமா? என்றும் இல்லை. பின்னை என்னையோவெனின், எவை அன்போடு கலந்தனவாயும், வஞ்சனையற்றனவாயும், மெய்ப்பொருளுணர்ந்தார் வாயினின்று பிறந்தனவாயும் இருக்கின்றனவோ, அவையே இனிய சொற்களாகும். ஈண்டு இனிய சொல்லுக்குச் செந்நாப் போதார் கூறும்,

" இன்சொலால் ஈர மளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்."

என்னும் இலக்கணத்தைக் காண்க.

தீய அரக்கியர் யாவரும் துயில்கின்றனர். துன்பத்தால் சூழப்பட்ட சீதைக்கோ, கண்ணுறக்கம் வந்திலது. சீதையினிடம் வஞ்சனையற்ற அன்பு கொண்டு, அவள் நிலைக்காக வருந்தி, அப்போதைக்கப்போது மெய்ப்பொருள்களை அவளுக்கெடுத்தோதி அவளைத் தேற்றுபவளாகிய திரிசடையினிடமும் உறக்கம் இடம் பெற்றிலது. அப்போது தான் சீதை, தனக்குண்டாயிருக்கும் நன்னிமித்தங்களைத் திரிசடையினிடம் விளக்கமாகச் சொல்லுதற்குச் சமயம் வாய்த்தது. இங்ஙனம் இனிய சொற்களுக்கு இலக்கணமாயமைந்த தன்மைகள் யாவும் பொருந்தப் பெற்ற இந்த இடத்தில் கம்பர், திரிசடைக்கு,

" திரிசடை என்னும் இன்சொலிற் றிருந்தினள் "
—சுந்தர காண்டம், காட்சிப்படலம், 30.

என்னும் ஒரு விருதைக் கொடுத்திருப்பது எத்துணைப் பொருத்தமுடையது!

6. திரிசடையின் அன்பும் அருளும்

அன்பு என்பது என்ன? அன்பு, ஒருவர் கற்பிப்பதனுல் உண்டாகும் ஒரு குணமன்று. இஃது, உயிர்களுக்குத் தானுகவே உதிக்கும் இயற்கை வாய்ந்தது. இதைப் பகுத்தறிவு வாய்ந்த உயிர்களிடம் மட்டுமேயன்றி, விலங்குகள் பறவைகள் முதலியவற்றினிடமும் காணலாம். அவைகளும் தம் குட்டிகளையும் பார்ப்புகளையும் பாலூட்டி, உணவூட்டி அன்புடன் பேணுகின்றன அல்லவா? அங்ஙனமே மக்களுக்கும் தம் உறவினரிடத்தும், நட்பினரிடத்தும் ஒரு விதப் பற்று ஏற்படுகின்றது. அதைத்தான் அன்பு எனக் கூறுகின்ருேம். இங்குச் சிலருக்கு ஓர் ஐயம் தோன்றலாம்: அது, " அன்பில் மாக்களுக்கும் மக்களுக்கும் வேறுபாடு இன்ருே?" என்பது. இங்குத்தான் சிறிது ஆராய வேண்டும்: பகுத்தறிவு வாய்ந்த மக்களின் அன்பு, தம்மைச் சார்ந்தவர்களோடு மட்டும் நில்லாமல், இன்னும் சிறிது விரிந்து செல்ல வேண்டும். அன்றேல், மாக்களுக்கும் மக்களுக்கும் வேற்றுமை தோன்ருது. இதை விளக்கிக் காட்டுதற்பொருட்டே செந்நாப்போதார், 'அன்புடையார் தம் எலும்பையும் பிறருக்கு உரிமைப் படுத்துவர்,' என்றும், அந்நியரையும் நட்பாக்கிக்

கொள்ளுவரென்றும் கூறுகின்றார். எங்ஙனம் இயற்கையாக அமைந்த அறிவைக் கல்வி கேள்விகளினால் பெருக்கிக்கொள்ளுகின்றோமோ, அங்ஙனமே நமக்கு இயற்கையாக உள்ள அளவு பட்ட அன்பையும் தக்க சமயம் நேரும்பொழுதெல் லாம் பிறரிடமும் செலுத்திச் செலுத்தி அதை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். அதுதான் மனி தத் தன்மைக்கு ஏற்றதாகும்.

திரிசடையின் அன்பு எதுமட்டும் செல்லு கிறது? திரிசடைக்குச் சீதை, தன் உறவினளா? தன் குலத்தினளா? தன் நாட்டினளா? ஒன்றிலும் சேர்ந்தவளல்லள். இவர் இருவரும் முன் பின் தெரிந்தவருமல்லர். திரிசடையோ, அரக்கர் குலத் தவள்; இலங்கை வாசி. சீதையோ, மானிட மங்கை; அயோத்தி வாசி. ஆயினும், இங்ஙனம் ஒன்றிலும் தொடர்பற்ற சீதையினிடம் திரிசடைக்கு அன்பு மிகுதியும் பெருகிச் செல்லுகிறது. இஃது எதைப் பற் றுக்கோடாகக்கொண்டு படர்கிறது? துணையற்றவ ளாய் நின்று பெருந்துன்பங்களில் உழன்றுகொண் டிருக்கும் அவள் அனுதாப நிலையையேயாகும்! தொடர்பை நோக்காது பிறர் நிலைகளையே நோக் கிச் செலுத்தும் இவ்வன்பு, எல்லாரிடமும் அமை யுமா? அமையாது. எவர் வஞ்சனை நீங்கிய மனத் தையும் எல்லாவுயிர்களிடத்தும் இரக்கத்தையும், மெய்ப்பொருளுணர்ச்சியையும் பெற்றிருக்கின்ற னரோ, அவரிடமே இது தலை காட்டாநிற் கும். இத்தகைய பண்படைந்த அன்பு, திரிசடையி னிடம் உண்டு என்பதைக் கம்பர் தக்க சான்று

ஒன்றால் காட்டுகின்றார். முன்னர்ச் செப்பிய வாறு தனக்குச் சில நிமித்தங்கள் தோன்றிய போது அவற்றைப் பகர்ந்து ஆறுதலடைதற்குச் சீதை ஓர் உற்ற துணையை நாடுகின்றாள். அத் துணைவிக்குக் கம்பருடைய வாய், 'அன்பினாள் தாயினுமினியவள்' என்னும் இரண்டு அடைமொழி களை வழங்குகிறது. கம்பர் இவண் பொருத்திய இவ் விரு சொற்களுக்கும் பல கருத்துகளைக்கூறலாமாயி னும் விரிவஞ்சி இங்கு ஒரு கருத்தை மட்டும் வெளிப் படுத்துவோம்: 'அன்பினாள்' என்பது திரிசடை பொதுவாக ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்களிடத் தும் அன்புடையவளாயிருந்தாள் என்றும், 'தாயி னும் இனியவள்' என்பது, சீதையினிடம் தாயைக் காட்டிலும் இனிமையான அன்பு கொள்ளும் நல்லவ ளாய் இருந்தாள் என்றும் பொருள்படும். இதனால், திரிசடை எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவ ளென்றும், இன்னலில் துவக்குண்டு நிற்கும் உயிர்க ளிடத்துத் தாயைக்காட்டிலும் இனிய அன்பைச் செலுத்துகின்றவள் என்றும் அறிகின்றோமல் லவா? இன்னும், இங்குத் திரிசடையைத் 'தாயி னும் இனியவள்' என்கின்றார். ஏன்? ஒரு தாய் தன் மக்களிடம் மட்டுமே அல்லவா அன்பைச் செலுத்துவள்? திரிசடையின் அன்பு அந்த அள வோடு நிற்கவில்லையே! தனக்குச் சிறிதும் தொடர் பற்றவர் மாட்டுமல்லவா சென்றுள்ளது? ஆதலின், திரிசடையின் அன்பின் திறம் அளவிட்டுச் சொல் லுந் தன்மையுடையதோ?

"ஆயிடைத் திரிசடை என்னும் அன்பினாள்
தாயினும் இனியவள் தன்னை நோக்கினாள்

'தூயைநீ கேட்டிஎன் றுணைவி யாம்,'என
மேயதோர் கட்டுரை விளம்பல் மேயினுள்.''

—காட்சிப் படலம், 31.

என்பது கம்பர் வாக்கு.

திரிசடை இத்தகைய பெருந்தன்மைகளைப் பெற்றிருந்ததனுற்றான், சீதை அவளை 'என் துணைவி' என்கிருள். ஒருவர் யாரைத் துணைவி எனக் கூறுவது வழக்கு? இன்ப துன்பங்களில் தம்மை விட்டுப் பிரியாது, இவ்விரண்டிலும் பங் கெடுத்துக்கொண்டு உடனுறைபவரையே அல் லவா? அதிலும், ஒருவருக்குத் துணையாக அமை கின்ற மற்ருெருவர், அவரைக்காட்டிலும் சிறிது மனத்திண்மையும், கலங்காமையும், நிகழும் காரி யங்களின் தன்மைகளை அறியும் ஆற்றலும் பெற் றிருத்தல் வேண்டும். அன்றேல், காலப்போக்கில் அறிவு கலங்கியிருக்கும் பிறர் மனத்தைத் தேற்றி அவர்களுக்கு நல்லுரைகளைப் பகர இயலாதன்ருே? இத்தன்மையில், இலங்கையில் நிகழ்ந்த பல இன் னல்களினுல் தன் அறிவும் ஆற்றலும் மழுங்கி ஆதரவற்ற நிலையிலிருந்த தனக்குப் பலவகையிலும் ஆறுதலளித்து ஊக்கிய திரிசடையைச் சீதை துணைவியெனச் செப்புதற்குத் தடை யாது? இத னுல் அவ்வமயம் திரிசடை, எல்லாம் வல்ல சீதைக் கும் உயர்நிலையில் நின்ருளல்லவா?

எதை அருள் எனக் கூறுகின்ருேம்? சிலருக்கு எவ்வுயிரினிடத்தும் கருணை உண்டாகிறது; உயிர் கள் படும் துன்பத்தைக் காணுங்கால், ஓரறிவுயிர்

ஈரறிவுயிர் என்னும் வேறுபாடின்றி, அவைகளிடம் மிக்க இரக்கம் ஏற்படுகிறது. இதைத்தான் அருள் எனச் செப்புவர். ஓரறிவுயிராகிய முல்லைக்கொடிக்குத் தன் தேரையளித்து இன்புற்ற பாரியே இதற்குச் சான்றாவான். இது தன்முயற்சியினாலும், பிறர் தூண்டுதலினாலும் உதித்தெழுவதுமன்று; அன்பைப்போன்று பிறர் வளர்ப்பை எதிர் பார்ப்பதுமன்று; ஒருவர் பிறக்கும்போதே உடன்றோன்றும் இக்குணம், அவர்தம் உடல் போன்றே நாளுக்கு நாள் வளர்ந்து நற்பயனை அளிக்கின்றது. இரக்கமுடையார் தம்முயிர் நீங்கும் துன்பம் வரினும், பிறருக்கு நலம் புரிதலிற் பின் வாங்கார். உயிருக்குத் துணையாக நிற்பது இவ்வருட்குணத்தைக்காட்டிலும் வேறொன்றுமிலது. இரக்கமுடையவர்க்குத் தீவினைகளும், அத்தீவினைகளினால் அனுபவிக்கும் துன்பமும், நரகமும் உண்டாதல் இல்லை. இவ்வருட்குணம் தம்மைச் சேர்ந்தவர் தம்மைச் சேராதவர் என்னும் தன்மையை நோக்குதல் இல்லை. இம்முறையில் இவர்கள் யாவருக்கும் உதவி புரிந்து இவ்வுலக இன்பத்தையும் மேலுலக இன்பத்தையும் ஒருங்கே பெறுவார்கள். இது நிற்க.

திரிசடைக்கு இயற்கையாக உண்டான அருட்டிறம், அரக்கர் குலக் குணத்தையும் செயலையும் எதிர்த்து நின்றது. இவள் தன் குலத்திற்கு மாறுபட்ட நிலையில் நின்றாள்; அவ்விலங்கை முற்றும் துருவி நோக்கினும் இவளைப் போன்ற ஒருவரைக் காணுதற்கியலா நிலையில் வாழ்ந்தாள். அறிஞர் எதை வாழ்வெனக் கூறுவர்? ஒரு மனிதன் உண்டு

உடுத்துத் துயில்வதையா? மனிதர் வாழ வேண்டிய முறையில் வாழ்வதைத்தானே வாழ்வென்பர்? அம்முறை எதைக் குறிக்கும்? பிறர் துன்பந் துடைத்து அவர்க்கு இன்பமூட்டும் செயல்களைச் செய்வதையேயன்றோ? இத்தகையவரைத் தானே குறளாசிரியர், தெய்வத்துள் ஒருவராக வைத் தெண்ணப்பட வேண்டும் என்கிறார்!

இவ்வருளை அணியாகப் பூண்டு வாழ்ந்த திரிசடையிடம் பெண்மைக்குரிய குணங்கள் யாவும் அமைந்திருந்தன. அவ்விலங்கையில் இவளைத் தவிர வேறொரு பெண் இல்லை. மற்ற யாவரும் பிறரை வருத்தித் துன்புறுத்தும் பேய்களாக அல்லவா வாழ்ந்தார்கள்? பெண்மைக் குணங்களை அல்லாமல் பெண் உருவத்தைப் பெண் எனக் கூறுதலைப் பெரியார் ஒப்புக்கொள்வரா? இப் பெண்மைக் குணங்களில் சிறந்ததாகிய அருட் குணம் இவளிடம் நன்கு இடம் பெற்றிருந்தது. இதனால், இவள் எல்லாவுயிர்களிடமும் கருணை பூண் டொழுகினாள். அக்கருணை வெள்ளம் முன்னர்க் கூறியவாறு, அரக்கரால் காட்டப்பட்ட மாயா சனகனையும், இறந்தவர் போன்று கிடந்த தன் கணவர் முதலியவரையும் கண்டு துன்பத்தால் குடல் பதைத்து, செய்யும் வகையறியாது, தன் னுயிரை மாய்த்துக்கொள்ளும் எண்ணத்துடன் நின்ற சீதையினிடம் பெரிதும் பாய்ந்தது. அவ் வெண்ணம் சீதையாகிய பைங்கூழை வாடா வண் ணம் காத்தது. அதனால் சீதையாகிய பைங்கூழ் மட்டுமா அழிவின்றி நின்றது? அவளால் பயன்

துய்க்கும் பலருமல்லவா உயிர்பெற்று ஒளிர்ந்தனர்? அக்கருணை வெள்ளம், கற்பின் பெருமையையும் அறத்தின் மாண்பினையும் ஓங்கி வளருமாறுசெய்து, மறத்தின் தீமையை அழியச்செய்தது எனச் செப்புவது மிகையாகுமா?

"உந்தையென் றுனக்கெதி ருருவ மாற்றியே
வந்தவன் மருத்தனென் றுளனோர் மாயையான்
அந்தமில் கொடுந்தொழில் அரக்க னுமெனாச்
சிந்தையின் உணர்த்தினள் அமுதின் செம்மையாள்."

—உயுத்த காண்டம், மாயா சனகப் படலம், 94.

இத்துணை அருட்செம்மை திரிசடையினிடம் இருந்ததனுற்றான், கம்பர் இவளை இச்செய்யுளில் 'அமுதின் செம்மையாள்' எனவும், இன்னொரு கவியில் 'தேடியதவமே என்ன திரிசடை மறுக்கம் தீர்ப்பாள்' எனவும் செப்புகின்றார்.

இச்சொற்றொடர்களால் திரிசடை உடலை அழியாமல் காக்கும் அமுதத்தைக்காட்டிலும் செம்மையான நலமளிப்பவள் என்பதும், பன்னாட்கள் துன்பங்களைத் தாங்கிச் சலியாது நின்று செய்த தவம் போன்று, பிறருடைய மனக் கலக்கத்தை மாற்றுபவள் என்பதும் புலப்படுகின்றன அல்லவா? இத்தகைய இவளை அரக்கர் குலத்தில் தோன்றிய வனிதை என எங்ஙனம் வழங்குவது?

இன்னும், ஸ்ரீ ராமபிரான் வெற்றிக்குப் பின்பு இம்மங்களச் செய்தியைப் பிராட்டிக்குத் தெரிவிக்கச்சென்ற அனுமான், முன்பு சீதையை வருத்திய

அரக்கிகளை இப்போது தான் வருத்தவேண்டு மெனக் கருதுகின்றான்; திரிசடையும் அக்குழுவில் சேர்ந்தவளேயாயினும், இவள் நற்பண்பு நோக்கி, அவர்களிலிருந்து இவளைப் பிரித்துவிடுகின்றான். இவளை அரக்கியென நினைக்க அவன் மனம் இசைந்திலது. இது மட்டுமா? அறிவும் ஆண்மையும் வாய்ந்த அனுமான், இவளை எந்நிலையில் வைக்கின்றான் என்பதை நோக்குதல் வேண்டும். அவன், 'என் தாய்' என்றும், 'அன்பும் அருளும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் முகத்தையும் மிக்க மாண்பையும் பெற்றவள்' என்றும் திரிசடையைத் தன் புலமை நிறைந்த சொற்களால் அலங்கரிக்கின்றான். இங்ஙனம் சகலாகம பண்டிதன் எனச் சொல்லப்படும் அனுமானே இவளை இத்துணை உயர்நிலையில் வைத்துக் கொண்டாடுவானாயின், இவள் அரக்கர் குலத்தைச் சாராத ஒரு சீரிய குலப்பெண் என்பதற்கு வேறு சான்று வேண்டுமா?

> "..............திரிசடை யாளெம்மோய்
> மனையி னிற்சுடர் மாமுக மாட்சியாள்
> தனையொ ழித்துஇவ் வரக்கியர் தங்களை
> வினையி னிற்சுட வேண்டுவென் யானென்றான்."

— உயுத்த காண்டம், மீட்சிப்படலம், 31.

7. திரிசடைக்குச் சீதை தந்த பட்டங்கள்

பிராட்டி, திரிசடைக்கு 'அன்னை, தெய்வம், அணங்கு' என்னும் மூன்று உயரிய பெயர்களைச் சூட்டுகின்றாள். உலகில் பெறும் பட்டங்களுள் இவற்றைக்காட்டிலும் உயர்ந்தன யாவுள?

பெறுபவர் தகுதியற்றவராயிருப்பினும், பெரியவர், எப்போதும் தம் தகுதிக்கேற்பப் பெருமையுடையதையே ஒருவருக்கு ஈவது வழக்கமல்லவா? அங்ஙனமே சீதையும் தன் பெருமைக்கு ஏற்ப, 'நாம் இவளுக்கு உயரிய பட்டங்களையே தருதல் வேண்டும்; அப்போதுதான் நமக்கு நன்மதிப்பு ஏற்படும்,' என்னும் கருத்தினால், இவற்றைத் திரிசடைக்கு ஈந்தனளா என்னும் ஓர் ஐயப்பாடு தோன்றலாம்.

திரிசடை சீதைக்குச் செய்த உதவிகளைச் சிறிது நோக்கினும், அவற்றின் மேன்மை நன்கு விளங்காநிற்கும். திரிசடை, சீதையினிடம் முன்பு ஓர் உதவியையும் பெற்றவளல்லள்; பின்பு ஓர் உதவிக்கு எதிர்பார்த்தவளுமல்லள். இந்நிலையில் இவள் சீதைக்குச் செய்த உதவிகளோ, அவள் துன்பத்தால் நெருக்குண்டு, 'பிறர் உதவியைப் பெற்றாலன்றி வாழ முடியாது,' என நினைக்கும் தக்க காலத்தில் பயன்பட்டன. அங்ஙனமாயின், இவை உலகையும், கடலையும்காட்டிலும் பெரியன அல்லவா? இவ்வுதவிக்கு விண்ணுலகமும் மண்ணுலகமும் கொடுப்பினும் ஈடாகுமா? இத்தகையவரைச் சான்றோர் தம் எழுபிறப்பிலும் மறப்பரோ! ஆகவே, இச்சான்றோர் குழுவில் சேர்ந்த சீதையும், இவள் தனக்குச் செய்த உதவிகளை மறவாதவளாய், சில நற்பட்டங்களை இவளுக்குச் சூட்டுகின்றாள். ஆயினும், அப்பட்டங்கள், திரிசடை செய்த உதவிகளைக்காட்டிலும் உயர்ந்தன என்றோ, அவற்றிற்கு ஒப்புடையன என்றோ

கொள்ளுதல் கூடாது. 'அங்ஙனமாயின், எல்லாம் அறிந்தவளும், கற்புத்திலகமுமாகிய சீதை, ஏன் திரிசடைக்கு இவற்றினும் பெரிய விருதுகளைத் தந்திலள் ?' என்னும் ஒரு வினு பிறக்கலாம். சீதை திரிசடையின் பேருதவிகளின் பெருமைகளை உணராதவளுமல்லள்; 'இவற்றிற்கு மேலான பட்டங்களைக் கொடுத்தல் கூடாது,' என்னும் எண்ணமுடையவளுமல்லள். ஆயினும், சீதை துருவித் துருவிப்பார்த்தாள். இவற்றிற்குமேல் உயர்ந்தது ஒன்றும் அவள் மனத்திற்குப் புலப்படவில்லை. இருந்தால்தானே அத்தெய்வமங்கை மனத்திற்கு எட்டும்? ஆகவே, தன் அறிவிற்கு எவை அருமையும், தூய்மையும், பெருமையும் வாய்ந்தன எனத் தோன்றினவோ, அவற்றையே திரிசடைக்கு அளித்தாள். சாமானிய மக்கள், 'மலையத்தனை நன்மை செய்த கடவுளுக்குக் கடுகளவு கற்பூரம் ஏற்றுகின்றோம்,' எனச்சொல்லும் பழமொழியைத் தான் இங்குக் கொள்ளல் வேண்டும்.

இனிச் சீதை திரிசடைக்கு அளித்த 'அன்னை, தெய்வம், அணங்கு' என்னும் பட்டங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்:

அன்னை: இவ்வுலகில் உயர்ந்த பொருள் எது? யாரால் மக்கள் தோன்றுகின்றார்கள்? தோன்றிய மக்கள் எவரால் உருக்கொண்டெழுகின்றார்கள்? மக்கள் மழலையை வழங்குதற்கு உதவி புரிகின்றவர் யார்? எவரால் அவர்கள் கல்வியறிவைப் பெறுகின்றார்கள்? எவர் முயற்சியினல் மக்கள் சான்றோராகவும் வீரர்களாகவும் விளங்குகின்றார்

கள்? யார் நலத்தினுல் மக்களின் புகழுடம்பு நிலை நிற்கின்றது? யாருடைய அறிவுரைகளால் அவர்கள் வீட்டுலகத்திலும் இடம்பெறுகின்ருர்கள்? இத்தனை வினக்களுக்கும் விடையாய் நிற்பவர் ஒருவரே யாவர். அவரை இன்னுரென அறிந்துகொள்வதற்குமுன் இன்னென்றைக் குறித்து நோக்குதல் வேண்டும்:

நிலவுலகில் ஒப்பற்ற பொருளாய் நிற்பது ஒன்றுண்டு. அதைத்தான் அன்பு எனப் பகர்கின்ருேம். இதைப்பற்றி முன்னமும் சிற்சில கூறியுள்ளோம். இது கண்ணினுல் பார்த்தற்கும் கரத்தினுல் தொடுதற்கும் இடந்தந்து நிற்கும் பொருளன்று; உணர்ச்சியினுலும் செயலினுலும் அறியக்கூடிய ஒரு பண்பாகும். இத்தகைய அன்பினுலேயே உலகம் கட்டுப்பட்டுள்ளது. உயிர்களிடையே அன்பு தோன்றவில்லையேல், உலகம் ஓரிமையும் நிலைத்திராது. அன்பில்லாத உடம்பு, உயிர் நின்ற உடம்பாகாது. என்பு தசை தோலினுல் போர்த்தப்பட்ட வெற்றுடம்பேயாகும். இஃது ஓரறிவுயிர் முதல், ஐயறிவோடும் பகுத்தறிவு வாய்ந்த மக்கள் வரையும அமைந்திருத்தலைக் காணலாம். உலகிற்கே உயிர்நிலை அன்பு எனல் மிகையாகாது. இஃதொரு தெய்வப் பண்பு. இதைப் பண்பு எனக் கூறின், பண்பு தனித்து நிற்குமா? பண்பு பண்பியோடு சேர்ந்திருத்தல்தானே இயற்கை? இம்முறையில் ‘இத்தெய்வப் பண்பு எப்பண்பியைத் தனக்குப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ளது? இஃது எதனிடத்தில் இயல்பாக அமைந்துள்ளது? எங்குச் சுடர்

விட்டு ஒளிர்கிறது?' என்பதைக் காணப்புகின், மேற் கூறியவாறு, உலகத்தை நிலைபெறச் செய்து மக்களை மாண்புறுத்தும் அன்னையினிடமே என்பதை மறுப்பவருமுண்டோ? ஆகவே, இப்போது முன்னர் எழுந்த வினாக்களுக்கும் விடையாய் நிற்பவர் அன்னையரே என்றும், அவர் அன்பையே உருவெனக் கொண்டவர் என்றும், அவராலேயே உலகம் நடை பெறுகின்றதென்றும், எங்ஙனம் மலரையும் மணத்தையும், இரத்தினத்தையும் ஒளியையும், ஆதித்தனையும் கதிர்களையும் பிரிக்க முடியாதோ, அங்ஙனமே அன்னையரையும் அன்பையும் பிரிக்க முடியாதென்றும், அவரின்றேல் உயிர்களின்றென்றும், உயிர்கள் இன்றேல் உலகம் இன்றென்றும் தெரிந்துகொண்டோம். இங்ஙனம் உலகிற்கே உறுதுணையாய் நிற்கும் பொருளாகிய அன்னை என்னும் பட்டத்தைப் பிராட்டி நம் திரிசடைக்குச் சூட்டி உவந்தனள்.

திரிசடை தனக்குச் செய்த உதவிக்கு, இதையளிப்பதுடன் நிற்கச் சீதைக்கு மனமிசைந்திலது. அதனால், இவளைத் 'தெய்வம்' என்று வழங்குகிறாள். தத்தம் சொந்த மக்களிடம் அன்பு செலுத்தி உலகை உயர்நிலை அடையச் செய்பவர் அன்னையராவர். தெய்வமோ, தனக்கெனத் தனி மக்கள் இலரேனும், உலக உயிர்கள் யாவற்றையும் தன் மக்கள் எனவே எண்ணி நலம் புரியும் தன்மையுடையது. ஆதலால், சீதை திரிசடையைத் தெய்வம் என்கிறாள். மக்கள், தங்கள் மனத்திற்கும் அறிவிற்கும் எட்டாததும், தங்களால் செய்ய முடியாதது

மாகிய செயல் முடிவதற்கு எவர் உதவியை நாடு கின்றார்கள்? தாங்கள் வழிபடும் தெய்வங்களின் உதவியை அல்லவா? உற்ற நண்பரிடமும் கூற உளங்கூசும் செய்திகளையும், தெய்வத்தினிடம் முறையிட்டுத் தங்களுக்கு நலமளிக்க வேண்டுமென இறைஞ்சுகின்றார்கள். தங்கள் நெஞ்சிலுள்ள யாவற்றையும் ஒளியாமல் கூறுவது தெய்வத்தி னிடமேயாகும். இம்முறையீட்டிற்குப் பெரிய மன் னன் என்றும் கூலிக்காரனென்றும், அறிவுடை யவரென்றும் அறிவற்றவரென்றும், ஞானிகளென் றும் பேதையரென்றும், வீரரென்றும் கோழைக ளென்றும், ஆணென்றும் பெண்ணென்றும் வேறு பாடிலது. யாவரும் இடுக்கண் வந்த காலத்தில் தெய்வத்தினிடம் செல்லவேண்டியவரே. சான்றோர் இடுக்கண் வந்த காலத்தில் மட்டுமன்றி, எப்போதும் தெய்வத்தினிடம் மனத்தைச் செலுத்துவர். செல் வத்திலோ, இன்பத்திலோ மூழ்கியிருக்கும் போதும் அவர்கள் நெஞ்சம் தெய்வக் குறிப்பிலிருந்து நீங்குதல் இல்லை. அக்குறிப்பே, அவர்கள் உடலை யும் உயிரையும் வாழச் செய்வது என்பது அவர்கள் எண்ணம். உடல் நல்வழிச் செல்லுதற்கும், ஆன்மா உயர்நிலையடைந்து உய்தற்கும் தெய்வமே காரண மென்பதை அவர்கள் உறுதியாக நம்பியுள்ளார் கள். ஆதலின், எங்ஙனம் சில குடங்களைத் தலை யில் தாங்கிக்கொண்டு கூத்தாடுபவள், எத்தனை வித மான நடனங்களைச் செய்யினும், அவள் கருத்து முற்றும் குடம் விழா வண்ணம் நோக்குவதிலேயே பதிந்திருக்குமோ, அங்ஙனமே தெய்வத்தினிடம்

மனமிருத்தியவரும், உலகப் போக்கில் எத்தனை ஆட்டங்களை ஆடிக்கொண்டிருந்தாலும், அவர் நெஞ்சம் முற்றும் தெய்வத்தினிடமே அமைந்திருக்கும். அவர்கள் நம்பிக்கையே அவர்களுக்கு நலமளிக்கிறது. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்,' என்பது ஆன்றோர் வாக்கியமன்றோ!

அன்னையர் சில காரணங்களினால் ஒவ்வொரு காலத்தில் தம் மக்களிடமும் வேறுபாட்டைக் காட்டுவதுண்டு. தெய்வம் அத்தன்மை வாய்ந்ததன்று. யாவரிடமும் பொதுவாக அருள் புரியும். தன்னை வந்து பத்தியுடன் இறைஞ்சுபவருக்குச் சிறப்பாகக் கருணை காட்டும். அன்னையர் மக்கட்டொகுதியுள் சேர்ந்தவராதலின், அவர்கள் சொன்ன சொற்களிலிருந்து தவறியும் போகலாம். அவர்கள் சொற்கள் பழுதுபட்டுப் பயன்தாராமலுமிருக்கலாம். இவை யாவும் தெய்வத்தினிடம் நடைபெறா. அது செப்பிய யாவும் நிலைபெற்ற நலங்களை அளியாநிற்கும்! இவற்றை எல்லாம் மனத்திருத்தியே பிராட்டி, 'அன்னையே, உன்னையே தெய்வமாகக்கொண்டு இத்தனை காலம் வாழ்ந்து வந்தேன்,' என்கிறாள்.

"அன்னைநீ யுரைத்த தொன்றும் அழிந்தில தாத லானே
உன்னையே தெய்வ மாக்கொண் டித்தனை கால முய்ந்தேன்."

—உயுத்த காண்டம், பிராட்டி களங்காண் படலம், 30.

என்பது காண்க.

இதனால் பிராட்டி திரிசடையினிடம் என்ன விதமான கருத்தைக்கொண்டிருக்கின்றாள் என

லூன்றி நோக்கின், 'திரிசடையே, என் ஆருயிர் நாதர் பிரிவை ஆற்ருது யான் வருந்தியபோ தெல்லாம் என் மனத்தைத் தேற்றித் தேற்றி எனக்கு ஆறுதல் அளித்தனை! அவ்வமயம் நீ என்னை ஈன்ற தாயாகக் காணப்பட்டனை! என் தீவினை அத்துயரத்தோடு என்னை விட்டதா? அக் கன்ம வினை இக்கொடிய அரக்கரைத் தூண்டி விடு கிறது. இவர்களோ, என்னைப் பல வகையிலும் அலக்கழிக்கின்ருர்கள்! இறுதியாக என் நாயகரை உயிரற்றவராகக் காட்டினூர்களே! இதற்குமேல் இன்னலும் வேண்டுமா? இத்தகைய இன்னல்களி ஞல் சோரும் என் உயிர் தளிர்க்குமாறு அமுத மொழிகளைக் கூறுகின்றவர் யார்? அவை அமுத மொழிகளா? பழுதற்ற தெய்வமொழிகளல்லவா? அரக்கர் பொய்ச் செயல்களை ஆய்ந்து ஆய்ந்து அவற்றின் உண்மையை உறுதிப்பட எடுத்தியம்பி என்னைக் காக்குமுன்னே, அன்னையெனக் கூறுதல் போதியதாமா? குற்றமற்றனவும் பொய்க்காதனவு மான சொற்களைப் பகரும் உன்னைத் தெய்வ மென்றல்லவா இயம்பல் வேண்டும்?' என்னும் எண்ணம் அவள் மனத்தில் நன்கு பதிந்துள்ளது எனத் தெரிகின்றது. இதைப்பற்றியே சீதை, திரிசடையைத் தெய்வம் என உயர்வும் மேன்மை யும் தோன்ற வழங்குகின்ருள்.

பின்பு நீதியற்ற நிலையையே பற்றித் திரிந்த அரக்கர் யாவரும் அழிந்தனர். அறத்தையே பற் றுக்கோடாகக் கொண்ட ஸ்ரீராமபிரான், வெற்றி பெற்ருர். தருமாத்துமாவாகிய விபீடணன், அரசை

அடைந்தான். யாவரும் அயோத்தி திரும்பினர் இராமர், சீதை முதலியோர் ஏறிச்செல்லப் புஷ்பக விமானம் வந்து நிற்கின்றது. அவ்வமயம் தன் பண்பிற்கும் செயலிற்கும் ஏற்ப, நலம்பெற்று இலங்கைக்கு இளவரசியாகப்போகும் திரிசடை, அயோத்திக்குப் பேரரசியாகப்போகும்பிராட்டியை வணங்குகின்றாள். மனம் மகிழ, கண் குளிர, இவளைக் காண்கின்றாள் பிராட்டி. தனக்கு இவள் செய்த உதவிகள் யாவும் ஒன்றன்பின்னொன்றாக அவள் நினைவிற்கு வருகின்றன. சீதை இவள் இழைத்த உதவிகளின் முழுப்பயனையும் பெற்று நின்றது அன்றேயன்றோ! அவளுக்குத் தன் சார்பாக ஆனந்தமும், திரிசடையின் சார்பாக ஆர்வமும் பொங்கி எழுகின்றன. தனக்கு அன்னையாகவும் தெய்வமாகவும் இருந்து நலம் புரிந்த உயர்குண நங்கை தன்னை வணங்குகின்றதைப் பார்த்தவுடன், அவள் மனம் வியப்பிலாழ்ந்தது. "இவளுக்கு யான் கொடுக்கும் பரிசு யாது?" என அவள் மனம் தடுமாறிற்று. "இவளோ, கல்வி, அறிவு, ஒழுக்கம், செப்பமுடைமை, மனத்திண்மை, பிறர் நலத்தையே நாடி நிற்கும் பெருந்தகைமை முதலியவற்றை அணிகலன்களாகக்கொண்ட கற்புடையவள். இக்கற்பில் இவளுக்கு ஒப்பாரையோ மிக்காரையோ காணுதற்கியலாது! இத்தகையவளுக்குத் தகுந்த பரிசைத் தான் யான் ஈதல் வேண்டும்! மனத்துறவு பூண்ட இவள் மணிகளிழைத்த அணிகளையும் விரும்பாள்! அரசச் செல்வமும் இவளை ஆனந்தமுறச் செய்யாது! அவற்றை யான் இவளுக்குத் தரினும் அவை எத்தனை நாட்களுக்கு நிலைத்திருக்கும்? அவை

இன்றே நாளையோ அழிந்து போகக்கூடியன அல்லவா? எனக்கு என்றும் நிலைபேருன உதவிகளைச் செய்த இவளுக்கு யான் இத்தகைய நிலையற்ற நலங்களைப் புரிதல் ஏற்றதாகுமா? ஒருகாலும் ஆகாதன்றே?" எனச் சிறிது நேரம் சிந்தித்தாள். அவ்வமயம் ஓர் எண்ணம் அவள் மனத்தில் உதித்தது: "இதுகாறும் இவள், யான்மட்டும் தொழுந் தெய்வமாய் இருந்தாள். ஆனல், இவள் பண்பு ஒருவருக்கு மட்டுந்தான் தெய்வமாய் விளங்கும் அளவுடையதென இயம்புதற்கில்லை. அறத்தையே அழித்து நிற்கும் இராவணன் அரசு புரிந்த அவ்வமயம் இவள் இயல்பை அறிதற்கும் ஏற்றுக் கொள்ளுதற்கும் பாத்திரங்கள் இல்லாமலிருந்தன. இப்போதோ, அரசு தருமாத்துமாவான விபீஷணன் கைப்பட்டுள்ளது. இனி இவ்விலங்கை அறத்தை அறிந்து அறவழியில் செல்லும் என்பதில் ஐயமிலது. இக்காலத்தில் அரக்கியரை நன்னெறியில் செலுத்த ஒருவர் வேண்டுமல்லவா? அதற்கு இவளைக்காட்டிலும் உயர்ந்தவரோ, அன்றி, இவளுக்கு ஒப்பானவரோ யாருளர்? இருளைப் போக்க ஒரு விளக்கு இன்றியமையாது வேண்டுவது போன்று, தீநெறியையே மேற்கொண்டு ஒழுகும் அரக்கர் அறியாமையாகிய இருளை நீக்க அறிவு என்னும் ஒளியைப் பெற்றிருக்கும் ஒருவர் இருத்தல் வேண்டாவா? அதற்குத் திரிசடையாகிய பேரொளியைத் தரும் தீபமே பொருத்தமுடையதாகும். இனியேனும், இலங்கை, சான்றோர் கூட்டுறவைப் பெற்று வாழட்டும்! இவளுக்கு யாதோர் இன்னலும் உண்டாதல் கூடாது. எங்ஙனம் வேருக்குத் தீங்குண்டாயின்

கிளைகளும், மலர்களும், இலைகளும் வாடி அழி வுறுமோ, அங்ஙனமே அறத்தின் வேராகிய இத் திரிசடைக்குக் கெடுதி நேரின், இலங்கையே நல னிழந்து அழியும். இலங்கை வாழ வேண்டுமாயின், இவள் கேடின்றி இருத்தல்வேண்டும்,''என்பவற்றை யெல்லாம் மனத்திருத்திய சீதை, தன்னை வணங்கிய திரிசடையை அன்புடன் எடுத்து, "ஒப்பாரும் மிக் காருமில்லாத கற்புடையவளே, இதுவரையும் என் ஒருத்திக்கு மட்டும் தெய்வமாய் விளங்கிய நீ, யாதோர் இன்னலுமில்லாமல் இலங்கைக்குக்குத் தெய்வமெனப் பல்லாண்டு பல்லாண்டாக வாழக் கடவாய்!'' என வாழ்த்தி நின்றாள். இதனால், சீதை திரிசடைக்கு 'இலங்கைக்கு அணங்கு' என்னும் பட்டத்தையளித்தாள் என அறிகின்றோம்.

"வணங்கு நுண்ணிடைத் திரிசடை வணங்கவாள் கற்பிற்கு
இணங்க ரின்மையா ளேக்கியோ ரிடரின்றி யிலங்கைக்கு
அணங்கு தானெனை இருத்தி.''

— உயுத்த காண்டம், மீட்சிப்படலம், 147.

என்பது காண்க.

இதுகாறும் கூறியவற்றால், திரிசடை, இரக்கம் ஆண்மை என்னும் இரு குணங்களும் வாய்ந்திருந் தாள் என்பதும், இவள் சீதாபிராட்டிக்குப் புரிந்த உதவிகள் அளவற்றன என்பதும், திரிசடை யின் சீர்மைகள் இன்னவை என்பதும், திரி சடை இனிய சொற்களையும் அன்பும் அருளும் நிறைந்த உள்ளத்தையும் உடையவள் என்பதும், அனுமான், திரிசடையை நயமற்ற அரக்கி

களிடமிருந்து வேறு பிரித்து, இவள் தாயெனவும், அன்பும் அருளும் ஒளிரும் முகத்தையும், மிக்க மாண்பினையும் உடையவள்எனவும் உரைக்கின்றான் என்பதும், சீதாபிராட்டி, திரிசடையை 'அன்பினள், தாயினுமினியவள், துணைவி' எனக்கூறியது மட்டுமேயல்லாமல், இவளுக்கு 'அன்னை, தெய்வம், இலங்கை அணங்கு' என்னும் உயரிய பட்டங்களைச் சூட்டி, இவளைப் பழுதின்றிப் பல்லாண்டுகள் வாழ வேண்டுமென மனமார வாழ்த்திச் சென்றாள் என்பதும் அறிகின்றோம். இவற்றை நன்கு ஊன்றிப் பார்க்கும் சான்றோர், திரிசடையை 'அரக்கர் குல மங்கை' எனச் செப்புதற்குத் துணிவரோ? தெய்வ மங்கையினும் மேம்பட்டவள் என்றல்லவா இயம்புவர்? நற்பண்புகளையே கொண்டு வாழும் நல்லவர் என்றும் வாழ்வாராக!

2. அகலிகை கற்பிழந்தவளா?

1. அகலிகை கௌதமருக்கு அமைந்த இல்லாள்.

இந்திய நாடு பண்டு பொதுவாகப் பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பினும், சிறப்பாக ஆன்மதத்துவத்தில் மிக்க உயர் நிலையை அடைந்திருந்தது. தம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி இறைவனடியைச் சேர்ந்து பேரின்பத்தைத் துய்த்தலே பிறவியின் பயன் என்பது இந்தியர் எண்ணம். ஆன்மாவைத் தூய்மைப்படுத்தல் என்பது என்னே? தீய எண்ணங்கள், தீய சொற்கள், தீய செயல்கள் இவற்றை ஒழித்து, நன்னெறியில் படருதற்குத் தக்க முறைகளை மேற்கொண்டு ஒழுகுதலே ஆன்மா தூய்மை அடைதற்கு வழியாகும். அவர்கள் மனம், உலகப்பற்றில் அதிகம் உழலாமல், ஆன்ம தத்துவத்திலோ, இறையின் தத்துவத்திலோ ஊன்றி நிற்கும். இத்தகையவர், மனத்தைப் பல வகையிலும் இழுத்துச் செல்லும் நகரங்களில் வாழ்தல் இல்லை; நாட்டிற்குப் புறம்பே உள்ள தனி இடங்களில் தனித்தோ, மனைவியருடன் கூடியோ வதிவர். இவர்களுடைய இல்லம், உடை, உணவு முதலியன மிக்க எளிமையுடையனவாயிருப்பினும், இவர்கள் எண்ணங்கள் உயர்வுடையன. இவர்களுடைய வாழ்த்தலும் வைதலும் மக்களுக்கு உடனே தத்தம் பயனளிப்பனவாகும். ஆதலின், எத்தகையவரும் இவர் எண்

ணங்களுக்கு மாருக நடத்தற்கும், இவர்களுக்குச் சிறு தீங்கை இழைத்தற்கும் அஞ்சுவர். செயற்கரிய காரியங்களையும் செய்யும் திறமை இவர்களிடம் அமைந்திருக்கும். நல்லியல்பு என்னும் குன்றின் மேல் ஏறி மனந்தளராமல் நிற்கும் இவருக்கு இவ்வுலக முற்றும் வசப்பட்டு நிற்கும் எனக் கூறினும் அது மிகையாகாது. இத்தகையவரைத்தாம் தவசிகள் எனவும், முனிவர் எனவும் பகருவர். அகத்தியர், அத்திரி, விசுவாமித்திரர், கௌதமர் முதலியவர் மேற்குறித்த குழுவைச் சார்ந்தவரே.

கௌதமர், மனத்தூய்மையுடையவர்; தவ வன்மை வாய்ந்தவர்; ஒருவருக்கு ஊறிழைக்காத உத்தமர்; மூன்று காலத்தின் செயல்களையும் உணரும் பெற்றியுடையவர். இன்னும் பல அரிய தன்மைகள் அவரிடம் பொருந்தியிருந்தன. அவருக்கு இல்லாளாக அமைந்தவளே அகலிகை யாவாள். இவளிடம் ஒரு முனிவருக்கு இல்லக்கிழத்தியாய் அமைந்திருத்தற்கேற்ற பண்புகள் யாவும் பொருந்தியிருந்தன. இவள் கணவர் வாய்விட்டுக் கூறுதற்கு முன்னரே, அவர் உள்ளக் கருத்தை அறிந்து அவருக்குத் தொண்டு புரிந்து உலகத்திற்கே அணியென விளங்கினுள். விருந்தினரை உபசரித்தல் முதலிய இல்லறத் தருமங்களையும், வேள்விக்கு வேண்டுவன அமைத்து வைத்தல் முதலிய துறவறத் தருமங்களையும் குறைவின்றி நிகழ்த்தும் திறன் இவளிடம் குடிகொண்டிருந்தது. இப்பெண்மணி, தலைவர் கருத்திற்கு மாருக ஒரு நாளும் நடந்தறியாள். கணவரையல்லாமல் வேறு

தெய்வத்தையும் நினைத்தல் இவளிடம் என்றும் இடங்கொண்டிலது. மிக்க வனப்புடையவளாய் இருப்பினும், தன் அழகைக் குறித்தோ, உருவ அமைப்பைப் பற்றியோ, இவள் என்றும் பெருமிதங்கொண்டிலள். செயலிலும், உடையிலும், உணவிலும் முனிவருக்கேற்ற மனைவியாய் இருந்து வாழ இவள் மறந்ததில்லை. இவள் செயல்கள், "நமக்கு இத்தகைய மனைவி வாய்த்ததற்கு நம் பெரியோர் இழைத்த புண்ணியமே காரணம்!" என முனிவர் மகிழுமாறு காணப்பட்டன. இவளை முனிவரும் மற்றவரும் புகழ்ந்தனர். இவள் முனிவர் மனைவியருள் சிறந்தவளாய் இருந்தாள். எல்லா நற்குண நற்செயல்களும் இவளிடம் இடம் பெற்றிருந்தன என இயம்புதல் மிகப் பொருத்தமுடையதாகும். இவள் பன்னாட்கள் முனிவருடன் நலமே வாழ்ந்து வந்தாள். இது நிற்க.

2. கற்பரசிகளின் கண்ணியம்

கற்பு என்பது என்ன? கற்பு என்பது கல் என்னும் பகுதியினடியாகப் பிறந்து, கல்வி, கற்பனை, நீதி நெறி, முறைமை, விதி, மகளிர் நிறை, மனத்திட்பம் முதலிய பல பொருள்களைத் தாராநிற்கும். ஆயினும், உலகில் பெரும்பாலார், 'கற்பு என்னும் சொல் பதிவிரதா தருமத்தையே குறிப்பதாகும்,' எனக் கொள்ளுகின்றனர். கணவனுக்கேற்ப, அவன் குறிப்பின்படி நடந்து, அவனையன்றி மற்றெவரையும் மனத்தினும் கருதாத பெருந்தகைமையே இப்பதிவிருதா தருமத்தின் கோட்பாடாகும். இதைத்

தான் இலக்கியங்கள் 'மகளிர் நிறை, மகளிர் மனத் திட்பம்' எனப் பகராநிற்கின்றன. இச்சொற்கள், நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தும் மன உறுதியையே குறிப்பனவாகும். ஓர் இல்லக்கிழத்திக்குப் பல கடமைகள் இருப்பினும், கணவனுக்குப் பல வகையிலும் மகிழ்வுண்டாகுமாறு நடந்துகொள்ளுதலும், தன் நெஞ்சத்தில் வீற்றிருக்கும் உரிமையை அவன் ஒருவனுக்கே ஈதலும் இன்றியமையாதவை எனக்கொள்க. இத்தகையவர் தெய்வத்திற்கும் தம் மனத்தில் இடந்தாரார். இதனாலன்றோ, கண்ணகி முதலியவர், தம்மைப் பிரிந்திருக்கும் கணவரைத் தம்பால் கொணரத் தெய்வந்தொழல் தக்க வழியெனப் பிறர் செப்பிய போதும், வேறு தெய்வத்தை வழிபட மறுத்து நின்றனர்? இதன் கருத்து யாது? மனத்திட்பம் வாய்ந்த மகளிர், எப்போதும், பிரிவிலும் சேர்க்கையிலும், தம் கணவரையே சிந்தித்துக்கொண்டிருப்பரேயல்லாமல், தெய்வச்சிந்தனைக்கும் செல்லார் என்பதல்லவா? இவர்களைச் சான்றோர், தெய்வத்தன்மை வாய்ந்தவர்களென்றும், தெய்வங்கள் என்றும் செப்புவர். இவ்வுலகில் இவர்களைக்காட்டிலும் உயர் பொருள் வேறொன்றுமில்லை என்பது ஆன்றோர் எண்ணம். "முன்னவனே முன் நின்றால் முடியாததொன்றுண்டோ?" என்னும் வாக்கியம் ஒன்றுள்ளது. இக்கற்புச்செல்விகள், தாங்கள் போற்றும் உத்தமக் கணவர் மூலமாக மேற்குறித்த முன்னவன் அருளையும் பெற்றிருத்தலின், இவர்களால் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லை எனக் கூறலாம்.

முனிவர் ஆக்கவும் அழிக்கவும் வல்லவர் எனச் செப்பினும், அவர்களையும் வெல்லுந் திறன் இக் கற்பரசிகளுக்கு உண்டு.

நளாயினி என்பாள், ஒருநாள் இரவில் தொழு நோயால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த தன் கணவனைக் கூடையிலிட்டுத் தலைமேல் சுமந்துகொண்டு சென்றாள். அக்கூடை, ஊழின் பயனாய்த் தண்டனையடையப் பெற்றுக் கழுவிடைச் சிக்கித் துன்பப் பட்டுக்கொண்டிருந்த ஆணிமாண்டவியர்மீது தாக்கி அவருக்குத் துன்பமுண்டாக்க, அதைப் பொறாத முனிவர் வருந்தி, "பொழுது புலர்ந்ததும் இவள் தன் மங்கல நாணை இழக்கக் கடவள்!" எனச் சபித்தனர். அதைச் செவியேற்ற நளாயினி, "பொழுதே புலராமலிருக்கக் கடவது," எனக் கூறினாள். அஃது, அங்ஙனமே நிகழ்ந்தது என்றும், முனிவர் தம் சாபத்தை விலக்கிய பின்பே, அகலிகை பொழுது புலருமாறு செய்தாள் என்றும் கூறப்படும் கதையைக் கேட்கின்றோம். காலன் கொண்டு சென்ற கணவனுயிரை மீட்டுக்கொண்டு வந்த கற்புத் திலகங்களும் நம் நாட்டில் உண்டல்லவா? கணவன் ஏற்றுக்கொள்ளாத தன் வனப்பைப் போக்கத் தன் தசையை உதறி எலும்புருவாகி நின்றவளும் நம் நாட்டுப் பெண்தானே? கணவன் இறந்தவுடன் உயிர் துறக்கும் உயரிய உத்தமிகளும், நெருப்பும் சுட்டெரிக்காத நீர்மையுடைய மகளிரும், மழையையும் நினைத்த போதே பெய்யுமாறு செய்யும் மாண்புடைய வனிதையரும், கடல் கொண்ட கணவனையும் உயிருடன் காணும் கடவுட்டன்மை பெற்ற கன்னியரும், வீசிய வாளும் மல

மாலையாக மாறும்படி செய்யும் புண்ணிய புனிதவதிகளும் நம் இந்திய நாட்டிலல்லாமல் வேறெங்குத் தோன்றினார்கள்? ஒரு மகள், ஒருவனை மணம் புரிந்த பின்போ, அன்றி அவனைத் தான் மணம் புரிவதாக மனத்திருத்திய பின்போ, அவனையே தெய்வமெனக் கருதி வாழ்தல் அத்துணை உயர்வுடையதன்று. தான் மணஞ்செய்துகொள்வதாய்க் கருதாதிருந்தும், தன் பெற்றோர் தனக்கெனத் தீர்மானித்த ஒருவன் மணத்திற்கு முன்பே போரில் உயிர் துறக்க, அவன்பொருட்டுத் தன் வாழ்நாட்கள் முற்றும் கைம்மை நோன்பைக் கைக்கொண்டிருந்தனளே! அத்தகைய திலதவதியின் சிறப்பை என்னென்றியம்புவது!

3. அகலிகையின் வாழ்க்கை

இத்தகைய கலங்கா நிலை வாய்ந்த கற்பினுக்கே கொடி நாட்டி வாழ்ந்த இந்திய நாட்டிலேதான், அகலிகையும் தோன்றினாள். இவள் ஓர் உயரிய குலத்திற்பிறந்து, ஒரு மேலான குலத்திற் புகுந்தாள். 'குலத்தளவே ஆகும் குணம்,' என்றபடி, உயர்ந்த மரபில் தோன்றிய இவளிடம் தூய பண்புகள் பதிந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அன்றியும், முன்னர்த் தெரிவித்தபடி பல நற்குணங்களும் வாய்ந்த முனிவரிடம் வாழ்ந்துவரும் அகலிகையின் நெஞ்சம் தீநெறியில் படர நினைக்குமா? நாளும் இவள் செய்யும் காரியங்கள் யாவை? புறத் தூய்மைக்காக இல்லத்தையும், இல்லத்திலுள்ள பொருள்களையும், தன்னையும் சுத்தப்படுத்திக்கொள்ளல்—அகத் தூய்மைக்காக,

உலக உயிர்கள் மாட்டு அருளையும், இறைவன் மாட்டு அன்பையும் செலுத்தி வரும் முனிவரைத் தெய்வமெனக் கருதி வணங்கல்—முனிவர் புரியும் வேள்விக்கும், கடவுள் தொண்டிற்கும் வேண்டிய பொருள்களைத் திரட்டி வைத்தல் — அவருடன் இருந்து மனத்தை ஒரு வழிப்படுத்தல் — பற்றற்ற அதிதிகளை ஆதரித்தல்—சத்துவக் குணங்களையே உண்டாக்கும் உணவுகளைச் சுவைபடச் செய்து நாயகருக்கும் இட்டுத் தானும் உண்ணல்—தன் தலைவரிடமிருந்து நற்சரிதங்களையும், ஞானமீயும் தத்துவங்களையும் செவியேற்றல் முதலிய தீமை சிறிதும் கலவாத செயல்களேயாகும்.

இவள் வதியும் சுற்றுப்புறம் எத்தகையது? அது மனத்தெளிவிற்கும், நெஞ்சமைதிக்கும் ஏற்ற முனிவர் சூழல். சினம், பொறாமை "கள்ளம் காமம் முதலிய குற்றங்கள் தோன்றுதற்கு அஃது இடமன்று. அவணிருந்த இயற்கைச் சின்னங்களோ, கடவுள் கைத்திறனைத் தெளித்துக் காட்டி, 'இவ்வழகுகளைக்காட்டிலும் பேரின்பம் தருவது வேறொன்றில்லை'' என நினைக்கச்செய்யும் தன்மை வாய்ந்தனவாயிருந்தன. இவள் பழகி வந்தது யாரோடு? அனசூயை முதலிய கற்பணிகளாகிய முனிவரின் இல்லக்கிழத்திகள்—தவத்தினர் அருள்பெறப்போதரும் சீலர்கள்—இனிய பாட்டைப்பாடுவனவும் அழகிய நடனத்தைச் செய்வனவுமாகிய குயில்கள், மயில்கள், அன்னங்கள்—சாந்த குணமுடைய மான் மரை முதலியவற்றோடேயேயாகும்.

தன் உயர் மரபிற்கேற்ற உத்தமக் குணங்களும், உயரிய எண்ணங்களும், செவ்விய செயல்களும் இவளிடம் அமைந்திருந்தன. சாமுத்திரிக (அங்க இலக்கண) நூலில் இயம்பப்பட்டுள்ள அங்க அமைப்புகள் யாவற்றையும் இவள் பெற்றிருந்தாள். "நான்முகன், இவளுடைய ஒவ்வோர் உறுப்பையும் ஓர்ந்து ஓர்ந்து அமைத்தனனே!" என்னுமாறு, இவள் அவயவங்கள் காணப்பட்டன. இவள் ஒவ்வோர் உறுப்பிற்கும் ஒவ்வொருவர் உவமையாக நிற்பரே அல்லாமல், எல்லாவற்றிற்கும் ஒருவரே ஒப்பாக நிற்றல் அரிது. கண் முதலிய இவள் முகத்துறுப்புகளைப்பற்றிப் பேசுதற்கு எவராலும் இயலாது. இவள் கண்கள் கண்ணாடி போன்று மிளிர்ந்தன. அவை அருளையும் இனிமையையும் பொழிந்தன. எண்சாணுடம்பில் சிரசும், சிரசில் முகமும், முகத்தில் கண்களும் சிறந்தன அல்லவா? இத்தகைய அங்க அமைப்புகளோடுங் கூடிய அகலிகையின் அழகைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அகலிகை என்பது அஹல்யா என்னும் வடமொழித் திரிபு. இதற்கு 'அழகில்லாமை இல்லாதவள்" என்பது பொருள். ஆகவே, இச்சொல் மிக்க அழகு வாய்ந்தவள் என்னும் பொருளைத் தாரா நிற்கும். இவள் ஒப்பற்ற அழகை நோக்கியே, பெற்றோர் இவளுக்கு இப்பெயரைச் சூட்டினர் போலும்! 'செம்மையான அங்க அமைப்புகளையும் அழகையும் உடையவர் திருந்திய பண்புடையவராய் இருப்பர் என்பது அறிஞர் கருத்து. இதனாலும்

இவள் நற்பண்புடையவளாய் இருந்திருப்பாள் என அறிகின்றோம். ஆகவே, இவள் குலம், வாழ்க்கை, செய்கை, வாழ்ந்த இடம், அழகு முதலியன யாவும் செவ்வியவாய் இருந்தமையின், எக்காரணத்தினாலும் இவளுக்குத் தீக்குணமும் தீச்செயலும் வந்துறுதற்கு வழியில்லை என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். ஆதலின், நற்குணமும் நற்செயலும் வாய்ந்த இவள், ஒரு காலத்தில், தனக்கு ஆன்ம அணி என விளங்குவதும், சாமானியப் பெண்ணும் இழக்க இசையாததுமான கற்பணியை இழந்தாள் எனச் செப்புதல் யாங்ஙனம் பொருந்தும்?

4. இந்திரன் இழிசெயல்

இனி, இந்திரனைப்பற்றி நோக்குவோம்: தேவர் உலகத்தில் தேவர்களுக்கு அரசனாய் இருக்கிற ஒருவனை இந்திரன் என்பர். இவன் ஒருகால் நம்மைப் போன்ற மனிதனாகவே இருந்தவன். இவன் இவ்வுலகில் ஆயிரம் யாகங்களைச் செய்து அப்புண்ணியத்தினால் இந்திரனானான். ஒருவன் தான் செய்த புண்ணியத்தைத் துய்த்தற்கே அவ்வுலகம் ஏற்பட்டுள்ளது. அங்குச் சென்றார் பெரும்பான்மையும் இன்பபோகத்தையே அனுபவித்துக்கொண்டிருப்பர். இங்ஙனம் இன்பத்திலேயே தோய்ந்திருக்கும் அவர்கள் மனம், நன்மை தீமைகளை ஓர்ந்து பார்த்தற்கு இடந்தருதல் இல்லை. அவர்கள் தங்கள் செருக்குற்ற சிற்சில செயல்களால் துன்பத்தை அடையும்போதுதான் செருக்கினால் மூடப்பட்ட அவர்கள் கண்கள் திறக்கின்றன. அவர்கள் புண்ணியத்

தினால், எண்ணியன எண்ணியவாறே முடிதலால், கருதியவற்றையெல்லாம் கைகொள்ள முற்படுகின்றார்கள். கொடுந்தொழிலையுடைய அரக்கராலேயே அவர்கள் அடக்கப்படுகின்றார்கள். அறிஞராலோ, முனிவராலோ தாங்கள் இயற்றிய தீச்செயல்களுக்குத் தண்டனை ஏற்பட்ட காலத்திலேதான், அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்கின்றார்கள்; அவர்கள் செய்த புண்ணியம் முடிந்தவுடன், பழைய படியே இவ்வுலகில் வந்து பிறக்கின்றார்கள். இவற்றை நூல்கள் தெள்ளிதின் தெரிவிக்கின்றன. இவற்றால் இந்திரனுடைய செல்வம், செயல், குணம் முதலியவற்றைத் தெரிந்துகொண்டோம்.

இத்தகைய இந்திரர் எத்தனையோ பேர், மக்களைப் போன்றே தோன்றித் தோன்றி மறை றனர். அவர்களுள் ஒருவனே நம் அகலிகை காலத்தில் இருந்த இந்திரன். அவன் ஒரு ந கௌதம முனிவரது அருமைப் பத்தினியாக அகலிகையைக் கண்டான். இவள் அழகு அவன் மனத்தைக் கவர்ந்தது. "இத்தகைய வனப்பு வாய்ந்தவளும் இந்நிலவுலகில் இருக்கின்றனளா! நம் உலகத்திலும் இத்துணை அழகும், உடலமைப்புகளும் வாய்ந்தவளைக் கண்டிலோமே! அரம்பை, ஊர்வசி, மேனகை முதலியவர்களை அழகின் எல்லை கண்டவர் எனச் சிலர் கழறுவர். ஆனால், இவள் அழகிற்கு அவர்கள் அழகு எம்மாத்திரம்! ஒன்றற்கொன்று ஒப்பிட்டுப் பார்க்கவும் இடந் தாராதே! இவளை அடைந்து இன்பந்துய்த்தாலன்றோ, 'இன்பத்தில் திளைப்பவன் இந்திரன்,' எனக் கூறும் பேருக்கு யான் உரிமையுடையவ

ளுவேன்! இன்றேல், யான் இந்திரனுய் இருந்து தான் பயனென்ன! யான் இப்போது அனுப விக்கும் சுகத்தை இந்திர போகமென்று எங் ஙனம் இயம்புவது! இவை ஒருபுறமிருக்கட்டும். யான் உயிருடனிருந்துதான் வரும் நலமென்ன? அடைய வேண்டியவற்றை அடையாதவர் இறந்த வரே அல்லரோ!" என்னும் எண்ணங்கள் பல அவன் சிந்தையைச் சுழலச்செய்தன.

ஆனல், அந்த எண்ணங்களுக்கே அவன் அடிமைப்பட்டுவிடவில்லை. அவன் செய்த புண்ணி யத்தின் பயனுய், அப்போது அவனுக்கு ஒரு நல்லறிவு தோன்றிற்று: "நாம் எண்ணிய ...ண்ணம் அத்துணைப் பொருத்தமுடையதன்று; ...லக்குத் தக்கதுமன்று. பிறர்க்கு உரிமை ...ரவளை விரும்புதல் பேதைமையன்றே! இவ் ...தொழில், அறத்தின் பாகுபாட்டையும், ...பாருளின் தன்மையையும் உணர்ந்த அறிவுடைய வர்களிடம் உண்டாகுமா? அயலான் மனையாளை இச்சித்து அவன் வாயிலில் நிற்கும் அறிவிலிகள் உயிர் இழந்தவர் அல்லரோ? இஃது, எத் தகைய பெருமையுடையவர்க்கும் குடிப்பழிப்பை உண்டாக்கி, இழிவைத் தருவதாகும்! பகை, பாவம், பழி, அச்சம் முதலியன அவர்களை என்றும் விட்டு நீங்குதல் இல்லை. பிறர் மனையாளை விரும்பாத பெட்பு யாரிடமுள்ளதோ, அவரே சிறப்புடையவ ராவர். அப்பெட்பு, அவர்கட்கு வீரம், அறம், ஒழுக்கம் யாவற்றையும் ஒருங்கே அளியாநிற்கும் என்பது நூல்களின் துணிபன்றே!

"இவ்வழகிய அகலிகை, சாமானியருடைய இல்லாளுமல்லளே! இவளுடைய கணவர், முற்றுந்துறந்த முனிவர்; முக்காலத்தையும் அறியும் பெற்றி வாய்ந்தவர். அவருக்குத் தம் தவ வன்மையால், ஒருவரை வாழ்த்தி உயர்த்தவும், ஒருவரைச் சபித்துத் தாழ்த்தவும் முடியும்! என்னுடைய இந்திர செல்வமும், என் உயர் நிலையும் அவருக்கு எம்மாத்திரம்? அவர் நினைக்கில் ஓரிமையில் யாவும் கடல்புக்கொளிக்குமே! சிறிது பொழுது துய்க்கும் அற்ப இன்பத்திற்காக அரச முனிவரின் சினத்திற்காளாவது அறிவுடைமை யாகுமா? இதனால், யான் மட்டுமேயல்லாமல், என் குலமுழுதும் அழிந்தொழியுமே! இத்தகைய ஆபத்தான செயலை நான் மேற்கொள்ளாமலிருப்பது நலமன்றோ! இக்காரியத்தில் இன்னுமொரு துன்பமுமுளது: முனிவரை என்னுடைய வன்மையினால் அகலிகையை விட்டு நீங்குமாறு செய்து, நான் அவளிடம் செல்கின்றேன். அங்ஙனம் செல்லின், முனிவருடன் நன்கு பழகி, துறந்த உள்ளத்தைப் பெற்று, கணவரையன்றி வேறொருவரையும் மனத்திலும் நினையாத அக்கற்புக்கரசிதான் என்னை ஏற்றுக்கொள்ளுவளா? இத்தீய ஒழுக்கத்திற்கு அவள் என்னைச் சபிக்கமாட்டாளா? முனிவர் சாபத்தினின்று நீங்கினும் நீங்கலாம்! அப்பதிவிரதையின் கோபமொழியிலிருந்து நீங்குதல் யாங்ஙனம்? இதனால், நான் நினைத்தது எதுவோ, அதைப் பெறாமல் போதல் மட்டுமேயல்லாமல், சாபத்தையுமல்லவா ஏற்க வேண்டி வரும்? அச்சாபத்தைப் பெறுவண்ணம், அவளை எவ்வகையிலேனும் ஏமாற்றி, முனி

வரைப்போன்றே உருக்கொண்டு அவளுடன் கலந்திருக்கலாம் எனின், என் செயல்கள் அவளுக்கு வேறுபாட்டை உணர்த்தாவோ! அதனால், கேடு விளையினும் விளையலாம். இங்ஙனம் பல வகையினும் ஆபத்தை விளைக்கும் இக்கொடிய எண்ணத்தைத் தொலைத்தலே அறிவுடைமையாகும்," என எண்ணி, சின்னாட்கள் வாளாவிருந்தான்.

இங்ஙனம் தங்களைப்பற்றி இந்திரன் நினைத்த நினைப்புகளை முக்காலத்தையும் அறியும் முனிவரும் அறிந்திலர்; கற்புக்கரசியாகிய கன்னியும் உணர்ந்தாளில்லை. இவர்கட்கு இதைக் குறித்து முன்னரே சிறிதேனும் தெரிந்திருப்பின், இந்திரனுக்கும் அகலிகைக்கும் எற்பட்ட துன்பங்கள் நிகழாமலிருக்குமல்லவா? இங்ஙனம், எதிர் பாராது நிகழ்வது தான், 'தெய்வ சங்கற்பம்' என்றும், ஊழின் செயல் என்றும் சொல்லப்படுகிறது. எத்தகைய ஞானிகளுக்கும் ஊழை வெல்லுதல் கடினமன்றோ! இது நிற்க.

நான்முகன், பலருடைய அழகுகளை ஒன்றாகத் திரட்டி ஒரு பெண்ணை உண்டாக்கி, அவளுக்கு அகலிகை எனப் பெயரிட்டனன் என்றும், அவளைக் கண்ணுற்ற இந்திரன், "இச்சிறப்பு வாய்ந்த பெண்ணிற்கு நாயகனாகத் தக்கவன் யானே! என்னைத் தவிர வேறொருவரும் இவளை மணத்தற்குத் தகுதியுற்றவர் இல்லை," எனச் செருக்குற்றான் என்றும், அதை அறிந்த நான்முகன் அம்மங்கையை இவனுக்குத்தர விருப்பற்றவனாய், கௌதம முனிவரிடம் ஒப்புவித்து, 'இவளைப் பாதுகாப்பாயாக!' எனச்

செப்பினன் என்றும், அங்ஙனமே அவளுக்கு யாதோர் ஊறும் நேராவண்ணம் காத்து வந்த முனிவர் சின்னாட்கள் சென்று, அவளை நான்முக னிடம் கொண்டுபோய் விட்டார் என்றும், முனிவ ருடைய மன உறுதியையும் தவத்தின் திண்மை யையும் நோக்கி உவகையெய்திய நான்முகன், அவ் வகலிகையை அம்முனிவருக்கே மணஞ்செய்து தந் தான் என்றும், இதனல் பொறாமை கொண்ட இந்திரன், வேற்றுருக்கொண்டு அகலிகையிடம் வந்தானென்றும் இன்னொரு கதையும் வழங்கு கின்றது. எக்கதை எவ்வாறிருப்பினும், இந்திரன், முனிவர் அகலிகையை விட்டகலுமாறு செய்து அகலிகையுடன் கலந்திருந்தான் என்பது நிச்சயம்.

முன்னர்க் கூறியவாறு இத்தீய கருத்தைத் தொலைத்துவிட வேண்டுமென நினைத்த இந்திரன், சின்னாட்கள் அவ்வெண்ணமின்றியே காலங்கழித் தான். ஆயினும், அவனுடைய கொடுவினையும், அக லிகையின் பாவமும் அவனை அங்ஙனமே இருக்க விட்டில. அவைகள் செயல் செய்ய முனைந்தன. அவன் மனத்தில் அகலிகையினிடம் கொண்ட ஆர்வ விதைகள் சிறிது சிறிதாக, முளைத்தெழத் தொடங்கின. பயனற்றனவும் பிறருக்குத் தீங்கு விளைவிப்பனவுமான விதைகள் விரைவில் வளர்ந் தோங்குவது இயல்பன்றோ? அங்ஙனமே, இத்தீய எண்ணங்கள், இமைப்போதில் அவன்நெஞ்சில் கிளை விட்டுத் தளிர்த்தன. திரும்பவும் பழைய நிலைக்கு வந்துவிட்டான். அகலிகையின் மீதுள்ள ஆசை அவனை ஆட்கொண்டது. அதையொழிக்க அவ

னல் இயலவில்லை. காமம் என்னும் பேய் அவனைப் பிடித்தாட்டத் தொடங்கிற்று. அவன் அதற்குக் கட்டுப்பட்டு நின்ருன். உயரிய எண்ணங்கள் யாவும் அவனை விட்டு ஒழிந்தன. 'எங்ஙனமேனும் அவளை அடைய வேண்டும்!' என்னும் நினைவே அவனிடம் தலை தூக்கி நின்றது. அதற்கேற்ற வழிகளை எல்லாம் அவன் தேடலானன். அவற்றை மனத்தில் வகுத்துக்கொண்டு நிலவுலகத்திற்குப் புறப்பட்டான்.

சிறு ஓசையுமற்ற நள்ளிரவு—கொடிய விலங்குகளும் தத்தம் இடங்களில் உறங்குகின்றன—பறவைகளும் கூடுகளில் அமைந்திருக்கின்றன. அவணுள்ள முனிவர்களும் உறக்கத்தில் ஆழ்ந்துள்ளார்கள்.

அவ்வமயம் இந்திரன், சேவல் உருவைக் கொண்டான். "நான் சேவலைப் போன்றே இருக்கின்றேனு?" எனத் தன்னைத்தான் உற்றுப் பார்த்துக்கொண்டான். அச்சேவல் விரைந்து சென்று முனிவர் ஆச்சிரமத்தை அடைந்தது. பொழுது புலர்ந்ததைத் தன் குரலினல் தெரிவிப்பது சேவலின் செயலன்ருே? அதன்படியே, அவ்விந்திரச் சேவல், கௌதம முனிவர் பர்னசாலையின் அருகில் நின்று, நான்கைந்து முறை பெருஞ்சத்தத்துடன் கூவிற்று. முனிவர் விழித்துக்கொண்டார். காலைக் கடனைக் கழிக்க அவர் கால்கள் கங்கையை நோக்கி விரைந்து நடந்தன.

"தையலான் நயன வேலும் மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதி நாடி உழல்பவ னெருநா ளுற்ற

"மையலா லறிவு நீங்கி மாமுனிக் கற்றஞ் செய்து
பொய்யிலா வுள்ளத் தான்ற னுருவமே கொண்டு புக்கான்."
—அகலிகைப் படலம், 75.

எனக் கம்பர், இந்திரன் சேவலாய்ச் சென்று முனிவரைக் காலைக்கடன் கழித்தற்பொருட்டுப் பிரித்த செய்தியை, "மாமுனிக்கு அற்றம் செய்து" என்னும் சொற்றொடர்களால் உணர்த்துகின்றார்.

உடனே இந்திரன் சேவல் உருவத்தை ஒழித்து முனிவர் உருவத்தைக் கொண்டான்: முனிவராகவே காணப்பட்டான். முனிவருக்கும் அவனுக்கும் சிறிது வேறுபாடும் தோன்றிலது. அவ்வமயம் முனிவரே அவனைக் காணினும், 'நாம் முனிவரா, இவன் முனிவனா!' எனத் தியங்கும்படிதான் நேர்ந்திருக்கும். நினைத்த போது எண்ணிய உருவங் கொள்ளல் ஒரு சிறந்த வித்தையன்றோ! அக்கலை யாவருக்கும் அமையுமா? அதற்குத்தக்க தவமும் வன்மையும் வேண்டுமல்லவா? அத்தகைய கலையைக் கற்க எத்தனை பேர் பன்னாட்கள் உழலுகின்றனர்! உழன்றும் பயனடையாமற் போகின்றவர் எத்தனை பேர்! அந்தோ! இச்சீரிய கலை இந்திரனுக்குக் கைவந்தும் யாது பயன்? அவனுக்கேனும் நலமளித்ததா? அன்றிப் பிறருக்கேனும் நன்மை செய்ததா? ஒருவருக்கும் தீமை புரியாமலேனும் ஒழிந்ததா? அன்றி, அத்தீமை சாமானிய மனிதரளவிலாவது நின்றதா? இல்லையே! அக்கலை, மனத்தூய்மையுடைய முனிவருக்கும், வஞ்சமற்ற வனிதைக்குமல்லவா ஊறு செய்ய ஊன்றி நின்றது! விரும்பிய போது வேற்

றுருக்கொள்ளும் அக்கலை, மணிமேகலையிடம் அமைந்த போது, அவளுக்கு எத்தனை நன்மைகளை அளித்தது! எத்தனை பேருக்கு நல்லறிவீந்தது! பொருள் ஒன்ருயிருப்பினும் அது தங்கும் பாத்திரத்திற்குத் தக்க பயனையன்ருே அளிக்கின்றது! இவ்வுயரிய வித்தையைப் பெற்ற இந்திரன், தன்னையும் கெடுத்துக்கொண்டு பிறரையுமல்லவா கெடுத்தான்! இவனைச் சார்ந்த கலையும் தன்மதிப்பை இழந்தது. கற்றவருள் சிலர் கல்விக்கும், துறவிகளுள் சிலர் துறவினுக்கும் இழுக்கையுண்டாக்குவது போன்றே, இந்திரன் தான் கற்ற சிறந்த கலைக்கு மாசைத் தேடி வைத்தான். அவன்பால் அமைந்த கலை, குரங்கின் கையில் கொள்ளி கொடுத்ததற்கும், அற்பனிடம் அதிகாரம் அமைந்ததற்கும் ஒப்பத் தீமை இழைக்கத் தொடங்கிற்று.

மனமொழிகளைப் புறஞ்செலுத்தாது அடக்கி, பல்லாண்டுகள் தவம் புரிந்து, தேவர்களிடம் பல வரங்களையும் பெற்று, பின்பு, உலகத்தையழிக்கும் பாவத் தொழிலில் நுழையும் அரக்கருக்கும், பல முயற்சிகளைச் செய்து இவ்வித்தையைப் பெற்ற அவ்விந்திரனுக்கும் என்ன வேறுபாடு? அவர்களேனும், பெரும்பாலும் நங்களுக்குப் பகைவராய், தங்கள் முன்னின்று போர் புரியக்கூடிய மனிதரிடம் தங்கள் கொடுமையைச் செல்ல விடுகின்ருர்கள். அன்றியும், அவர்கள், மக்கள் உயிரையும் செல்வத்தையுமே கவர்கின்ருர்கள். அந்நியதியும் இந்திரனிடம் காணப்பட்டிலதே! அவன், தனக்கு முன்னும் பின்னும் பகையற்ற கற்பு மணியின்

உயிர்நிலையான மானத்தையும், முனிவரின் உரிமையுடைய மனைச் செல்வத்தையுமன்றோ கவர்ந்தான்! அவர்களேனும் அரக்கர்களென அனைவரும் அறிய வாழ்ந்தார்கள்; அதனால், மக்களுக்கு அவர்களிடமிருந்து தப்புதற்கு வழி உண்டு. இக்கள்ள அரக்கன் அங்ஙனமுமில்லையே! தன் கள்ளத்தனத்தை, கொடிய தன்மையை, சேவலிலும் முனிவரிலும் மறைத்துக்கொண்டல்லவோ புறப்பட்டான்! இவற்றை, வஞ்சனையற்றவளும் கள்ளமறியாதவளுமான தூயவள் யாங்ஙனம் அறியக்கூடும்?

இக்கொடுமைகள் இழைத்த தீமைகள், ஒன்றா, இரண்டா? தவநிலையினின்றும் தவறாதவராய்—பலருக்கும் சான்றாய்—உயிர்க்குயிராய்—அன்புக் கயிற்றால் கட்டப்பட்டவராய்—எளிய வாழ்வும் உயரிய எண்ணங்களும் கொண்டவராய் வாழ்ந்த தம்பதிகளைப் பிரித்தன; முனிவருக்கு என்றுமுண்டாகாத கோபத்தை உண்டாக்கி, அவர் தவத்திற்குக் குறைவை ஏற்படுத்தின; கற்பே உயிரெனக் கருதிய அகலிகையைக் கல்லாகச் செய்தன; ‘அகலிகை கற்புடையவளா, கற்பற்றவளா?’ என்னும் ஆராய்ச்சிக்கு இடத்தைத் தந்தன. அக்கொடுமைகளை மேற்கொண்ட அவனுக்கோ, எக்காலத்தும் நீங்காப் பழியையும் பாவத்தையும் திரட்டிக் கொடுத்தன. முனிவருக்கும் அகலிகைக்கும், அவர்கள் துன்பங்கள் ஒழியத் தக்க காலம் கிடைத்தது. இந்திரன் குற்றம் இன்னும் நீங்கியதாகத் தெரியவில்லையே! இன்னும் அவனை ‘இந்திரன் ஆயிரங் கண்களையுடையவன்,’ என்றுதானே சொல்லுகின்ற

னர்? ஆயிரம் கண் என்று சொல்லியவுடன், அவன் அற்பத்தனம் நம் கண்முன் நிற்கின்றதே! அதை எங்ஙனம் மறைக்க முடியும்? இதனால், கள்ளமும் வஞ்சகமும், உயர்ந்தவர்களுக்கும் ஊறிழைக்காமல் விடுதல் இல்லை என்பதை அறிந்தோம்.

இங்ஙனம் முனி வேடத்துடன் சென்ற இந்திரன், அகலிகையுடன் அளவளாவி இருந்தான். முதலில் கள்ளங்கபடறியாத அகலிகை, முனிவரென்றே கருதினாள்; ஆனால், சிறிது போழ்தில் அவனுடைய சிற்சில செயல்களால் தன் கணவரல்லன் என உணர்ந்தாள்; ஆயினும், அது கலப்பினால் உண்டான இன்பத்தில் ஆழ்ந்திருந்த சமயமாயிருந்தமையின், இவள் அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள இயலாமல் மயங்கி இருந்தாள். அவ்வின்பச் சுவையின் இயல்பு, இவளை அதிலேயே ஆழ்த்திவிட்டது. அவ்வியற்கைக்கு இவள் அடிமையாய்விட்டாள்! இதுதான் இயற்கை உணர்ச்சி எனக் கூறுவது! அகலிகைக்கு இக்குறை, இரண்டு வகையில் ஏற்பட்டிருக்கக் கூடுமென நாம் ஒருவாறு யூகிக்கலாம். ஒன்று, இயற்கையின் செயல்; மற்றொன்று, இந்திரன் வன்மை. இவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் நம் பெரியார், இதை ஊழ் எனக் கூறுவர். இவ்வூழ், அகலிகையை அவ்வின்பத்தில் ஆழ்த்திவிட்டது. பின்பு, அகலிகை அவ்வின்ப உணர்ச்சியிலிருந்து நீங்கும் காலமும், முனிவர் அவண் போந்த காலமும் ஒரே நேரமாய் அமைந்தன.

ஆனால், தற்காலத்தில் சிலர் ஊழ் என்னும் சொல்லையும், அதைச் சொல்லுபவரையும் வெறுக்

கின்றனர். அங்ஙனம் வெறுக்கின்றவரும் தாம் மேற்கொண்ட காரியம் முடியாதபோது, Fate என ஆங்கிலத்தில் கூறுகின்றனர். Fate என்பதற்கு 'விதி' என்பது தமிழ்ப் பொருள். அவ்விதியைத் தானே தமிழ் நூல்கள் ஊழ் எனக் கூறுகின்றன? தாம் மேற்கொண்ட காரியத்தில் முயலாமலும், தம்மால் தடுக்கக் கூடியவைகளையும் தடுக்காமலும் இருந்து, கெடுதி நேருங்கால் ஊழின்மேல் பழி சுமத்துபவரைப் பழித்தல் தகுதியுடையதேயன்றி, தம்மால் தடுக்க முடியாத காரியத்தில் தம்மைத் தாம் அறியாமலே ஆழ்ந்திருப்பவரைப் பிழை கூறுதல் பொருத்தமுடையதாகுமா? நடுவுநிலையுடையார் இங்ஙனம் பழி கூறப்புகுவரா? இது நிற்க.

அகலிகையின் தூய தன்மை

இனி, நம் ஆராய்ச்சிக்குத் தலைவியாகிய அகலிகையைப்பற்றிக் கம்பர் இயம்புவது யாது எனக் காண்போம்:

"புக்கவ ளோடுங் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்கவுண் டிருந்த லோடும் உணர்ந்தனள்; உணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்ப"

— அகலிகைப் படலம், 76.

எனுங் கவி, இந்திரன் வேற்று வடிவங்கொண்டு சென்று, அவ்வகலிகையுடன் காம இன்பமாகிய புதிய வாசனை பொருந்திய மதுவின் தேறலை ஒருநிகராகக் (இருவரும்) கலந்து துய்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில், அகலிகை, "இவர் நம் கணவர் அல்லர்," என உணர்ந்தாள். அங்ஙனம் உணர்ந்த பின்னும், "இது நம் பெண்மைக்குத் தகுதியுடையதன்று," எனக் கருதாமல், அவ்வின்

பத்திலேயே ஆழ்ந்திருந்தாள் எனப் பொருள் படுகிறது.

இக்கவியில், "காமப் புது மணம் மதுவின்றேறல் ஒக்க உண்டிருத்தலோடும் உணர்ந்தனள்," என்னும் சொற்றொடர், வேட்கை மிகுதியினுல் உண்டாகிய அப்புதிய இன்பமானது, தெளிந்த மதுவை ஒத்திருந்தது. அதை மிகுந்த இன்பத்துடன் துய்த்துக்கொண்டிருக்கும் போது, அகலிகை உணர்ந்தாள்," எனப் பொருள்படுதல் காணலாம்.

இங்கு அமைந்துள்ள 'மதுவின் தேறல்' என்னும் உவமானம் மிகப் பொருத்தமானதாகும். மிக்க சுவையுடையதும் சிறு துரும்பும் இல்லாமல் வடித்தெடுக்கப்பட்டதுமான தெளிந்த தேனை ஒருவன் நாவில் விட்டுச் சுவைத்துக்கொண்டு அதன் இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறுன்; அவ்வமயம், அஃது அவன் உடலிற்கு ஆகாது என அறிகிறுன். அறியினும், அதை உடனே துப்பிவிட அவனுல் இயலுமா? துப்ப வேண்டும் என அவன் நினைக்கினும், அச்சுவை அங்ஙனம் செய்ய அவனுக்கு இடந்தருமா? அந்நினைப்பு முற்றுப்பெறுதற்கு முன், எங்ஙனமோ அதைச் சுவைத்து விழுங்கிவிடுவான். இஃது இயற்கையாகும். அகலிகையின் அப்போதைய நிலையை யாவருக்கும் நன்கு விளக்குதற்பொருட்டே, கம்பர் அகலிகை துய்த்த காமப் புது மணத்தை, மதுவின் தேறலுக்கு ஒப்புப்படுத்திக் காட்டுகிருர். அங்ஙனமாயின், உவமைக்குக் கூறிய இலக்கணம் உவமேயமாகிய இதற்கும் ஒக்குமன்றே? இம்முறையில் அவ்வின்பத்தின் குற்

றத்தை உணர்ந்ததும் அதிலிருந்து நீங்க இவளுக்கு மட்டும் எங்ஙனம் முடியும்? துப்பவேண்டுமென நினைப்பதற்குள், அத்தேன் உட்சென்றுவிடுதல் போன்று, அவள் அத்தீய செயலிலிருந்து தன்னை நீக்கிக்கொள்ள நினைப்பதற்குள் அச்செயல் முடிந்துவிடுமே! ஏழை அகலிகை என்ன செய்ய முடியும்?

அதன்றியும், இன்னோர் அரிய பொருளும் இவ் வுவமானத்தில் கிடைக்கிறது. மது எத்தகையது? உண்டாரை மயங்கச் செய்வதன்றோ? அதை உண்டு மயங்கினவன், அது தன் உடலுக்கு ஆகும் ஆகாது என்பதை அறிதல் எவ்வாறு? அதை அறியவே இடமில்லாதபோது அதிலிருந்து நீங்குதல் யாங்ஙனம் கைகூடும்?

ஒரு காரியத்தைத் தக்கது தகாதது என ஆராய்ந்து பார்த்தல், தன்னைத்தான் அறிந்த காலத்திலேயே அன்றோ இயல்வது? தன்னைத்தான் மறந்திருக்குங்கால் ஆராய்ந்தறிதற்கும் இடமேது? இக் குறிப்பை வெளிப்படுத்தவே கம்பர், "ஓராள், தாழ்ந்தனள்," என்னும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அஃதாவது, 'அகலிகை ஆராய்ந்தறிய முடியாத நிலையில் இருந்தாள். அதனால், அவள் அதற்கு உடன்பட்டிருக்க வேண்டியதாயிற்று,' என்பது கருத்து.

ஒருவருக்குப் புண்ணுள்ள இடத்தில் தினவு ஏற்படுகிறது. அவர் அங்குச் சொறியத் தொடங்குகிறார். அதனால், என்றும் காணாத இன்பம் தோன்றுகிறது. அவ்வின்பத்தில் ஈடுபட்டு அதைத்

தேய்த்துக்கொண்டே இருக்கிறார். அச்சமயம், 'இச்செயல் நம் புண்ணை அதிகப்படுத்திக் கெடுதியை யுண்டாக்கும்,' என ஓர்ந்து பார்த்தற்கோ, அன்றி அச்சொறிதலை நிறுத்தற்கோ அவர்க்கு இடந் தருமா? அப்போதுண்டாகும் அவ்வின்பத்தி லேயே அல்லவா அவர் மயங்கிக் கிடப்பார்? அவ் வின்பத்தின் அளவு குறைந்த பின்பன்றோ, அங் ஙனம் சொறிந்ததனால் ஏற்படப் போகும் துன் பத்தை அவர் உற்று நோக்குவது? இங்ஙனம் பின் வரும் தீமையை ஓராது மயங்கிக் கிடத்தல் இன்பத் தின் காரியமெனக் கொள்ள வேண்டுமேயன்றி, அச்செயலைச் செய்தவரை எங்ஙனம் குறை கூறு வது? சில பொருள்களால் உண்டாகும் மயக்கம் எங்ஙனம் மக்களை ஒன்றும் தெரியாது மயங்கிக் கிடக்குமாறு செய்துவிடுகின்றதோ, அங்ஙனமே இவ்வின்ப மயக்கமும் அயல் தெரியாதவாறு மக் களை மயக்கத்தில் ஆழ்த்திவிடுகிறது. இங்கு மயக் கம் உண்டாக்கிய பொருள்களிடம் குறைகூறுகின் றோமேயல்லாமல், மயக்கமுற்றவர்களிடம் பழி சாற்றுகின்றோமா? இல்லையே! இத்தன்மையைத் தான் இங்கு அகலிகையுற்ற இன்ப மயக்கத்திற் கும் கொள்ளுதல் வேண்டும்.

எங்ஙனமேனும் இது குற்றச் செயல்தானே? மயக்கத்தினால் ஒருவன் நஞ்சுண்ணில், அஃது அவ னைக் கொல்லாமல் விடுமா? தன்னை அறியாத நிலை யில் ஒருவன் ஒன்றைக் களவாடினால், அவன் கள் வன் அல்லன் என அவனைத் தண்டியாமல் மன் னித்துவிடுவரா? அப்பாவந்தான் அவனைச் சாரா மல் போகுமா? போவது இல்லையே!

உலகப் போக்கு இங்ஙனமிருக்க, அகலிகையை மட்டும் குற்றமற்றவள் என்றும், கற்பிழவாதவள் என்றும் கூறுதல் யாங்ஙனம்? மேற்கூறிய சான்றுகள் இரண்டும் அகலிகைச் செயலில் முற்றும் பொருத்தமானவைகள் அல்ல. இன்பத்தில் தோய்ந்திருந்த அகலிகை தன்னைத்தான் மறந்து அயல் அறியாதவளாய் இருந்தனளேயல்லாமல், மற்றொன்றைச் செய்ய அவள் முற்படவில்லையே! நஞ்சுண்டவரையும், களவாடியவரையும் தம்மைத் தாம் அறியாத நிலையில் கிடந்தவர் எனக் கூறுதல் யாங்ஙனம்? மயங்கிக் கிடப்பவரிடம் வேறு காரியம் நிகழ்வது எவ்வாறு?

அங்ஙனம் அகலிகை குற்றமற்றவளாயின், "இந்திரன் அகலிகை இவர்களுடைய நிலையைத் தம் உயர் ஞானத்தினால் அறிந்து வந்த முனிவர், ஏன் இவளைக் கல்லாகுமாறு சபித்தல் வேண்டும்? ஏன் இவளும் அவ்வுருவைப் பெற்றுச் சில்லாண்டுகள் இருத்தல் வேண்டும்?" என்னும் ஐயப்பாடுகள் தோன்றலாம். சிலருக்குச் சில போது, தம்மை அறியாமலே செய்த குற்றத்திற்கும் தண்டனை கிடைப்பதைக் காண்கின்றோம்.

ஒருகால் இரு கண்களும் தெரியாத தன் பெற்றோருக்காக ஒரு சுனையில் குடத்தில் நீர் முகந்து கொண்டிருந்த ஓர் அந்தணக் காளையைத் தசரதன் யானையெனக் கருதி அம்பெய்து கொன்றான். அப்பெற்றோர், "எங்களைப் போன்றே நீயும் உன் மூப்புப் பருவத்தில் உன் பிள்ளையைப் பிரிந்து, அத்துக்கத்தினால் உயிர் துறக்கக் கடவாய்!" எனத்

தசரதனைச் சபித்தனர். அச்சாபத்தைத் தசரதன் அனுபவித்தே முடித்தான் என்னும் இவ்வரலாறே இதற்குத்தக்க சான்றாகும். இம்முறையையே அக லிகையிடமும் கொள்ள வேண்டும். இன்னும், தசரத னுடைய குற்றமற்ற தன்மையை நோக்கித்தான், அப்பெற்றோர், தசரதன் தம்மைப் போன்று மகனை இழக்க வேண்டுமெனக் கூறாமல், "பிரிய வேண்டும்," எனச் செப்பினர். அங்ஙனமே அகலி கைக்கும் சில்லாண்டுகளில், அவண் போதரவிருக் கும் ஸ்ரீராமபிரான் பாததூளியினால் பெண்ணுருவம் அடையுமாறு சாபவிடையும் முனிவரிடமிருந்து கிடைத்தது. இதனாலும் இவள் குற்றமற்றவள் என்பது புலப்படவில்லையா?

சான்றோர், தீங்கெனத் தெரிந்தும் சில கார ணங்கருதி அதைச் செய்பவரையும், ஆராய்ந்து பார்த்தற்கு நேரமும் அறிவும் இருந்தும் ஓராது செய்பவரையுமே வெறுக்கின்றனர். ஆனால், இவை இரண்டும் அற்றவர் ஒரு தீங்கு புரியுங்கால், அஃது அறியாமையினாலும் ஊழினாலும் நிகழ்ந்ததெனா எண்ணி அவர்களுக்காக இரக்கங்கொள்கின்றனர். அதிலும் ஊழினால் ஏற்பட்ட ஒன்றை எவ்வகையி னும் தடுத்துக்கொள்ள முடியாது என்பது அவர் கள் எண்ணம். இது நிற்க.

இனி முனிவர் சினத்தினால் கல்லுருவாய்க் கிடந்த அகலிகை பெண்ணுருவானது யாங்ஙனம் என்பதை நோக்குவோம்: ஸ்ரீராமபிரான் தம்பியுட னும், விசுவாமித்திர முனிவருடனும் மிதிலையின் புறமதிலை வந்தடைகின்றார். அவண் உயர்ந்திருந்த

கருங்கல்லின்மேல், அவர் திருவடித்துகள் படிகின்றது. உடனே, தத்துவஞானம் பெற்றவன் தன் அறியாமை நீங்கி எம்பெருமான் திருவடியை அடைதல் போன்று, அகலிகை கல்லுரு நீங்கிப் பழைய உருவத்தைப் பெற்று, மின்னற்கொடி போன்று நாணத்தினால் ஒரு புறத்தே ஒதுங்கி நிற்கின்றாள். இக்காட்சி, ஸ்ரீராமபிரானுக்குப் பெருவியப்பை உண்டாக்கிற்று. அவர், முனிவரை நோக்கி, "இவள் யார்?" என வினவுகின்றார்.

விசுவாமித்திர முனிவர் அகலிகையை ஸ்ரீராமபிரானுக்கு அறிமுகப்படுத்தும் இயல்பை நோக்குதல் வேண்டும்: முன் இந்திரன் வருகின்றான். பின் முனிவர் போதருகின்றார். மூன்றாவது அகலிகை தோன்றுகின்றாள். இம்மூவருக்கும் மூன்று அடைமொழிகள் அமைகின்றன. அவை கொடுந்தொழிலையுடைய இந்திரன், ஆயிரங்கண்களை அளித்த முனிவர், அம்முனிவருடைய பன்னி (பத்தினி) யாகிய அகலிகை என்பன. இந்திரன், முனிவர் ஆகிய இவர் இருவருக்கும் கொடுத்த அடைமொழிகள் இவர்கள் செய்த செயல்களையும் தன்மைகளையும் ஒருவாறு தெரிவிக்கின்றன. ஆனால், அகலிகைக்குத் தந்த அடைமொழியினால், இவள் செய்த செயல் இன்னதெனத் தெரிந்திலது. அன்றியும், அப்போதும் இவளைக் கௌதமருடைய பத்தினி என்றுதான் செப்புகின்றார். இதனால் விளங்குவது யாது? இந்நிலையிலும் இவளுடைய பத்தினித்

துவத்திற்குப் பழுது ஏற்படவில்லை என்பதன்றோ ?

"தீவினை நயந்து செய்த தேவர்கோன் தனக்குச் செங்கண்
ஆயிர மளித்தோன் பன்னி அகலிகை யாகு மென்றான்."

— அகலிகைப்படலம், 72.

என்பது கம்பர் கூற்று.

அவ்வமயம் ஸ்ரீராமபிரான் கற்பாறை உரு நீங்கிப்போந்த அகலிகையை நோக்குகின்றார். அவருக்கு வியப்புத் தோன்றுகின்றது. "ஈதென்ன உலகியற்கை! இங்ஙனமும் ஒரு செயல் நிகழ்வதுண்டோ! இவளைக் காணில் குற்றமற்றவளாகவும், யாவருக்கும் அன்னை நிலையில் இருப்பவளாகவும் காணப்படுகின்றனளே! கல்லாக மாறும் இக் கடுந்தண்டனை இவளுக்கு எங்ஙனம் பலித்ததோ! இஃது இவள் முற்பிறவியில் இழைத்த தீவினையின் தொடர்போ? அன்றி, இப்பிறவியிலேயே நடுவில் ஏற்பட்ட பாவத்தின் தன்மையோ? இதைக் கூறியருளும்," என முனிவரைப் பணிவுடன் வினவினார்.

ஸ்ரீராமபிரான் அகலிகையைப்பற்றி ஒன்றும் அறியாதபோது, அவள் உருவையும் திருவையும் நோக்கி, அவள் குற்றமற்றவள் எனக் கருதியிருக்கக்கூடும்! அவள் செய்தியை முற்றும் அறிந்த பின்னர், அங்ஙனம் செப்புதற்கோ, அன்றிக் கருதுதற்கோ இடமளிக்குமா? ஒருபோதும் இயலாது எனச் சிலர் பகரலாம்.

ஸ்ரீராமபிரான் அகலிகையைக் குறித்துக் குற்றமற்ற விசுவாமித்திரர் இயம்பிய செய்திகள் யாவற்றையும் மனத்திருத்தி, ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவிற்கு வருகின்றூர். இவளைப்பற்றி ஒன்றும் தெரியாதபோது, “இங்ஙனம் கற்பாறையாதற்கு இவள் யாதோ ஒரு பெருங்குற்றத்தைச் செய்திருத்தல் வேண்டும் என்னும் எண்ணம் இவர் மனத்தில் இருந்தது போலும்! ஆதலின், அங்கு இவளைத் தம் அன்னை எனப் பகராமல், பொதுவாக அன்னை என்றூர். செய்தியை ஊன்றி நோக்கிய பின்பு, “அஃது இவள் மனமறிந்து செய்த குற்றமன்று; அது குற்றத்தின்பாற்பட்டதும் அன்று; ஊழ்வினையே இவளைக் கல்லாக மாற்றியது; அதனுல், புடமிட்ட தங்கம் போல இவள் நெஞ்சறியாத் தீவினைகளும் நீங்கி ஒளிருகின்றூள்,” என்னும் கருத்துகள் தோன்றியிருத்தல் வேண்டும். ஆதலினுற்றுன், இங்குத் தாயே என்கிறூர். அன்னை என்னும் அச்சொல்லை உறுதிப்படுத்துதற்பொருட்டு, இவள் திருவடிகளிலும் விழுந்து வணங்குகிறூர். கம்பர், அகலிகையின் அடியைப் பொன்னடி என்கிறூர். பொன் என்பதற்கு அழகு எனப் பொருள் கொள்வதைக் காட்டிலும், உயர்ந்த தூய என்னும் பொருளைக் கொள்ளுதல் இங்கு மிக்க பொருத்தமுடையதாகும். இதனுல், அகலிகையின் திருவடிகள் உயர்ந்த தூய்மை வாய்ந்தவை என அறிந்தோம். எத்தகையவர் திருவடிகளில் இச்சிறப்பு அமைந்திருக்கும்? குற்றமற்றவரும், தம்மை வணங்குகிறவர்களுக்கு

நன்மை அளிப்பவருமான பெரியவர் திருவடிகளி லேயே அல்லவா? இஃது அகலிகைக்குக் கவியரச ராகிய கம்பர் ஈயும் விருதாகும்.

ஸ்ரீராமபிரான் இத்துடன் நின்ருர் இல்லை. அகலிகையை நோக்கி, "அன்னய், உங்களுடைய தூயவாழ்க்கையின் இடையில் நேர்ந்த துன் பத்தை நினைத்து நினைத்து வருந்த வேண்டா! அதை முற்றும் மறந்துவிடு! சந்திர சூரியர்களை இராகு கேதுக்கள் வருத்துதல் போன்று, இஃ தொரு காலப்போக்காகும். இஃது உலக இயல்பு. இனி மிக்க தவசீலராகிய கௌதமருக்கு உன்மீது அருளுண்டாகுமாறு அவரை வழிபட்டு வாழ்க்கை நடத்துவாயாக!" என மனச் சாந்தியும் நீதியும் நிறைந்த சொற்களைச் சொல்லி அவள் மனத்தைத் தேற்றுகின்ருர்.

அகலிகை குற்றமற்றவள் - பழுதில்லாதவள் - மனமாசொழித்தவள் - கற்புடையவள் என ஸ்ரீராம பிரான் மனத்தில் தோன்றியிருந்தாலொழிய, அறி விலும், ஆண்மையிலும், ஆராய்ச்சியிலும், உயர் நிலை வாய்ந்த அவர், இவள் காலில் விழுந்து வணங்குவாரா? இவள் தூயவள் என்னும் நினைப் புத்தானே, அவரை இங்ஙனம் செய்யத் தூண் டிற்று! இஃதே இவள் குற்றமற்ற நிலையைக் காட்ட வில்லையா?

இங்ஙனம் இவள் குற்றமற்றவளாயின், முனி வர் அப்போதுண்டான கோபத்தினல் இவளுக்குச்

சாபத்தை அளித்திருப்பினும், பின்பேனும், இவள் தூயதன்மை அவருக்குப் புலனாயிராதா? அங்ஙன மாயின், அவருக்கு இவள்மேல் அருளுண்டாதற் குத் தடை யாது? இங்கு ஸ்ரீராமபிரான் அக லிகைக்கு, 'நீ முனிவரது அருளைப் பெறவேண்டும்,' என அறிவுரை பகருதல் ஏன்? ஒருவரை விட்டு ஒருவர் சின்னாட்கள் பிரிந்திருக்குங்கால், பண் டைய அன்பு சிறிது குறையுமன்றோ! அவ்வன் பின் குறைவினால் அருளும் குறைவுபடாதோ! அக் குறைந்த அருள் நிறைவுபடுதற்பொருட்டே இங்கு அகலிகைக்கு முனிவரை வழிபடுமாறு அறி வுறுத்துகிறார்.

இன்னும், ஸ்ரீராமபிரான், அகலிகையைப் பார்த்து, "முன் நீ இழைத்த குறைவினையும், முனிவர் உனக்குத் தந்த தண்டனையையும் எண்ணி எண்ணி மனத்துயர் கொள்ளாதே," என்கிறார். அவற்றை அகலிகை முற்றும் மறந்துவிட வேண்டுமென்பது அவர் கருத்து. ஏன்? அவற்றைக் கருதுவாளாயின், "நம் விதி இப்படியா இருந்தது!" என்பதால் மனச் சோர்வும், "நம் நாயகர் இப்போதும் நம்மை எவ் விதம் நினைத்துள்ளனரோ! ஒரு முறை பிளவுபட்ட நெஞ்சம் இனிப் பழமைபோலக் கூடுமா!" என்னும் மனத்தாங்கலும் உண்டாகி, இவள் வாழ்க்கையின் இன்பத்தைக் குறைக்குமல்லவா? ஆதலினாற்றான், இந்நீதியை இவளுக்குப் போதிக்கிறார்.

ஸ்ரீராமபிரான் அகலிகையைத் தனியே விட் டுச் சென்றாரில்லை. அவ்வாறு செய்வதற்கும்

அவர் மனமெழவில்லை. ஆதலின், உடன் கூட்டிச் சென்றார்போலும்! நற்குணங்களிலும் கொடையிலும் உயர்ந்த இராமர், கௌதம முனிவரது தாமரையைப்போன்ற பாதங்களை வணங்கி, அவரை வலமாகச் சுற்றி, வாயாரப் போற்றினார்; பழுதற்றவளும், கற்புடையவளும், தெய்வப் பெண் போன்றவளும், தூயவளுமான அகலிகையை அம் முனிவரிடம் ஒப்புவித்தார். இது நிற்க.

இனி, விசுவாமித்திரர் அகலிகையைப்பற்றிக் கொள்ளும் எண்ணம் யாது எனக் காண்போம்: அகலிகையைப்பற்றி ஸ்ரீ ராமருக்குத் தெரிவிக்குங்கால், "எக்காலத்திலும் உலகு முழுவதிலும் அழியாமல் நிலைத்திருக்கும்படியான பெரிய நிந்தையைச் சுமந்தவளாகிய அகலிகை, முனிவரைப் பார்த்தவுடன் அஞ்சி நின்றாள்," என்கிறார்.

> "......................வெருவி மாயா
> நிரந்தரம் உலகி னிற்கு நெடும்பழி பூண்டாள் என்றான்."
>
> — **அகலிகைப்படலம், 77.**

என்பது காண்க.

இங்குப் பழி என்பதற்கு நிந்தை எனவும், பூண்டாள் என்பதற்குச் சுமந்தாள் எனவும் பொருள் கொள்ளுதல் வேண்டும். ஆக, இச்சொற்றொடர், நிந்தையைத் தாங்கி நின்றவள் எனப் பொருள்படும். அங்ஙனமன்றி, "நிந்தையான செயலைச் செய்தவள், நிந்தையான சொற்களைப் பெற்றவள்," என ஏன் பொருள் கொள்ளுதல் கூடாது எனச் சிலர் வினவலாம். "பழி" என்னும் சொல்

லோடு வேறொரு சொல்லையும் கலவாமல் தனித்தும், பெற்றாள் எனப் பகராமல், 'பூண்டாள்' எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டையும் (பழி பூண்டாள் எனப்) பொருத்தி நோக்குங்கால், நிந்தையைத் தாங்கி நின்றவள் எனவே பொருள்படும். இங்ஙனம் இயம்புவதே பொருத்தமுடையதாகும். இதனால், அறியப்படுவது யாது? அகலிகை அத்தீமையைத் தெரிந்தும் மனம் பொருந்தியும் செய்தவளல்லள். அங்ஙனமிருப்பினும், இவள் பண்டைய வினை இந்நிந்தையைச் சுமக்கும்படி நேர்ந்தது என்பதேயாகும்.

பின்பு, விசுவாமித்திரரும், கல்லுருமாறி நின்ற அகலிகையைக் கௌதமமுனிவரிடம் ஒப்புவித்தல் வேண்டுமென்றும், இவள் மாசற்ற தன்மையை அவருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும், அதுவே தாம் அவ்வமயம் செய்யவேண்டிய இன்றியமையாத கடப்பாடு என்றும் நினைக்கின்றார். கௌதமரோ, தவத்தில் ஊன்றி நின்றவர்—ஆன்ம உய்விலேயே ஆர்வங்கொண்டவர்—மற்றவர் மனப்பான்மையைப் பகுத்தறிபவர். இத்தகையவரின் இயல்பிற்கேற்ப, "எச்சொற்களால் கூறின் அகலிகையின் குற்றமற்ற தன்மை வெளிப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவாள்?" என்பதை ஆய்ந்தறிந்த விசுவாமித்திரர், முனிவரை நோக்கி, "மனத்தொடு பொருந்திய குற்றமிழைக்காத இவளை நீ ஏற்றுக்கொள்க," என்கின்றார்.

இதனால், பெறப்படுவது யாது? "இவளிடம் குற்றம் உள்ளது. ஆனால், அக்குற்றம் மனமறியச்

செய்ததன்று; தன்னைத்தான் அறியாத நிலையில் நிகழ்ந்ததொன்று; சிறிது அறிவு தோன்றிய பின்னும் அதிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள முடியாத தன்மையில் நடந்ததாகும். ஆதலின், இத்தகையவளை எல்லாம் அறிந்த நீ அன்புடன் அழைத்துக்கொள்வாய்,'' எனக் கூறுகின்றார் என்பது.

இதைச் செவியேற்ற கௌதம முனிவர், ஏதேனும் தடை கூறினரா? தடைகூற யாருக்குத்தான் இயலும்! இம்முறையில் நான்முகனுக்கு ஒப்பானவரும், முக்காலத்தையும் உணர்ந்தவரும், உண்மை தெரிந்தவருமாகிய முனிவர் எங்ஙனம் அகலிகை மாட்டுப் பழியைச் சுமத்தித் தள்ள முடியும்? ஆதலின், விசுவாமித்திரர் கூற்றிற்கு இணங்கிய கௌதமர் அகலிகையை முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டார்.

இங்ஙனம் ஸ்ரீராமபிரானும் விசுவாமித்திரரும் அகலிகை குற்றமற்றவள் எனச் சான்றுகள் பகர, கௌதம முனிவர், அவர்தம் சீரிய சொற்களை ஏற்று அகலிகையோடு பழையபடியே வாழ்க்கையை நடத்தி வந்தார். அங்ஙனமாயின், அகலிகை கற்பிழந்தவள் ஆதல் யாங்ஙனம்? சில போது சிலருக்கு ஊழ்வினையால் சில குற்றங்களும், அவற்றால் வீணான பழியும் உண்டாதல் உண்டு. அவற்றை அறிஞர் ஆய்ந்து பார்த்து ஒரு முடிவிற்கு வரவேண்டுமேயன்றி, மேலோடு அதை ஒப்புக் கொள்ளுதல் ஒருகாலும் தகுதியுடையதன்று. அங்ஙனம் செய்தல் பழிக்கும் பாவத்திற்கும் இடமாகும்.

இங்ஙனம் அகலிகை குற்றமற்றவளாய், கற்பிழவாதவளாய் இருத்தலினுற்றான், கற்புத்திலகங்கள் ஐவருள் இவளும் ஒருத்தியாக வைத்தெண்ணப்படுகின்றாள். இவ்வாறு இவளை உயர் நிலையில் வைத்த நம் பெரியார், ஆராய்ச்சியற்றவர் அல்லர். அவர்களும் பல விதத்தில் ஆய்ந்து பார்த்துதான் இம்முடிவிற்கு வந்திருப்பார்கள் என்பது திண்ணம்! இத்தகைய பெட்பு வாய்ந்த கற்புத்திலகத்தை நாம் குற்றம் கூறுவது நலமுடையதாகுமா? இச்செயல் நம்மைக் குற்றத்தின்பாற்படுத்துமன்றோ? ஆதலின், 'அகலிகை கற்பிழந்தவள் அல்லள்; ஓர் உத்தமப் பெண்,' என இவளிடம் மதிப்புக்கொண்டு இவள் தூய்மையை மனத்திருத்தி நன்மை பெறுவோமாக.

இதுகாறும் நாம் அகலிகையைப்பற்றி ஆய்ந்ததில், இவளுடைய குலம், வாழ்க்கை, செயல், இயல்பு முதலியன இவள் தீச்செயலைச் செய்தற்கு இடந்தாராவென யூகிக்கவேண்டி யிருக்கின்றது என்றும், கம்பர், அகலிகை இந்திரனோடு கலந்திருந்த சமயத்தில் அதிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள முடியாத நிலையில் மயங்கி இருந்தனள் எனப் பகர்கின்றார் என்றும், ஸ்ரீராமபிரான், 'அகலிகை உலகிற்குத் தாயன்னவள்; எனக்கும் தாயாவாள்,' என இயம்பி, இவள் பாதங்களில் விழுந்து வணங்கியது மட்டுமேயன்றி, இவளைக் குறித்து முனிவரிடம் செப்புங்கால், "மாசறு கற்பின் மிக்க அணங்கு" எனப் பகருகின்றனர் என்றும், விசுவாமித்திரரோ, "வீணை பழி பூண்டவள்" என்றும்,

"நெஞ்சினல் பிழையிலாதவள்" என்றும் கூறுகிறார் என்றும், சான்றோர் இவளைப் பஞ்ச கன்னிகைகளின் குழுவிற் சேர்த்துள்ளார்கள் என்றும், முக்காலத்தையும் உணர்ந்தவரும், தூய்மை உடையவரும், நான்முகனுக்கு ஒப்பானவருமான கௌதம முனிவரோ, மனத்தின்கண் யாதொரு கலக்கமுமின்றியே அகலிகையைத் தம் இல்லாளாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கை நடத்தினர் என்றும், இவற்றால் நம் யுத்தியைக்கொண்டு மட்டுமன்றி, பல சான்றோரின் கருத்துகளையும் நோக்கியே "அகலிகை கற்பிழந்தவள் அல்லள் தூய்மை தன்மை வாய்ந்தவள்" என்பதைத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது என்றும் தெள்ளத் தெளிய அறிந்துகொண்டோம்.